# உதயன்

பக்கங்கள்

விலை ரூபா 20.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 102 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 24 வெள்ளிக்கிழமை (08/03/2013) UTHAYAN - A Lively National Tamil Daily


## 15 ஆயிரம் சிங்களக் குடும்பங்களை வடக்கில் குடியேற்றுவதில் அரசு திடம்

### அவர்களுக்கு வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 8

வடக்கில் 15 ஆயிரம் சிங்கள மக்களை குடியேற்றவுள்ளதுடன், குடியேறவுள்ள மக்களுக்கு வீடுகள் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருவதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண அபிவிருத்திக்கு வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் நிதியுதவியைப் பயன்படுத்தியே இவை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதுவரின் இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட வடமாகாண அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் செயலாளர் எஸ்.பி.திவாரத்ன, மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஜானக சுகததாச ஆகிய இருவருமே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

உள்நாட்டுப் போரின்

பார்க்க பக்கம் 04

## அமெரிக்காவுடன் பேசவே மாட்டோம்

### பிரேரணை குறித்து கெஹலிய

கொழும்பு, மார்ச் 8

ஜெனிவா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டு வரப்படவுள்ள பிரேரணை தொடர்பாக அமெரிக்காவுடன் பேசமாட்டோம். அதற்கான அதிகாரமும் இல்லையென சவால் விடும் வகையில் தெரிவித்துள்ளார் அமைச்சரவைப் பேச்சாளரான ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.

நேற்று ஊடகத்துறை அமைச்சில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்

பார்க்க பக்கம் 04

### ஈழத்தில் நிகழ்ந்த இனக்கொலைகளுக்காக

# இலங்கையை இந்தியா தட்டிக்கேட்க வேண்டும்

### சர்வதேச விசாரணைக்கு டில்லி நாடாளுமன்றில் வலியுறுத்து

புதுடில்லி, மார்ச் 8

இலங்கையில் மிகப்பெரும் இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டுள்ளது. இந்த ஈழத் தமிழர் படுகொலைக்கு இந்தியாவும் உடந்தையாகவே இருந்துள்ளது. எனவே இது குறித்து இலங்கை அரசைத் தட்டிக் கேட்கும் - கண்டிக்கும் பொறுப்பும் கடமையும் இந்தியாவுக்கு உள்ளது. அத்துடன் படுகொலை குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட்டுக் குற்றம் புரிந்தோர் தண்டிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் இந்திய முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் பா.ஜ.கவின் மூத்த தலைவருமான யஸ்வந்த் சின்ஹா.

இந்திய நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஈழத் தமிழர் தொடர்பான சிறப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை

பார்க்க பக்கம் 04



### உள்ளே....


2 தினங்களில் ஹைதராபாத்தில் மீண்டும் குண்டு வெடிக்கலாம் 8

வாலாட்டும் வடகொரியாவுக்கு தகுந்த பதிலடி கொடுப்போம் 9

பெண்கள் மீதான வன்முறையற்ற புதிய உலகு மலரட்டும்...... 13

ஷேவாக் 'அவுட்' 23


### இந்துப் பாடசாலைகளுக்கு விடுமுறை

கொழும்பு, மார்ச் 8

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நாட்டிலுள்ள அனைத்து இந்துப் பாடசாலைகளுக்கும் எதிர்வரும் 11 ஆம் திகதி விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கையை கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன மேற்கொண்டுள்ளார் என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் குறித்த அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

பார்க்க பக்கம் 04

## அமைச்சர் குர்ஷித் நழுவல் பதில்; தமிழக எம்.பிக்கள் வெளிநடப்பு

புதுடில்லி, மார்ச் 8

இலங்கை விவகாரம் தொடர்பில் இந்திய நாடாளுமன்றில் நேற்று வியாழக்கிழமை கடுமையான வாதப்பிரதி விவாதங்கள் இடம்பெற்ற நிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சரின் கருத்து திருப்தியளிக்கவில்லை எனக்கூறி, தி.மு.க, அ.தி.மு.க. என அனைத்து கட்சித் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட்டாக வெளிநடப்புச் செய்தனர்.

நாடாளுமன்றில் நேற்றுக் காலை முதல் பல்வேறு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இலங்கை மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களைச் சுட்டிக்காட்டி இந்திய அரசு கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

இந்த விவாதத்தின் முடிவில் பதிலளித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், இலங்கையில் தமிழர்கள் சம உரிமையுடன் வாழ வகை செய்வோம். 13ஆவது அரசியல் திருத்தத்தைத் தாண்டியும் கூடுதலான அதிகாரங்களைப் பெற்றுத் தருவோம். இலங்கை அயல் நாடு. அந்த நாட்டின் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான ஆதாரங்கள் வெளியாகி இருக்கின்றன" என்றார்.

அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானம் பற்றி இன்னமும் முடிவெடுக்கவில்லை. முடி

பார்க்க பக்கம் 04

## தமிழீழமே ஒரே தீர்வு

புதுடில்லி, மார்ச் 8

''இலங்கை விவகாரத்தில் இந்திய அரசு தற்போதாவது தெளிவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். நாங்கள் தமிழீழம் கோருகிறோம். அது தி.மு.கவின் நிலைப்பாடு மட்டுமல்ல, அனைத்துக் கட்சிகளின் நிலைப்பாடும் அதுவே. நாங்கள் ஒருமித்த குரலில் தமிழீழத்தைத் தவிர வேறு தீர்வு இல்லை என்கிறோம்.''

இவ்வாறு இந்திய லோக்சபாவில் தெரிவித்தார் தி.மு.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர் பாலு.

சிரியா, பொஸ்னியா, வடக்கு சூடான் ஆகிய நாடுகளின் ஜனாதிபதிகளுக்கு எதிராகப் போர்க்குற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்போது இலட்சக்கணக்கான தமிழர்களைப் படுகொலை செய்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஏன் போர்க்குற்ற நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்றும் அவர் ஆவேசமாகக் கேள்வியெழுப்பினார்.

இலங்கைத் தமிழர் விவ

பார்க்க பக்கம் 23

## யாழ். குடாநாட்டில் மீண்டும் குடும்பப் பதிவில் சீருடையினர்

### அச்ச நிலையில் மக்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும், குடும்ப உறுப்பினர்களின் விவரங்கள், காணிகளின் விவரங்களை இராணுவச் சீருடையில் வருவோர் வீடு வீடாகச் சென்று திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு கின்றனர் என்று மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

மீண்டும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவது மக்களிடையே அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ். குடாநாட்டில் இராணுவத்தினரால் குடும்ப உறுப்பினர்களின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டன. அத்துடன் குடும்பப் படங்களும் படையினரால் எடுக்கப்பட்டன.

இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டித்த

பார்க்க பக்கம் 04

## இலங்கையில் ஐ.நாவுக்கு சுயாதீன செயற்பாடு தேவை

### கோருகிறது அமெரிக்கப் பிரேரணை

புதுடில்லி, மார்ச் 8

ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணையின் நகலை அமெரிக்கா நேற்று வெளியிட்டுள்ளது. அத்துடன் இராஜதந்திரிகள் மற்றும் சர்வதேசப் பிரதிநிதிகளுக்கு நேற்று மேற்படி நகல் பிரதிகளை அமெரிக்கா அனுப்பியுள்ளதுடன், இன்று ஜெனிவாவில் வெளிநாட்டுத் தூதுவர்கள் அனைவருடனும் முக்கிய சந்திப்பொன்றையும் நடத்தத் தீர்மானித்துள்ளது.

பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் கொலை தொடர்பான படங்கள் வெளிவந்து, இலங்கை மீது போர்க்குற்ற விசாரணை தேவையென சர்வதேச ரீதியில் கோரிக்கைகள் வலுத்துவந்த ஒரு சூழ்நிலையில் போர்க்குற்ற விசாரணை பற்றி நேரடியாக எதுவுமே குறிப்பிடாமல் மேற்படி நகலை அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

ஆனால் இலங்கையில் விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை சுயாதீனமாகச் செயற்பட்டு அறிக்கையை மனித உரிமைகள் பேரவையின் அடுத்த அமர்வில் சமர்ப்பிக்கலா

பார்க்க பக்கம் 04

## ரணில் எதிர்க்கட்சித் தலைவரா?

நாட்டில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பொறுப்புக்கூறும் ஐ.நா உடன்படிக்கையில் கையொப்பமிட்ட இலங்கை அதில் இருந்து விலகிச் செல்வதாலேயே பிரச்சினைகள் ஏற்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். அதற்கு உங்களுடைய பதில் என்னவென்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் ஊடகவியலாளர்கள் நேற்று கேட்டனர்.

''யார்... ரணில் விக்கிரமசிங்க. அவர் எதிர்க்கட்சித் தலைவரா? அவர் அப்படி நடந்து கொள்ளவில்லையே'' என்றார் அமைச்சர்.

அப்படியானால் அவர் அரசின் பக்கமாகவா இருக்கிறார், என்றனர் செய்தியாளர்கள்.

நான் அப்படிக் கூறவில்லையே. எதிர்கட்சித் தலைவர் இல்லை என்பதை அவருடைய அண்மைக்கால நடவடிக்கைகளின் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது என்றார் அமைச்சர்.

அடுத்த பிரதமராக ரணில் நியமிக்கப்படுவாரா? இதை நீங்கள் வரவேற்கின்றீர்களா என்று ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சரிடம் கேட்டார்.

வெளிப்படையாக இங்கே சொல்ல முடியாது. வெளியே வரும் போது இரகசியமாக கூறுகிறேன் எனப் பதில் அளித்தார் அமைச்சர்.

நேற்று நடைபெற்ற வாராந்த ஊடாகவியலாளர் சந்திப்பின் போதே இப்படி ஒரு சுவாரஸ்யமான உரையாடல் இடம் பெற்றது. (த-2)

## ஆசிரியர் இடமாற்றங்களை செயற்படுத்த அவகாசம் தேவை

### ஆணைக்குழு விசாரணையில் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்.8

வடக்கு மாகாண ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில் நேற்று இடம் பெற்ற விசாரணையின் போது, வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மேற்படி இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்குக் கால அவகாசம் கோரப்பட்டுள்ளது.

இதன் பின்பே அடுத்த கட்ட விசாரணையை முன்னெடுக்கலாம் என்று பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆசிரியர்களின் இடமாற்றங்கள் தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளைக்கு கிடைத்த 3 முறைப்பாடுகள் தொடர்பில் நேற்று வியாழக்கிழமை விசாரணை மேற்கொள்ளப்பட்டது. வடக்கு மாகாண இடமாற்றச் சபையின் தலைவரும், வடமாகாண கல்விப் பணிப்பாளருமான எஸ்.செல்வராஜா இதில் கலந்துகொண்டார்.

யாழ்.வலயத்துக்கு இடமாற்றம் வழங்கப்பட வேண்டிய ஆசிரியர்கள் வலிகாமம் வலயத்துக்கு இடமாற்றம் வழங்கப்பட்டமை தொடர்பிலான முறைப்பாட்டில்,

''தற்போது யாழ்.வலயத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு ஆசிரியர் இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**முல்லைத்தீவிலிருந்து இடமாற்றம் கோரி விண்ணப்பித்த 94 ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பில் எந்தவொரு முடிவும் எட்டப்படவில்லை.**

இதன்போது ஏற்படும் வெற்றிடங்களுக்கு 34 ஆசிரியர்களும் நியமிக்கப்படுவர். எதிர்வரும் ஜுலை 31 ஆம் திகதிக்கு முன்னர் இவர்களுக்கு யாழ்.வலயத்தினுள் இடமாற்றம் வழங்கப்படும்'' என்று கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

முல்லைத்தீவிலிருந்து இடமாற்றம் கோரி விண்ணப்பித்த 94 ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பில் எந்தவொரு முடிவும் எட்டப்படவில்லை.

பூநகரி மகாவித்தியாலயத்திலிருந்து இடமாற்றம் கோரி விண்ணப்பித்திருந்த 4 ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படாமை தொடர்பிலான விசாரணையின்போது, அந்த ஆசிரியர்களுக்குத் தனிப்பட்ட சேவையைப் பார்வையிட்டு எதிர்வரும் மார்ச் 28 ஆம் திகதிக்கு முன்னர் பதிலளிப்பதாக கல்விப் பணிப்பாளர் உறுதியளித்தார் என கனகராஜ் தெரிவித்தார். (த-5)

## மாற்று வலுவுள்ள குடும்பத்துக்கு அமைச்சர் நேரில் சென்று உதவி

யாழ்ப்பாணம், மார்ச்.8

அரியாலை உதயபுரத்தில் மாற்று வலுவுடைய குடும்பமொன்றுக்கு, சமூக சேவைகள் அமைச்சர் நேரடியாகச் சென்று இன்று வெள்ளிக்கிழமை உதவிகளை வழங்கவுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அரியாலை உதயபுரம் கிராமத்தில் பழனியாண்டி இராமையா என்பவரின் குடும்பத்திலுள்ள 4 பேரும் மாற்று ஆற்றலுடையவர்களாகவே உள்ளனர். 1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற போரினாலேயே மேற்படி குடும்பத்தவர்கள் பாதிக்கப்பட்டனர்.

குறித்த குடும்பத்தின் வறுமைநிலை தொடர்பில் இலத்திரனியல் ஊடகம் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து குறித்த குடும்பத்துக்கு உதவிகள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சமூக சேவைகள் அமைச்சினால் மாற்று வலுவுடையவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் 3 ஆயிரம் ரூபா நிதி மற்றும் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் என்பவற்றை நேரடியாகக் குறித்து வீட்டுக்குச் சென்று சமூக சேவைகள் அமைச்சர் வழங்கவுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு இன்று காலை வருகை தரும் சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா முற்பகல் 10 மணியளவில் குறித்த வீட்டில் இடம்பெறும் நிகழ்வில் உதவித் தொகையை வழங்கவுள்ளார் எனத் தெரிவித்தார் இமெல்டா. (த-5)

## தபாலகங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச்.8

யாழ்.மாவட்டத்தில் உள்ள தபாலகங்களுக்கு விசேட பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நியமிப்பதற்குத் தபால் திணைக்களம் ஆலோசித்து வருவதாகப் பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் பிரதான முக்கிய தபாலகங்களுக்கே இரவு நேரப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை சேவையில் அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

கைதடி, கோப்பாய் தபாலகங்கள் மீது சில தினங்களுக்கு முன்னர் திருடர்கள் தமது கை வரிசையைக் காட்டியதை அடுத்தே தபாலகங்களுக்குப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நியமிப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டுள்ளது.

மேலும் தபாலகங்களில் திருட்டுக்கள் இடம் பெறாமல் இருப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

முதற் கட்டமாக மாவட்டத்தில் உள்ள பிரதான தபாலகங்களுக்குப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் கூறினார். (த-17)

## இராணுவ வாகனம் மோதி முதியவர் சாவு

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்கு முன்பாக இராணுவ வாகனம் மோதி முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று நண்பகல் இடம் பெற்ற இந்த விபத்தில் செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்த எஸ். நாகூர்கனி (வயது -85) என்ற முதியவரே உயிரிழந்தார்.

செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்கு அலுவலகத் தேவைக்காகச் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது இராணுவ வாகனம் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் சிக்கிய முதியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். (த-400-402)

## சட்டவிரோத மீன்பிடி குறித்து விவரங்கள் திரட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச்.8

யாழ்.மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள், மீன்பிடி முறைகளைப் பாவித்து மீன்பிடிப்பவர்கள் மற்றும், எல்லை தாண்டி வேறு பிரதேசக் கடல் எல்லையினுள் மீன்பிடி மேற்கொள்பவர்கள் தொடர்பான விவரங்களைப் பிரதேச செயலகங்கள் ஊடாகத் திரட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களையும், மீன்பிடி முறைகளையும் பாவித்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவோர் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக யாழ்.மாவட்ட செயலகத்துக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அத்துடன் ஒரு பிரதேச எல்லைக்குள் அத்துமீறிச் சென்று மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் செயற்பாடுகளும் அதிகரித்துச் செல்கின்றன. இதனால் முரண்பாடுகளும் உருவாகி வருகின்றன.

இதனையடுத்து ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவின் ஊடாகவும் மேற்படி தடை செய்யப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பான விவரங்கள் திரட்டப்படுகின்றன.

திரட்டப்படும் விவரங்கள், யாழ்.மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினூடாக அமைச்சுக்கு அனுப்பப்படவுள்ளதாக மேலதிக அரச அதிபர் தெரிவித்தார். (த-5-9)

## பாதுகாப்பு வலயம், நலன்புரி நிலையம் வடபகுதியில் உள்ளமை உறுதியானது

### அரச உயர் அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்

யாழ்ப்பாணம், மார்ச்.8

இலங்கையில் உயர் பாதுகாப்பு வலயங்களோ, நலன்புரி நிலையங்கள் என்றோ எதுவும் இல்லை என்று இலங்கை அரசு திரும்பத் திரும்பக் கூறி வரும் நிலையில், அரசின் உயர்நிலை ஊழியர்கள் இருவர் அது தொடர்பான உண்மை நிலையைப் போட்டுடைத்துள்ளனர்.

வடக்கில் 42 நலன்புரி நிலையங்கள் உள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஜானக சுகததாஸவும், தெல்லிப்பழையில் சிறிய உயர் பாதுகாப்பு வலயம் காணப்படுவதாக, வடமாகாண அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் செயலாளர் எஸ்.பி.திவாரத்னவும் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி வவுனியாவில் இருந்த மனிக்பாம் நலன்புரி நிலையம் மூடப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையில் நலன்புரி நிலையங்கள் என்ற எதுவுமே இல்லை எனவும், அகதிகள் என்று எவருமேயில்லை எனவும் இலங்கை அரசு அறிவித்தது.

ஆனால் அதன் உண்மை நிலையை மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் போட்டுடைத்துள்ளார்.

''தற்போது வடக்கில் 42 நலன்புரி நிலையங்கள் மாத்திரமே உள்ளன. இவை சிறிய கிராமங்கள் என்றே அழைக்கப்படுகின்றன. இங்குள்ள மக்களுக்குத் தேவையான அனைத்து அத்தியாவசிய வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் ஆரம்பத்தில் வெளியேற்றப்பட்ட 400 குடும்பங்களே இங்கு தங்கியுள்ளன'' என்று மீள்குடியேற்ற அமைச்சின் செயலர் இந்தச் செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல, வடக்கு மாகாணத்தில் எந்தவிதமான உயர் பாதுகாப்பு வலயங்களும் இல்லை. இருப்பினும் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் மாத்திரம் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் உள்ளன. 17 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியதாகவே இந்த உயர்பாதுகாப்பு வலயம் அமைந்துள்ளது. இது பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்காகவே அமைக்கப்பட்டுள்ளது என்று வடமாகாண அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் செயலாளர் எஸ்.பி.திவாரத்ன அங்கு கூறியுள்ளார்.

இதன்மூலம் நலன்புரி நிலையங்கள், உயர் பாதுகாப்பு வலயங்கள் எதுவுமே இல்லை என அரசு கூறிவருவது பொய் என்து வெளிப்பட்டுள்ளது. (த-5)

## சட்டவிரோதமாக ஆஸி.சென்ற 30 பேர் கைது

கொழும்பு, மார்ச்.8

சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியா செல்ல முயற்சித்த 30 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

மாத்தறை வெலிகம பிரதேசத்தில் வைத்துக் குறித்த 30 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். படகு ஒன்றின் மூலம் குறித்த நபர்கள் ஆஸ்திரேலியா நோக்கிய பயணத்தை ஆரம்பித்திருந்ததாக கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட அகதிக் கோரிக்கையாளர்கள் காலி துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (த)

## தமிழ்ப் பெண்களை அரசு விதவைகளாக்க முயற்சி

### தமிழ்க் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

வடக்கு, கிழக்கில் குடும்பஸ்தர்களைக் கடத்திவைத்துக்கொண்டு தமிழ்ப் பெண்களை விதவைகளாக்க முயற்சிக்கின்றது அரசு.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இன்று சர்வதேச மகளிர் தினமாகும். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு, கிழக்கில் போரால் கணவனை இழந்த சுமார் 90 ஆயிரத்திற்கு மேற்பட்ட விதவைகள் உள்ளனர். இவர்களுக்கோ அல்லது இவர்களின் பிள்ளைகளின் வளர்ச்சிக்கோ எந்தவிதமான பொருளாதார உதவிகளையும் அரசு வழங்கவில்லை.

அதேவேளை, வடக்கு, கிழக்கில் கணவன்மாரைக் கடத்தி வைத்துக்கொண்டு மனைவிமாரை விதவைகளாக்க இந்த அரசு முயற்சிக்கின்றது. அத்துடன் பலர் கைது செய்யப்பட்டு எங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்று தெரியாத நிலையில் மனைவிமார் ஏக்கத்துடன் வாழ்கின்றனர்.

காணாமல்போனோர் பட்டியலில் இருக்கும் தங்கள் கணவனின் உண்மை நிலையை அறிவிக்கும்படி தமிழ்ப் பெண்கள் பலர் ஒப்பாரி வைத்துக் கதறி அழுகின்றனர்.

அதேவேளை, அரசியல் கைதிகள், முன்னாள் போராளிகள் என்ற பெயரில் குடும்பஸ்தர்கள் பலர் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், இவர்களின் விடுதலை தொடர்பில் அரசு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமல் மௌனமாக இருக்கின்றது என்று தெரிவித்தார் சிவசக்தி ஆனந்தன்.

## மஹிந்த ஜப்பான் பயணம்

கொழும்பு, மார்ச்.8

உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடுத்த வாரம் ஜப்பான் செல்லவுள்ளார்.

ஜப்பான் பிரதமர் சினோஸ் அபியின் அழைப்பினையேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 14ஆம் திகதி அங்கு செல்லவுள்ளார்.

நான்கு தினங்கள் ஜப்பானில் தங்கவுள்ள ஜனாதிபதி, ஜப்பான் பிரதமர் உட்படப் பல அரச முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஜப்பானுக்கான இந்தப் பயணத்தின்போது, இரு நாடுகளுக்கும் இடையில் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**இந்தப் பயணத்தின் போது, இரு நாடுகளுக்கு இடையில் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த டிசெம்பர் மாதத்திலேயே ஜப்பானுக்கான பயணத்துக்குத் திட்டமிட்டிருந்தார். எனினும் அப்போதைய ஜப்பானிய பிரதமரின் பதவி விலகலைத் தொடர்ந்து குறித்த பயணம் இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டது. (த)

## மழையால் பாதிக்கப்படுகின்றன நிரந்தர வீட்டுப் பணிகள்

அக்கராயன், மார்ச் 8

தற்போது பெய்து வரும் மழை காரணமாக வன்னி மாவட்டங்களில் இடம்பெறும் நிரந்தர வீட்டுத் திட்டப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு வவுனியா மன்னார் ஆகிய வன்னி மாவட்டங்களில் நிரந்தர வீட்டுத் திட்டப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

ஆனால் இங்கு அடிக்கடி பெய்யும் மழையினால் இந்தப் பணிகள் பாதிப்பை எதிர்கொண்டு வருகின்றன.

துணுக்காயிலுள்ள அமதிபுரம் கிராம அலுவலர் பிரிவில் முதல் தடவையாக நிரந்தர வீடுகளை அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

மழை காரணமாக வீடுகளை அமைப்பதற்குத் தேவையான பொருள்களை எடுத்துச் செல்ல முடியாத நிலை இங்கு காணப்படுகின்றது. சிலர் அதிக பணம் செலவழித்து இந்தப் பொருள்களை எடுத்து செல்வதாகவும் தெரிய வருகின்றது.

மழை என்பதால் மணல் பெற்றுக் கொள்வதிலும் சிரமங்கள் காணப்படுகின்றன.

குளங்களில் வான் பாய்வதால் அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் கூட மணல் ஏற்ற முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிய வருகின்றது. (க-18)



## மகளிர் தின நிகழ்வுகள்

வவுனியா, மார்ச் 8

சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் இன்று மாங்குளத்தில் இடம்பெறவுள்ளன.

சர்வதேச கல்வி அகம், நோர்வே ஆசிரியர் சங்கம் மற்றும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் என்பன இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் இன்று நண்பகல் 12 மணிக்கு மாங்குளம் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வலயச் செயலாளர் த.யோகானந்தராஜா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றனும், விசேட அதிதியாக முன்னாள் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரும், சர்வதேச பெண்கள் வலையமைப்பின் வளவாளருமான திருமதி அருளேஸ்வரி வேதநாயகமும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-400)

★★★

வவுனியா, மார்ச் 8

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை வங்கி வவுனியாக்கிளை நடத்தும் கருத்தரங்கு இன்று காலை 8.30 மணி முதல் 12 மணி வரை இடம்பெறவுள்ளது.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கு ''குடும்பத்தைக் காப்போரைப் பாதுகாப்போம்'' என்ற தொனிப் பொருளில் இடம்பெறும்.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த மருத்துவர்களால் பெண்களுக்கான மருத்துவ ஆலோசனைகள், அழகுக்குறிப்பு ஆலோசனைகள் என்பனவும் இங்கு வழங்கப்படவுள்ளதாக இலங்கை வங்கியின் வவுனியாக் கிளையினர் தெரிவித்துள்ளனர்.

(க-402)



கடந்த சில நாள்களாகப் பெய்த மழை காரணமாக வெள்ளத்தால் சூழப்பட்ட நிலையில் காணப்படும் வன்னேரிக்குளம் கிராம அலுவலர் அலுவலகம். (க-18)

## ஆசிரியர் பற்றாக்குறையில் முன்னிலையில் பூநகரி

பூநகரி, மார்ச் 8

பூநகரிக் கோட்டப் பாடசாலைகளில் அதிகளவில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் பூநகரிக் கல்விக் கோட்டமே ஆசிரியர்கள் பற்றாக்குறையில் முன்னிலை வகிக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் வறுமை நிலையில் வாழும் குடும்பங்களிலிருந்து வந்து கல்வி பயிலும் மாணவர்கள் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக பாடசாலையிலிருந்து இடை விலகும் அபாய நிலையும் காணப்படுகின்றது.

பூநகரியின் மேற்குப் பகுதியில் உள்ள பாடசாலைகளிலேயே அதிகளவில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது.

இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களின் வெற்றிடத்துக்கு பதில் ஆசிரியர்கள் நியமிக்கப்படாததால் இந்த நிலை உருவாகியுள்ளது. குறிப்பாக கிராஞ்சி அ.த.க.வில் 1 தொடக்கம் 9 வரையான வகுப்புகளில் கல்வி கற்கும் 250 மாணவர்களுக்கு 18 ஆசிரியர்கள் தேவையாக உள்ள நிலையில் 9 ஆசிரியர்கள் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க-18)

## முல்லைத்தீவு செயலகத்தில் வாழ்வாதார உதவிகள்

முல்லைத்தீவு, மார்ச் 8

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் பனம்பொருள் உற்பத்தியாளர்களுக்கும், சுயதொழில் முயற்சியாளர்களுக்கும் உதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

பனம்பொருள் உற்பத்திகளை வாழ்வாதாரமாகக் கொண்ட 48 பெண்களும், சுயதொழில் முயற்சியாளர்கள் 177 பேரும் இந்த உதவிகளைப் பெற்றுக்கொள்ள உள்ளனர். இதில் தெரிவு செய்யப்பட்ட 48 பெண்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையும் 177 சுயதொழில் முயற்சியாளர்களுக்கு தொழில் முயற்சி உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

இன்று முற்பகல் 10 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வின் போது இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளதாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ப.சீவரத்தினமும், கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மாவட்ட முகாமையாளர் எஸ்.ரமணனும் தெரிவித்துள்ளனர். (க-13)

## சாந்தபுரத்தில் நடந்த மகளிர் தின நிகழ்வு

இயக்கச்சி, மார்ச் 8

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி 'பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம்' எனும் தொனிப் பொருளில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் விளையாட்டு மைதானத்தில் கருணா நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்கள் பாரதிபுரம் பாரதிவித்தியாலய மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்து வரப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள், பொது மக்கள் எனப்பலர் கலந்து கொண்டிருந்ததுடன், சிறுவர், பெண்களுக்கு எதிராக ஏற்படக்கூடிய குடும்ப வன்முறைகள், அவற்றைத் தடுக்கும் வகையில் செயற்படுதல், அது பற்றிய விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தல் தொடர்பான துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. (க-6)

## அரச பஸ் சேவையை நடத்துமாறு பூநகரி மேற்கு மக்கள் வேண்டுகோள்

பூநகரி, மார்ச் 8

பூநகரியின் மேற்குப் பகுதி மக்கள் தமக்கு அரச பஸ் சேவையை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பூநகரியின் மேற்குப் பகுதியில் உள்ள வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள் போக்குவரத்துச் சிரமங்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

**பூநகரியின் மேற்குப் பகுதியில் உள்ள வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர் கள் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.**

இதனால் தமது கிராமங்களுக்கு அரசபஸ் சேவையை நடத்துவதற்கான ஏற்பாடுகளை கிளிநொச்சி அரச அதிபர் மேற்கொள்ள வேண்டுமென இந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது இங்கு இடம்பெறும் தனியார் பஸ் சேவைகள் நீண்ட இடைவெளியில் இடம்பெறுவதால் தாம் பல்லவராயன் கட்டுச் சந்தியில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

மக்கள் மீள்குடியமர்ந்த நாளிலிருந்து அரச பஸ் சேவைகள் இங்கு இடம்பெறுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மேற்கிலுள்ள அக்கராயன் வரை இடம்பெறும் பஸ் சேவைகளைத் தமது கிராமங்களுக்கும் நீடிக்குமாறு இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர். (க-18)

## உழுந்துச் செய்கை இம்முறை வவுனியா மாவட்டத்தில் அழிவு

வவுனியா, மார்ச் 8

வவுனியா மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட உழுந்துப் பயிர்செய்கைக்கு பெரும் அழிவு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். வவுனியா மாவட்டத்தின் வடக்குத் தெற்குப் பகுதிகள் உழுந்துப் பயிர்ச் செய்கைக்குப் பிரபல்யம் வாய்ந்தவை. குறிப்பாக வவுனியா வடக்கில் உள்ள நெடுங்கேணி ஒலுமடுப் பகுதியில் பெருமளவு உழுந்துச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

தற்போது பெய்து வரும் பருவம் தப்பிய மழையினால் இங்கு உழுந்துச் செய்கையில் ஈடுபட்டவர்கள் அழிவுகளை எதிர்கொண்டுள்ளனர். (க-18)

## வவுனியாவில் ஞாயிறன்று கச்சியப்பர் விழா

வவுனியா, மார்ச் 8

வவுனியாத் தமிழ்ச்சங்கம் நடத்தும் கச்சியப்பர் விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா, வைரவ புளியங்குளம் ஆதி விநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் தமிழ்ச் சங்கத் தலைவர், தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

தலைமையுரையைத் தொடர்ந்து மாணவர் உரை அரங்கம் இடம்பெறும்.

கச்சியப்பர் என்னும் பொருளில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி செல்வி ஜெசிந்தா அனந்தமூர்த்தியும், கந்த புராணம் என்னும் பொருளில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவன் மு.துவிஜனனும் உரையாற்றுவார்கள்.

நிகழ்வில் கந்தபுராண வித்தகர், சுழிபுரம் மாதவர் மார்க்கண்டு, ஓய்வுபெறும் கிராம சேவை உத்தியோகத்தர் மயில்வாகனம் தியாகராஜா ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

தொடர்ந்து நடைபெறும் கந்தபுராணக் கருத்தரங்கில் வேலும் வில்லும் என்ற தலைப்பில் கவியெழில் திருமதி த.நிறைமதி, ''கந்த புராண கலாசாரம்'' என்ற தலைப்பில் சிவகஜன், ''கந்த புராணத்தில் சைவசித்தாந்தம்'' என்ற தலைப்பில் திருமதி வி.முருகேசம்பிள்ளை ''கந்த புராணம் காட்டும் பண்பாடு'' என்ற தலைப்பில் கி.உதயகுமார், ''கந்தபுராணத்தில் இலக்கியச்சுவை'' என ஆ.லோகேஸ்வரன் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

நிறைவாக நடைபெறும் நாட்டிய அரங்கில், வவுனியா நத்தன சேஷ்திராலயா நடனப்பள்ளி இயக்குநர் செல்வி பாலசுப்பிரமணியம் ஜெயசீலாவின் நட்டுவாங்கத்தில் ''அழகுத் தெய்வம்'' என்னும் நாட்டிய நாடகமும் இடம்பெறும். (க-402-400)

## யாழ்....

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

துடன் நாடாளுமன்றில் குரல் எழுப்பியதைத் தொடர்ந்து இந்தக் குடும்ப ஒளிப்பதிவு நடவடிக்கைகளைப் படையினர் நிறுத்திக் கொண்டனர்.

இந்த நிலையில் கடந்த சில நாள்களாக யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இராணுவத்தினர் குடும்பப் பதிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தின் கரையோர கிராமங்களான குருநகர், பாசையூர் பகுதிகளில் நேற்று வியாழக்கிழமை காலை முதல் படையினர் பதிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

படையினர் இராணுவச் சீருடையுடன் வந்து, குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை, அடையாள அட்டை இலக்கம், அவர்களின் தொழில் விவரங்கள் என்பவற்றுடன் காணியின் அளவு, சொந்த வீடு, வாடகை வீடு பற்றிய விவரங்களையும் திரட்டியுள்ளனர்.

இதனை விட 2000 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது மக்கள் தங்கியிருந்த இடங்கள் தொடர்பான விபரங்களையும் இராணுவத்தினர் திரட்டியுள்ளனர்.

கடந்த வாரம் மயிலிட்டி மக்கள் இடம்பெயர்ந்து உடுவிலில் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களுக்குச் சென்று படையினர் விவரங்களைத் திரட்டினர்.

யாழ். குடாநாட்டில் இராணுவ முகாம் அமைப்பதற்கு காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் முனைப்பு பெற்றுள்ள நிலையில், இராணுவத்தினர் பொதுமக்களிடம் காணி தொடர்பான விபரங்களைக் கோருவது மக்கள் பகுதியில் அச்சத்தை தோற்றுவித்துள்ளது. (த-5-23)

## இலங்கையில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மென அமெரிக்கா தனது நகலில் பிரேரித்திருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகக் கருதப்படுகிறது.

இலங்கை ஏற்கனவே கொடுத்த மனித உரிமைக் காப்பு வாக்குறுதிகள் மற்றும் பொறுப்புக்கூறும் கடப்பாட்டை வெளிப்படுத்த வேண்டுமெனவும், இலங்கையின் நிலைமைகளை அவதானிக்க சுயாதீன விசாரணையாளர்கள் அனுமதிக்கப்படவேண்டுமெனவும் அமெரிக்காவின் இந்தப் பிரேரணையில் கோடிகாட்டப்பட்டுள்ளது. பிரேரணை நகலின் சாரம்சம் வருமாறு:-

(1) இலங்கையில் நல்லிணக்கப்பாட்டைத் தோற்றுவிப்பதற்கும் பொறுப்புக்கூறலுக்கான கடப்பாடுகளை மேற்கொள்வதற்கும் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆலோசனையும் தொழில்நுட்ப உதவியும் வழங்க முன்வந்துள்ளமையை வரவேற்கின்றோம்.

சட்டத்துறை மாற்றத்தை அணுகுவதற்கு ஏதுவாக திரட்சியான உள்ளகப் பங்களிப்போடு உண்மையைக் கண்டறிவதற்கான பொறிமுறை ஒன்று உருவாக்கப்படவேண்டுமென்ற மேற்படி ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும், முடிவுகளையும் வரவேற்கின்றோம்.

சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமான சட்டம் ஆகியவை மீறல்கள் தொடர்பாக எழுந்துள்ள முறையீடுகள் குறித்து, சுயாதீனமான நம்பகத்தன்மை கொண்ட சர்வதேச விசாரணை அவசியம் என்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர்ஸ்தானிகர் விடுத்துள்ள அறைகூவலையும் கவனத்தில் கொள்கின்றோம்.

(2) மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் இடம்பெற்றுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசை நாம் வலியுறுத்துகின்றோம்.

(3) கற்றுக்கொண்ட பாடங்களுக்கும் நல்லிணக்கப்பாட்டுக்குமான ஆணைக்குழுவின் சிபாரிசுகளைத் துரிதமாகவும் காத்திரமாகவும் நடைமுறைப்படுத்துமாறு நாம் விடுத்துள்ள கோரிக்கையை இலங்கை அரசுக்கு மீளவும் வலியுறுத்துகின்றோம்.

அதேவேளை, நீதித்துறை உத்தரவாதம், சமத்துவம், பொறுப்புக்கூறலுக்கான கடப்பாடுகள் ஆகியவற்றை உத்தரவாதப்படுத்த நம்பகத்தன்மை வாய்ந்த சுயாதீனமான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமாக பொருத்தமான சட்ட கடப்பாடுகளை நிறைவேற்றுமாறும் இலங்கை அரசைக் கோருகின்றோம்.

இவற்றில் அனைத்து இலங்கையருக்குமான நல்லிணக்கப்பாட்டைத் தோற்றுவித்தல், சர்வதேச சட்ட மீறல்கள் தொடர்பான விசாரணைகள் ஆகியவையும் அடங்கும்.

(4) விசேட நடைமுறைகளை மேற்கொள்ள ஆணை அதிகாரம் கொண்டோருடன் இணைந்து நீடித்துவரும் கோரிக்கைகளுக்கு இலங்கை அரசு தீர்வுகாண முன்வர வேண்டும்.

நீதிவான்கள், சட்டத்தரணிகள், மனித உரிமை காப்பாளர்கள் ஆகியோரின் சுயாதீனம் ஒடுக்கப்படக்கூடாது. பேச்சுச் சுதந்திரம், அமைப்புகளின் சுயாதீனம், கூடும் உரிமை ஆகியவை நசுக்கப்படக்கூடாது.

ஒருதலைப்பட்சமான மரணதண்டனைகள், பலாத்காரத்தைக் கட்டவிழ்க்கவோ, பலவந்தமாக காணாமற்போகச் செய்வதையோ தொழிலாகக்கொண்ட குழு, பெண்களுக்கு எதிரான வன்முறை ஆகிய விவகாரங்களுக்கும், சிறுபான்மையினரின் விவகாரங்களுக்கும் முடிவுகட்டப்படவேண்டும்.

(5) மேலே குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இலங்கை அரசுக்கு ஆலோசனைகள், தொழில்நுட்ப உதவிகள் ஆகியவற்றை வழங்க முன்வந்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவையும், ஆணை அதிகாரம் படைத்தவர்களின் முன்னெடுப்புகளையும் நாம் பெரிதும் ஊக்குவிக்கின்றோம்.

(6) இந்தத் தீர்மானத்தின் நடைமுறைகள் தொடர்பாக மனித உரிமைகள் பேரவை அதன் 24ஆவது அமர்விலும், 25ஆவது அமர்விலும் உள்ளக அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றோம்.

## அமெரிக்காவுடன்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

டில் ஜெனிவா விவகாரம் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும்போதே அமைச்சர் இப்படிக் கூறினார்.

இலங்கை விவகாரம் தொடர்பாக இந்தியாவில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. நாடாளுமன்றத்திலும் தமிழ்நாட்டிலும் தொடர்ச்சியாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் இவ்விடயம் தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் அமெரிக்காவுடன் நேரடியாகப் பேசி ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்த வேண்டும் என ஆலோசனை கூறியுள்ளார். இது தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன? என்று அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர்,

எல்லா விடயங்களுக்கும் ஒரு தனிப்பட்ட அமெரிக்காவை நாட வேண்டிய அவசியமில்லை. அமெரிக்காவுக்கு மட்டுமல்ல ஜெனிவா மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் சர்வதேச நாடுகள் அனைத்துக்குமே தெளிவுபடுத்தியுள்ளோம்.

மனித உரிமை விவகாரங்களுக்கு பொறுப்பானவரும் இலங்கைக் குழுவுக்குத் தலைமைதாங்கிச் சென்றவருமான பெருந்தோட்டக் கைத்தொழில் துறைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க அரசு மேற்கொண்டுவரும் அனைத்து நடவடிக்கைகள் தொடர்பாக நீண்ட அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளார். அதனை உலக நாடுகள் பரிசீலனை செய்ய வேண்டும். அமெரிக்காவுடன் மட்டும் தனிப்பட்ட முறையில் பேசவேண்டிய அவசியம் இப்போது இல்லை- என்றார்.

மற்றும் ஒரு கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர்,

எதிர்க்கட்சிகள் கூறுவது போல் நாம் இவ்விவகாரத்தை அசட்டை செய்யவில்லை. மிகவும் அவதானத்துடன் இராஜதந்திர காய் நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றோம். தேவையான சகல ஆயத்தங்களை செய்து வருகின்றோம். அண்டை நாடான இந்தியாவுடன் தொடர்ந்து பேசி வருகின்றோம். ஜெனிவா மாநாட்டில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் சக்தி எமக்குண்டு- என்றார்.

அமெரிக்காவினால் கொண்டுவரப்படவுள்ள பிரேரணை மீது வாக்கெடுப்பு நடத்தும் படி கேட்கப்படமாட்டாது என்று செய்திகள் வெளியாகி உள்ளன. இது உண்மையா? என அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இங்கே ஒரு விடயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது அமெரிக்கா இலங்கைக்கு எதிராக கொண்டுவரவுள்ள குற்றச்சாட்டுகள் என்ன என்பது எவருக்குமே தெரியாது. இன்னும் பிரேரணை முன்மொழியப் படவுமில்லை.இப்படி இல்லாத ,தெரியாத விடயம் பற்றி எப்படி அபிப்பிராயம் கூறுவது.பிரேரணை வந்தபின் பார்ப்போம். இந்தியாவும் இதே நிலைப்பாட்டில்தான் இருக்கிறது.நாம் விழிப்புடன்தான் இருக்கிறோம்- என்று பதிலளித்தார். (த-2)

## அமைச்சர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வெடுக்கும் போது உங்களின் உணர்வுகள் கவனத்தில் கொள்ளப்படும். இலங்கை மீது கோபப்படுவது மட்டும் தீர்வாகிவிடாது. இலங்கையில் நடந்திருப்பது மிகப் பெரிய மனிதாபிமான பிரச்சினை. இதற்கு தீர்வு காண நீண்டகாலமாகும். இந்தியா பெரியண்ணன் பாணியில் அல்லது உலக பொலிஸ்காரனாக செயல்பட முடியாது' என குறிப்பிட்டார்.

அமைச்சரின் பேச்சுக்குக் குறுக்கிட்ட திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, 'எப்பவுமே இதே பதிலை சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி' என்று கேள்வி எழுப்பினார். அதன் பின்னர் அவருக்கு ஆதரவாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் தம்பித்துரையும் குரலெழுப்பினார்.

இந்நிலையில், வெளிவிவகார அமைச்சர் தனது உரையை மீண்டும் தொடர்ந்ததை அடுத்து, 'நீங்க இப்படி பேசிகிட்டே இருங்க... நாங்கள் வெளியே போகிறோம்' எனக் குறிப்பிட்ட தி.மு.க, அ.தி.மு.க உள்ளிட்ட அனைத்து தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட்டாக வெளிநடப்பு செய்தனர். (த)

## இந்துப்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இந்துக்களின் விசேட சமய நிகழ்வான மகா சிவராத்திரி உற்சவத்தின் நிமித்தம் நிகழும் சமய நிகழ்ச்சிகள் யாவும் சிவராத்திரி தினம் விடியற்காலை தொடங்கி மறுதினம் பகல் 12.00 மணிவரை இடம்பெறுவதானது இந்து சம்பிரதாயத்தின் அம்சங்களில் ஒன்று.

அதற்கிணங்க இந்து சமய வழிபாடுகளில் பங்குபற்றும் பக்தர்கள் மற்றும் பிள்ளைகளுக்காக சிவராத்திரி தினமான மார்ச் 10 ஆம் திகதி தவிர்ந்த மார்ச் 11ஆம் திகதியையும் இந்துப் பாடசாலை மாணவர்களுக்கு விடுமுறை தினமாக்குமாறு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டதன் பிரகாரம் எதிர்வரும் 11ஆம் திகதி இந்துப் பாடசாலை மாணவர்களுக்கு விடுமுறை தினமாகப் பரிந்துரைக்க கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இது மாற்று அமர்வுக்காக இடம்பெறும் ஒப்பந்தத்தின் கீழ் பரிந்துரைக்கப்பட்டுள்ளது டன் எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை இந்துப் பாடசாலைகளுக்கு இதற்கான மாற்று அமர்வு இடம்பெறுவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்து பக்தர்கள் வருடக்கணக்காகக் கேட்கும் இந்த வேண்டுகோளுக்கு நடுநிலை வகித்து செயற்பட்டதன் நிமித்தம் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுக்கு இந்து மக்களின் விசேட பாராட்டுகளும் ஆசீர்வாதங்களும் கிடைக்கும் என சங்கங்கள் மற்றும் அமைப்புகள் தெரிவித்துள்ளன - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-400)

## இலங்கையை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வருமாறு:-

இலங்கையில் நடந்த துயரம் கொடூரமானது. கனத்த இதயத்துடன் இந்த விவாதத்தில் பங்கேற்கிறேன். இலங்கையில் மிகப் பெரும் படுகொலை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. மனித உரிமை மீறல்கள் நடந்தேறி வருகின்றன. இலங்கை இராணுவப் பதுங்குகுழி ஒன்றில் 12 வயதுச் சிறுவன் பாலச்சந்திரன் பிஸ்கட் போன்ற ஒன்றைச் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் அந்தக் காட்சியையும் அவன் சிறிது நேரத்தில் சுட்டுப் படுகொலை செய்யப்படுவதையும் பார்க்கும் காட்சிகள் அனைவரையும் உறையவைக்கும். இலங்கையில் எப்படியான படுகொலைகள் நிகழ்ந்திருக்கின்றன என்பதை அந்தப் படம் ஒன்றே சொல்லும்.பாலசந்திரனைப் படுகொலை செய்த புகைப்படங்களே இலங்கையின் கோர முகத்துக்கு சாட்சி.

இலங்கை அண்டை நாடு. அதனால் மற்ற நாடுகளைப் போல இலங்கைப் பிரச்சினையைக் கையாள முடியாது. ஆனால் இலங்கையைக் கையாள்வது எளிதானதுதான்.இலங்கை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு மாற வேண்டும். அதற்கு இந்த விவாதம் உதவ வேண்டும். 2009 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்பே இலங்கையில் போர் முடிந்து விட வேண்டும் என இந்தியா கருதியது. இந்தப் பொதுத் தேர்தல் காலத்தை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ தந்திரமாகப் பயன்படுத்திக் கொண்டார். இதைப் பயன்படுத்தி தமிழர்களுக்கு எதிரான போரை நடத்தி அவர் வெற்றி பெற்றார். இந்திய அரசியல் கட்சிகளும் இதைக் கண்டுகொள்ளவில்லை.

ஈழப் போர் முடியும் வரை இந்தியாவும் எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை. ஈழத் தமிழர் படுகொலைக்கு இந்தியாவும் உடந்தையாகவே இருந்தது. புலிகளின் கடற்படையை இந்தியக் கடற்படையே ஒழித்தது. 2009ஆம் ஆண்டு இலங்கை மீது பொருளாதாரத் தடைவிதிக்க வேண்டும் எனப் பிரதமரிடம் நான் பேசினேன். ஆனால் நட்பு நாடு என்பதால் தடைவிதிக்க முடியாது என்று கூறிவிட்டார் பிரதமர்.

இலங்கையில் போர் முடிந்த பின்னரும் அமைதிக்கான பேச்சு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இலங்கையின் வடக்குப் பகுதியில் இருந்து இராணுவம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும். 13ஆவது அரசியல் திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டும். 'திவிநெகும' என்ற சட்டம் மூலம் மாகாண சபைகளின் அதிகாரங்களைக் குறைத்திருக்கிறது இலங்கை அரசு. இலங்கையின் பிரதம நீதியரசரையே பதவி நீக்கம் செய்திருக்கிறது. இது தொடர்பாக விசாரிக்கச் சென்ற சர்வதேச விசாரணைக் குழுவை இலங்கை அனுமதிக்கவில்லை. இலங்கை மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக-இனப்படுகொலை குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட்டுக் குற்றங்கள் செய்தோர் தண்டிக்கப்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை இந்தியாவே கொண்டுவர வேண்டும்-என்றார் அவர். (த)

## 15 ஆயிரம்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

காரணமாக வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட சிங்கள, முஸ்லிம் மக்களை மீள்குடியேற்ற வேண்டியுள்ளது.

இதற்கமைய வடமாகாணத்தில் 15 ஆயிரம் சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்படவுள்ளன. இது ''மீள்குடியேற்றமே தவிர 'மீள் குடியமர்தல்' அல்ல. வடக்கின் எல்லைக் கிராமங்களான பதவியா, வவுனியா தெற்கு மற்றும் முல்லைத்தீவுடன் புதிதாக இணைக்கப்பட்ட வெலிஓயா பிரதேச செயலர் பிரிவிலேயே சிங்கள மக்களைக் குடியேற்றவுள்ளோம்.

பதவியாவில் ஏற்கனவே விவசாயிகள் என்ற போர்வையில் 2 ஆயிரம் சிங்களக் குடும்பங்களுக்குக் காணி வழங்கப்பட்டு குடியேற்றப்பட்டுள்ளனர். இவர்கள் விவசாய செய்கை மேற்கொள்வதற்கு உபகரணங்களும் அரசினால் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் வவுனியா சேம்மடு வீதியின் முடிவைத் தொடர்ந்து காட்டுப் பகுதியூடாக வெலிஓயாவை நோக்கிச் செல்லும் பகுதியிலும் சிங்கள மக்களைக் குடியேற்றுவதற்காகக் காடழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.

அத்துடன் வடக்கில் குடியேற்றப்படும் சிங்களவர்களுக்காக 850 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. இதில் 500 வீடுகளின் நிர்மாணப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. இவை வெலிஓயாப் பகுதி சிங்கள குடியேற்ற மக்களுக்கு உரியது.

இந்த வடமாகாண அபிவிருத்திக்காக இலங்கை அரசு 2.569 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை செலவு செய்யவுள்ளது. இதற்கு மேலதிகமாக வெளிநாட்டு உதவிகளும் கிடைக்கும்.

பெரும்பாலும் வடமாகாணத்துக்கு வெளிநாட்டு நிதிகளே கிடைக்கின்றன. இவை நிதியுதவி மற்றும் கடனாக வழங்கப்படுகின்றன.

மன்னார் மாவட்டத்தின் முசலிப் பிரதேசத்தில் முஸ்லிம் மக்கள் பல இடங்களில் குடியேற்றப்படுகின்றனர். எனினும் இவர்கள் காணி விடயத்தில் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

இதனைவிட, திருகோணமலை சம்பூரில் குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட வேண்டியுள்ளன. எனினும் குறித்த பிரதேசம் முதலீட்டு வலயமாக மாற்றப்படுவதனால் இவர்களுக்கு மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மாற்று நடவடிக்கைகளை அந்த மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் 56 குடும்பங்களை அண்மையில் மீளக்குடியமர்த்தியுள்ளோம். ஏனையயோர் தொடர்பில் பேச்சு நடத்தி நட்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-என்று கூறினார். (த-5-402)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இந்தியாவைக் கையாள்வதில் அமெரிக்க ராஜதந்திரம் எவ்வழி..?

இலங்கைத் தமிழர் விவகாரம் கடந்த வருடம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்தைப் பெரிய அளவில் ஈர்த்திருந்தும், ஆக்கபூர்வமான பெறுபேறு எதுவும் இன்றி பூச்சிய நிலைக்குத் தள்ளப்பட்டதற்கு இந்திய அரசே காரணம் என்பது அனைத்துலகப் பரகசியம்.

கடந்த ஆண்டு போன்று இந்த ஆண்டும் தீர்மானத்தில் உள்ள சில கடுமையான பதங்களை நீக்குவதற்கு இந்தியா முயற்சிக்கலாம் என்று கருதப்படுகிறது.

சமீப நாள்களாக, அமெரிக்கத் தீர்மானத்தை இந்தியா ஆதரிப்பதற்குச் சாதகமாகக் கருத்துகளை வெளியிட்டு வந்தவர் மன்மோகன் சிங். ஆனால் நேற்று முன்தினம் மேலவையில் ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்துக்குப் பதில் அளித்துப் பேசுகையில், அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தின் உள்ளடக்கம் மற்றும் அதில் உள்ள சொற்பதங்களே மனித உரிமைகள் பேரவையில் இந்தியா எடுக்கவுள்ள நிலைப்பாட்டைத் தீர்மானிக்கும் என்று அதிரடியாக அறிவித்துள்ளார்.

அதேவேளை, இந்திய நாடாளுமன்றத்துக்கு வெளியே செய்தியாளர்களுடன் பேசிய சல்மான் குர்ஷித், அமெரிக்காவுடன் இலங்கை கலந்தாலோசித்து அனைவரும் ஏற்கக்கூடிய ஒரு தீர்மான வரைபைத் தயாரிக்க முடியும் என்று கருத்து வெளியிட்டிருந்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவு கோரி இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், புதுடில்லியில் நடத்திய பேச்சுகளின் போது இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துத்தான் அது.

கடந்த ஆண்டும் அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரிப்பதற்கு இந்தியா முடிவெடுத்த போதிலும், தீர்மானத்தில் இருந்த சில கடுமையான சொற்பதங்களை நீக்குவதில் வெற்றி கண்டது. இம்முறையும் தீர்மானத்தை ஆதரிப்பதற்கு நிபந்தனையாக சில கடுமையான சொற்பதங்களை நீக்குவதில் இந்தியா வெற்றிபெறுமானால் இலங்கையையும் சமாளிக்கலாம்; தமிழ்நாட்டையும் சமாளிக்கலாம். ஆனால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு எதுவும் கிட்டாது.

கடந்த வருடம் அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையில் இருந்த சில கடுமையான பகுதிகள் நீக்கப்பட்டமை இலங்கை அரசுக்கு ஒரு குறிப்பிடத்தக்க வெற்றி என்பதில் சந்தேகம் இல்லை. அமெரிக்காவின் பிரேரணை முழு அளவில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால் தீர்மானத்தைச் செயற்படுத்துவதில் ஐ.நாவின் தொழில்நுட்ப உதவிகளை இலங்கை பெறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கும்; இலங்கை தட்டிக்கழித்திருக்க முடியாது. தீர்மானத்தின் கடுமை நீக்கப்பட்டதன் விளைவுதான் இலங்கை மீதான அமெரிக்காவின் இரண்டாவது தீர்மானம் என்பதில் கருத்து வேறுபாடுகள் இருக்க முடியாது.

கடந்த ஆண்டுத் தீர்மானத்தின் அடிப்படையில், அதன் பரிந்துரைகளை இலங்கை செயற்படுத்துவதற்கான வழிமுறைகளை புதிய தீர்மானம் கொண்டுள்ளது என்கிறது அமெரிக்கா. இந்தியா கருதுவது போன்று அமெரிக்காவுடன் இலங்கை கலந்து பேசி அனைத்துத் தரப்பினாலும் ஏற்கக்கூடிய ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருவது சாத்தியமானது அல்ல.

இலங்கை தொடர்பான தனது கொள்கையில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாகவும், மனித உரிமைகள் தொடர்பான விடயங்களுக்குத் தீர்வு காண்பதில் இலங்கை முன்னேற்றத்தை வெளிப்படுத்தத் தவறிவிட்டதென்றும் அமெரிக்கா பகிரங்கமாக அறிவித்திருப்பது இலங்கைக்கு ஒரு பின்னடைவு என்றே கூறவேண்டும். அமெரிக்காவிடம் இலங்கை இனியும் சலுகைகளை எதிர்பார்க்க முடியாது. அதேவேளை, இலங்கை உட்பட சகல தரப்புகளுக்கும் ஏற்புடைய ஒரு தீர்மானம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக இருக்காது என்று அடித்துக் கூறலாம்.

விடுதலைப் புலிகளுடனான போரின் போது இந்தியா மட்டுமல்ல, அமெரிக்காவும் இலங்கை அரசுக்கு உதவியிருக்கிறது என்பது இப்போது நிலையான உண்மை, யதார்த்தம். எனினும் போரில் வெற்றி ஈட்டிய பின்னர் இலங்கை அரசு நீதியாகச் செயற்படும் என்று இந்தியாவும் அமெரிக்காவும் மனப்பந்தல் போட்டிருந்தன. ஆனால் இனப் பிரச்சினை தொடர்பாகத் தமிழ் மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் அளித்த உறுதிமொழிகளை நிறைவேற்ற இலங்கை அரசு தவறிவிட்டது.

கடந்த ஆண்டு போலவே தமிழர் பிரச்சினையில் எந்த ஒரு விட்டுக்கொடுப்புக்கும் இலங்கை அரசு தயாரில்லை என்பது மிக அப்பட்டமாக வெளிப்படுகிறது.

இன்று அமெரிக்காவும் பெரும்பாலான ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் இலங்கையின் போக்கை எதிர்க்கின்றன.

ஆனால்-

நாளுக்கு ஒன்று, நேரத்துக்கு வேறொன்று என்று சுழியோடி இலங்கை அரசுக்கு இந்தியா "பாட்டுப் பாடும்" நிலை இம்முறையும் உருவாகினால், ஏமாந்த சோணகிரியாக அமெரிக்கா தலைகுனியும் நிலையும் உருவாகலாம்.

எனவே அமெரிக்கா இது விவகாரத்தில் தனது சுய பலத்துடன் இந்தியாவைக் கழற்றிவிட்டு, தனது ஏனைய நேச நாடுகளை ஈர்க்கும் உத்தியைக் கையாள வேண்டும்.

எதற்கும், ஆசிய வட்டகை நாடுகளின், அணி சேரா நாடுகளின் மத்தியில் செல்வாக்குள்ள இந்தியாவைத் தனது பக்கம் திருப்புவதில் அமெரிக்கா கையாளப் போகும் ராஜதந்திரம் எத்தகையது என்பதிலேயே இலங்கைத் தமிழர் விவகாரத்தின் முடிவு அமையும். இது சந்தேகமாக மட்டுமன்றி ஓர் அச்சமாகவும் பல தரப்புகளிலும் முகிழ்த்து வருகிறது.

# வெளிவாரி அடிப்படை ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும்

## பொது ஊழியர் சங்கம் கோரிக்கை

அம்பாறை, மார்ச் 8

வடமாகாணத்திலுள்ள அரச அலுவலகங்கள், திணைக்களங்களில் வெளிவாரி அடிப்படையில் கடமையாற்றிவரும் ஊழியர்களின் சேவையை முடிவுறுத்துவதற்கு எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதுடன், குறித்த வெளிவாரி அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவும் ஆவன செய்யப்படவேண்டும்.

இவ்வாறு, அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடமாகாண ஆளுநருக்கு சங்கம் அனுப்பிவைத்துள்ள அவசர மனு ஒன்றில் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளது.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் சார்பில் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் இந்த மனுவை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடமாகாணத்திலேற்பட்ட போர் சூழ்நிலையின் பின்னர், வடக்கு மக்களின் நலன்கருதி அரச அலுவலகங்கள் திணைக்களங்களில் நிலவிய வெற்றிடங்களுக்கு (ஆளணி) வெளிவாரி அடிப்படையில் ஆள்சேர்ப்பு செய்யப்பட்டது.

இதன்படி வடமாகாணத்திலுள்ள அரச அலுவலகங்கள், திணைக்களங்களுக்கு ஊழியர்கள், சாரதிகள், வெளிவாரி அடிப்படையில் சலுகையிலான வெற்றிடங்களுக்கு அமைய நியமிக்கப்பட்டனர்.

இவ்வாறு நியமனம் பெற்ற வெளிவாரி அடிப்படையிலான ஊழியர்கள், சாரதிகள் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் பொதுநிர்வாக 06/2006 சுற்றறிக்கைக்கு அமைவாக சம்பளம் பெற்றுத் தமது கடமைகளைச் சீராகச் செய்து வருகின்றனர்.

இந்த வெளிவாரி ஊழியர்கள் வலயக்கல்வி அலுவலகம், விவசாயத் திணைக்களம், வீதி அபிவிருத்தி உள்ளூராட்சி, கூட்டுறவு மற்றும் கணக்காய்வாளர் திணைக்களங்களில் கடமை புரிகின்றனர்.

இவ்வாறு கடமை புரியும் ஊழியர்களில் பணியாளர் சேவை சார்ந்தவர்கள் சுமர் 65 பேர் வரையும், சாரதிகள் 35 பேர் வரையுமுள்ளதாக அறியவருகின்றது.

### கிழக்கில்

மேலும் மேற்படி ஊழியர்கள் போன்று வெளிவாரி அடிப்படையில் கிழக்கு மாகாண சபையால் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ள அதேவேளை நாடு முழுவதும் ஒப்பந்தம் மற்றும் சலுகையிலான அடிப்படையில் நியமனம் பெற்று 180 நாள்கள் சேவையாற்றிய ஊழியர்களுக்கும் பொதுநிர்வாக 20/2009 சுற்றறிக்கைக்கு அமைவாகவும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

### வடக்கில்

இதேவேளை வடமாகாண அலுவலகங்களில் காணப்பட்ட வெற்றிடங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட வெளிவாரி அடிப்படையிலான ஊழியர்களுக்கும், சாரதிகளுக்கும் சில அலுவலகங்கள் சம்பளம் வழங்க மறுத்து வருகின்றன என்றும் -

இந்த ஊழியர்களை சேவையிலிருந்து நிறுத்துவதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும்- ஊழியர்கள் எமது தொழிற்சங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர்.

தேவைக்குப் பயன்படுத்திவிட்டு தூக்கிவீசும் வகையிலான இந்த நடவடிக்கைகள் பெரும் வேதனையையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளன.

எனவே குறித்த வெளிவாரி அலுவலகப் பணியாளர்கள், சாரதிகளின் சேவையை முடிவுறுத்தும் வகையில் எடுக்கப்படும் நடவடிக்கைகளைக் கைவிடுமாறு நாங்கள் கோரிக்கை விடுப்பதுடன் இந்த ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆவன செய்யுமாறும் கோருகின்றோம்.

இவர்களை உடனடியாக நிரந்தரமாக்க முடியாதபட்சத்தில் பொது நிர்வாக அமைச்சினால் காலத்துக்கு காலம் வெளியிடப்படும் நிரந்தர நியமனம் வழங்கல் சுற்றறிக்கைக்கு அமைவாக நிரந்தர நியமனம் வழங்கலாம்.

அதுவரை இந்த ஊழியர்கள் கடமையாற்றுவதற்கு அஷமய அடிப்படையிலான முறையான நியமனத்தை வழங்கி ஏனைய ஊழியர்கள் பெற்றுக்கொள்ளும் சலுகைகளைப் பெறுவதற்கு உரிய திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அல்லது வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழு இந்த விடயம் தொடர்பில் தங்களது ஆளுநர் அனுமதி பெற்று இது விடயத்தில் உதவவேண்டும்.

நிரந்தர நியமனத்துக்காக 2012 ஆம் ஆண்டு வைகாசி மாதம் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களும், மேற்படி வெளிவாரிஅடிப்படை ஊழியர்களிலுள்ளனர் என்பதையும் தங்களது கவனத்துக்குக் கொண்டுவருவதுடன், இந்த ஊழியர்கள் விடயத்தில் நியாயம் கிடைக்கத் தாங்கள் ஆவன செய்ய வேண்டுமெனவும் கோருகின்றோம்-என்றுள்ளது.

(த-30)

# தென்மராட்சியில் இலக்கிய நிகழ்வு

தென்மராட்சி,மார்ச் 8

தென்மராட்சி இலக்கிய அணி முன்னெடுக்கும் இலக்கிய நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நிகழ்வில், சிந்தனைச் சிற்பி இ.கலாமோகன் கௌரவிக்கப் படவுள்ளார்.

இலக்கிய அணியின் 'அசதிக் கோவை' நூல் வெளியீடு இடம்பெறும். வெளியீட்டுரையை த.நாகேஸ்வரன் நிகழ்த்துவார்.

'கம்பராமாயணத்தில் தவறிழைத்த பெற்றோர்கள் குற்றக் கூண்டில்' என்னும் வழக்காடு மன்றம் இடம் பெறும். இதில் 'கைகேயி குற்றவாளியே' என க.ஈஸ்வரன் வாதிட அதனை ச.மார்க்கண்டு மறுத்து வாதிடுவார்.

'தசரதன் குற்றவாளியே' என க.நடேஸ்வரன் வாதிட பே.உதயகுமார் மறுத்து வாதிடுவார். 'இராவணன் குற்றவாளியே' என பா.விக்கினேஸ்வரன் வாதிட சு.வாசுதேவா மறுத்து வாதிடுவார்.

(ம-9)

# திருக்கேதீஸ்வரத்துக்கு விசேட பஸ் சேவைகள்

வடமராட்சி,மார்ச் 8

மகா சிவராத்திரியை முன்னிட்டு பருத்தித்துறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மத்திய பஸ் நிலையங்களிலிருந்து 10, 11 ஆம் திகதிகளில் பயணிகளின் வசதிக்கு ஏற்ப திருக்கேதீஸ்வரத்துக்கு விசேட பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். பஸ் நிலையத்திலிருந்து வவுனியா ஊடாகவும், பருத்தித்துறை பஸ் நிலையத்தில் இருந்து நெல்லியடி, கொடிகாமம், வவுனியா ஊடாகவும், கிளிநொச்சி பஸ் நிலையத்தில் இருந்து வவுனியா ஊடாகவும், திருக்கேதீஸ்வரம் நோக்கி பஸ்கள் புறப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-8)

# சிற்றூர்திகளில் ஆசன ஒதுக்கீடு நடைமுறையை பின்பற்ற அறிவுறுத்து

வடமராட்சி,மார்ச் 8

வடபகுதியில் சேவையாற்றும் சிற்றூர்திகளில் மதகுருமார், கர்ப்பிணிப் பெண்கள், மாற்று வலுவுள்ளோர்களுக்கு தனியான ஆசனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன.

இ.போ.ச.பஸ்களில் மதகுருமார், கர்ப்பிணிப் பெண்கள், மாற்று வலுவுள்ளோர்களுக்கு தனியான ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், புகைத்தல் கூடாது என்ற வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை தனியார் சிற்றூர்திகளிலும் பின்பற்றப்பட வேண்டும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சிற்றூர்தி சேவைச் சங்கங்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இதற்கமைய வடக்கில் முதன் முதலாக வடமராட்சி சிற்றூர்தி சேவைச் சங்க சிற்றூர்திகளில் குறிப்பிட்டோருக்கு சாரதி ஆசனத்துக்குப் பின்புறமாக தலா 2 ஆசனங்கள் வீதம் ஒதுக்கப்பட்டு அதற்கான வாசகங்களும் எழுதப்பட்டு வருகின்றன.


புகைத்தல் கூடாது என்ற வாசகமும் பொறிக்கப்படுகின்றது.

வடமராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கத்தைச் சேர்ந்த சுமார் 80 க்கும் மேற்பட்ட சிற்றூர்திகளில் அ[illegible] வாசிக்கு மேற்பட்ட சிற்றூர்திகள[illegible] இந்த ஆசன ஒதுக்கீடு நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளன.

எஞ்சிய சிற்றூர்திகளில் இந்த மாத முடிவுக்குள் இந்த நடவடிக்கை பூர்த்தியடைந்துவிடும் என்று சங்கத்தின் நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

வடக்கில் உள்ள ஏனைய சிற்றூர்திச் சேவைச் சங்கங்களும் குறித்த ஆசன ஒதுக்கீடு நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ம-8)

அக்கராயனில் வெள்ள நீர் நிறைந்து காணப்படும் வயல் ஒன்றில் அறுவடை இயந்திரம் நெல் அறுவடையில் ஈடுபடுவதையும் வெள்ளத்தில் மூழ்கிய நெற்கதிர்கள் முளைத்த நிலையில் உள்ளதையும் படங்களில் காணலாம். (க-18)

## முள்ளியவளை மாவீரர் மயானத்திலும் படை முகாம்

முல்லைத்தீவு, மார்ச் 8

முள்ளியவளையில் அமைந்திருந்த மாவீரர் துயிலும் இல்லத்தில் இராணுவ முகாம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் காலை இந்த முகாம் திறந்து வைக்கப்பட்டது.

இதற்கான அழைப்பிதழ்கள் தமிழில் மட்டுமே அச்சிடப்பட்டு முள்ளியவளையில் உள்ள பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டன.

திறப்பு விழாவையொட்டி மாவீரர் துயிலும் இல்லப் பகுதி சோடனைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்ததையும் காண முடிந்தது.

ஏற்கனவே யாழ்.குடாநாட்டில் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் இடித்து அழிக்கப்பட்டு, அந்த இடத்தில் யாழ். நகர பிரிகேட் தலைமையகம் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (க-433)

## வன்னியில் மழையால் மெய்வன்மைப் போட்டிகளை நடத்த முடியாத நிலை

தற்போது வன்னிப் பகுதியில் பெய்துவரும் மழை காரணமாக மெய்வன்மைப் போட்டிகளை நடத்த முடியாத நிலையில் கிளிநொச்சிப் பாடசாலைகள் உள்ளன.

மழை காரணமாக பாடசாலை மைதானங்களில் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

பூநகரி மகாவித்தியாலயம், பூநகரி ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மைதானங்களில் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் மோசமான நிலையில் காணப்படுகின்றன.

முதலாவது தவணைக்குள் மெய்வன்மைப் போட்டிகள் யாவும் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

## மழை வெள்ளத்தால் அவலப்படும் புதுக்குடியிருப்புப் பகுதி மக்கள்

புதுக்குடியிருப்பு, மார்ச் 8

கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் மழையால் தற்காலிகக் கொட்டகைகளில் வசித்து வரும் புதுக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த காலப் போர் இடர்களால் இடம்பெயர்ந்து தற்போது தமது சொந்த இடங்களில் தற்காலிகக் கொட்டகைகளில் வசித்து வரும் குடும்பங்களே மழையால் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றன.

மந்துவில், மல்லிகைத்தீவு, ஆனந்தபுரம் மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களே வெள்ளப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

**இந்தப் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்ந்து ஒரு வருடம் கடந்த நிலையிலும் குறிப்பிட்ட ஒரு சிலரைத் தவிர ஏனையவர்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை எனவும் தெரிய வருகின்றது.**

மழை வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்துள்ளதால் அன்றாடக் கடமைகளைச் செய்ய முடியாத நிலை இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் இரவுப் பொழுதை வேறு இடங்களுக்குச் சென்று கழிக்க வேண்டியுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்ந்து ஒரு வருடம் கடந்த நிலையிலும் குறிப்பிட்ட ஒரு சிலரைத் தவிர ஏனையவர்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை எனவும் தெரிய வருகின்றது.

இதேவேளை இந்தப் பகுதிகளிலுள்ள வீதிகள் எவையும் புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன. குழிகளில் மழை நீர் தேங்கி நிற்பதால் இந்த வீதிகளில் பயணிப்பவர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-400)

## வவுனியா வடக்குப் பகுதியில் இடர் முகாமைத்துவக் குழு

வவுனியா, மார்ச் 8

வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் இடர் முகாமைத்துவ சேவைகள் குழுவொன்றை அமைப்பதற்கான தீவிர முயற்சியை மேற்கொண்டு வருவதாக வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ சேவைகள் பிரிவின் உதவிப்பணிப்பாளர் என்.சூரியராஜ் தெரிவித்தார்.

ஒலுமடு, சின்னமடு, பரந்தன், ஆனந்தபுளியங்குளம், குளவிசுட்டான், புளியங்குளம் தெற்கு, மகா இலுப்பைக் குளம் ஆகிய கிராமங்களில் இடர் முகாமைத்துவ சேவைக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

முன்னெச்சரிக்கைக் குழு, தேடுதல் மற்றும் மீட்புக் குழு, உணவு மற்றும் நிவாரண பகிர்ந்தளிப்புக் குழு , தங்குமிடவசதியை ஏற்படுத்தும் குழு, சுகாதார வசதியை ஏற்படுத்தும் குழு எனப் பல குழுக்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளன.

இடர்களின் போது நடந்து கொள்ள வேண்டிய விதம் தொடர்பான பயிற்சிகள் இந்தக் குழுக்களுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது. இந்தப் பயிற்சிகளை வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ சேவை குழுவினர் வழங்கவுள்ளனர்.

வவுனியாவின் எந்தப் பகுதியிலும் இயற்கையாக ஏற்படும் ஆபத்துக்களின் போது வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ சேவைக் குழுவினர் செயற்படத்தக்க வகையில் கிராம மட்டத்தில் தொடர்ந்தும் குழுக்கள் அமைக்கப்படவுள்ளதாகவும், உதவிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (க-402)

## மன்னாரில் காணி தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டம்

மன்னார், மார்ச் 8

காணி தொடர்பாக மக்களுக்கு விளக்கம் அளிக்கும் அவசரக் கூட்டம் ஒன்று மன்னாரில் இடம்பெற்றது

இந்தக் கூட்டம் வடக்கு மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மன்னார் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

உதவிக் காணி ஆணையாளர் கை.மகேஸ்வரன் இந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

இதன்போது அரச காணிகளை மக்கள் அபகரிக்கின்றமை, காணி இல்லாத குடும்பங்களின் பிரச்சினைகள், பாதுகாப்புத் தேவைகளுக்காக அரச காணிகள் பயன்படுத்தப்படுகின்றமை உட்பட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

இதன் போது மன்னார் நகர காணி ஆணையாளர் திணைக்கள பணியாளர்கள், மன்னார் பிரதேச செயலர், கிராம சேவையாளர்கள், கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள், பட்டதாரிப் பயிலுநர்கள்,பொது மக்கள் உட்பட நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-12)

## போக்குவரத்துக்கு உதவாத இறம்பைக்குளம் வீதி

நெடுங்கேணி, மார்ச் 8

நெடுங்கேணி இறம்பைக்குளம் வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாமையால் போக்குவரத்து மேற்கொள்ள முடியாத அளவுக்குச் சேதமடைந்து காணப்படுகின்றது.

இந்த வீதி சுமார் நான்கு கிலோ மீற்றர் நீளமானது. பொஸ்டோ என்னும் அரச சார்பற்ற நிறுவனம் இந்த வீதியின் ஒரு கிலோ மீற்றர் பகுதியை கிரவல் பரவிப் புனரமைப்புச் செய்தது.

ஆனால் இதில் 500 மீற்றர் நீளமான பகுதி தற்போதைய மழையினால் சேதமடைந்து சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது. இதனால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளது.

போக்குவரத்துச் செய்ய முடியாது மோசமாகச் சேதமடைந்து காணப்படும் இறம்பைக்குளம் வீதியை உரிய அதிகாரிகள் பார்வையிட்டு புனரமைத்து வழங்குமாறு இந்த கிராம மக்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-426)

## சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தின் சேவை நேரத்தை நீடியுங்கள்

### வவுனியா நகரசபையினரிடம் கோரிக்கை

வவுனியா,மார்ச் 8

நகரசபையால் நடத்தப்படும் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தின் சேவை நேரத்தை நீடிக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வவுனியாவில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்லும் அரச உத்தியோகத்தர்கள், வர்த்தக நிலையங்களின் பணியாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றுபவர்கள் எனப் பலதரப்பட்ட தரப்பினரும் இந்தச் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தின் சேவை நேரத்தை இரவு 10 மணிவரை நீடிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வவுனியா நகரின் மத்தியில் பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் உள்ள இந்த சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தை தினமும் அதிகளவானோர் பயன்படுத்தி வருகின்றனர்.

வழமையாக இரவு 8 மணிக்கு முன்னர் இந்த நிலையம் மூடப்படுகின்றது. இதனால் வெளியிடங்களிலிருந்து வருவோர் அங்கு விட்டுச் சென்ற தமது வாகனங்களை எடுத்துச் செல்ல முடியாத நிலையில் உள்ளூர் பஸ் சேவையும் இல்லாததால் தனியார் வாகனத்துக்கு அதிக பணத்தைச் செலவழிக்கின்றனர்.

ஆகவே தான் இந்த நிலையத்தின் சேவை நேரத்தை நீடிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-402)

## மருதங்குளம் வான் பாய்வதால் புத்துவெட்டுவான் மக்கள் நெருக்கடிக்குள்

அக்கராயன், மார்ச் 8

துணுக்காயிலுள்ள மருதங்குளம் வான் பாய்வதால் புத்துவெட்டுவான் கிராம மக்கள் ஐயன்கன்குளம் மருத்துவ மனைக்குச் செல்வதில் இடர்களை எதிர்கொள்வதாகத் தெரிய வந்துள்ளது.

சுமார் 79 குடும்பங்கள் வாழ்கின்ற இந்தக் கிராமத்தில் போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலையே காணப்படுகின்றது.

இங்குள்ள மக்கள் குடியமர்ந்து 3 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் பஸ் சேவை இல்லாத கிராமமாக இது உள்ளது. இங்கிருந்து ஐயன்குளம் செல்வதற்கு சுமார் 6 கிலோ மீற்றர் தூரம் பயணிக்க வேண்டும்.

**மழை காலத்தில் மருதங்குளம் வான்பாய்வதால் ஐயன்கன்குளம், மல்லாவி ஆகிய இடங்களுக்குச் செல்ல முடியாத நிலையில் தாம் உள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.**

இதேபோன்று கிளிநொச்சி நகருக்குச் செல்ல வேண்டுமாயின் சுமார் 18 கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டியுள்ளதாக இந்தக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

மழை காலத்தில் மருதங்குளம் வான்பாய்வதால் ஐயன்கன்குளம், மல்லாவி ஆகிய இடங்களுக்குச் செல்ல முடியாத நிலையில் தாம் உள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

புத்துவெட்டுவான் கிராம மக்களின் போக்குவரத்து நெருக்கடி தொடர்பாக முல்லைத்தீவு அரச அதிபரின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

## வங்கிக் கிளை வேண்டும்; அக்கராயன் மக்கள் கோரிக்கை

அக்கராயன், மார்ச் 8

அக்கராயனில் இலங்கை வங்கிக் கிளை ஒன்றை ஆரம்பிக்குமாறு இங்கு மீள்குடியமர்ந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

2011 ஆம் ஆண்டு அக்கராயன் கிராமிய அபிவிருத்தி அமைப்பு அக்கராயனில் வங்கிக்கிளை ஒன்றை ஆரம்பிக்குமாறு இலங்கை வங்கியின் வடபிராந்திய பொது முகாமையாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தது.

இக்கடிதத்துக்கு வங்கியால் அனுப்பி வைக்கப்பட்ட பதில் கடிதத்தில் வங்கிக் கிளையொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் ஓர் ஆண்டு கடந்த நிலையிலும் அக்கராயன் பகுதியில் வங்கிக்கிளை ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் இங்கு வசிக்கும் மக்கள் அக்கராயன் பகுதியிலிருந்து 20 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் கிளிநொச்சி நகருக்குச் செல்ல வேண்டிய அவல நிலையில் உள்ளனர்.

அக்கராயன் பகுதியில் வங்கிக் கிளையொன்று ஆரம்பிக்கப்பட்டால் சுமார் 41 ஆயிரம் குடும்பங்கள் பயனடைய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

# உணவு கையாளும் நிலையங்களில் சீருடை அணியும் திட்டம் விரைவில்

தென்மராட்சி, மார்ச் 8

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் உணவு கையாளும் நிலையங்களில் பணி புரிவோர் சீருடை அணியும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சபையின் சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள நடைமுறையின் பிரகாரம் இரண்டு பேருக்கு மேலுள்ள ஊழியர்களைக் கொண்ட உணவு கையாளும் நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்கள் சீருடை அணிந்து கடமையாற்ற வேண்டும்.

**பரிசோதனைகளை முடித்து சான்றிதழ் பெற்றமையை உறுதிப்படுத்தும் வகையில்சீருடை அணிந்திருக்க வேண்டும்.**

உணவு கையாளும் நிலையங்களில் பணியாற்றுவோர் தொற்றாநோய் தொடர்பான பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்ற போதிலும் நிலையங்களில் நிற்போரும் உணவுப் பொருள்களை கையாள்வதை அவதானிக்க முடிகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு மருத்துவ பரிசோதனைகளை முடித்து சான்றிதழ் பெற்றமையை உறுதிப்படுத்தும் வகையில் நிலையங்களில் பணியாற்றுவோர் ஒரே மாதிரியான சீருடை அணிந்திருக்க வேண்டும்.

விரைவில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சாவகச்சேரி நகர சபையின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (ம-9)

## வடமராட்சிப் பிரதேசத்தில் திருட்டுகள் அதிகரிப்பு

வடமராட்சி, மார்ச் 8

வடமராட்சிப் பிரதேசத்தில் அதிகாலை வேளைகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்று பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

புலோலி கார்த்திகேசர் வீதியையொட்டிய பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரிக்குப் பின்புறம் உள்ள வீடொன்றில் ஆசிரியை ஒருவரின் தங்கச் சங்கிலி இனந்தெரியாதோரால் அபகரிக்கப்பட்டது.

இந்த ஆசிரியை சமையலில் ஈடுபட்டிருந்த வேளை பிள்ளைகள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கையில் பின்புறமாக வந்த இனந் தெரியாத ஒருவர் ஆசிரியையின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அதிகாலை 5 மணியளவில் அபகரித்துச் சென்றுள்ளான்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சங்கிலியைப் பறிகொடுத்த ஆசிரியை பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

வடமராட்சிப் பிரதேசத்தில் இரவு வேளைகளில் பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் இரவு நேர திருட்டுகள் குறைவடைந்துள்ளன.

இந்த நிலையில் தற்போது அதி காலையில் திருட்டுகள் இடம்பெற்று வருகின்றன என்று கூறப்பட்டது. (ம-8)

## அனுமதியின்றி விறகு ஏற்றியோருக்கு அபராதம்

தென்மராட்சி, மார்ச் 8

அனுமதிப்பத்திரமின்றி வாகனங்களில் காட்டு விறகுகள் ஏற்றி வந்த ஐந்து சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று முன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழக்கு விசாரணையில் சாரதிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து ஐந்து பேருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (ம-9)



போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் இராசாவின் தோட்ட வீதி. (ம-ரி)

## மணல் வீதிகளுக்கு கிரவல்

தென்மராட்சி, மார்ச் 8

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் 15 மணல் வீதிகள் கிரவல் வீதிகளாக மாற்றப்படவுள்ளன.

பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் முன்னுரிமைப்படுத்தி ஒரு வீதியின் பெயரை வழங்குமாறு அனைத்து உறுப்பினர்களையும் தலைவர் சி.துரைராஜா கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் பிரதேசத்தில் பொது மக்களின் பங்களிப்புடன் 60 வீதி விளக்குகள் பொருத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒவ்வொரு உறுப்பினரும் தலா நான்கு வீதி விளக்குகள் பொருத்துவதற்கான விவரங்களை வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஜனவரி மாதத்தில் பிரதேசத்தில் 60 வீதி விளக்குகள் பொதுமக்களின் பங்களிப்புடன் பொருத்தப்பட்டு மின் விநியோகம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு கணினி

கைதடி, மார்ச் 8

உசன் கந்தசாமி கோயில் ஆலய பரிபாலனசபையினர் ஸ்கந்த ஹோமப்பெருவிழாவை முன்னிட்டு எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு கணினி ஒன்றை அன்பளிப்பாக வழங்கவுள்ளனர்.

ஆலய பரிபாலன சபையினர் கடந்த வருடமும் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கும் கைதடி தொழிற்பூங்காவுக்கு இருபது மெத்தைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-288)

## சாவகச்சேரி நகர சபைக் கடைகளை நடத்துவோரின் பெயரிலேயே பதிவுகள்

தென்மராட்சி, மார்ச் 8

சாவகச்சேரி நகர சபைக்குச் சொந்தமான கடைகள் தற்போது அவற்றை நடத்தி வருவோரின் பெயரில் பதிவு செய்யப்படவுள்ளன.

சாவகச்சேரி நகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக இந்த முடிவு எடுக்கப்பட்டது.

குறிப்பிட்ட சில வர்த்தக நிலையங்களை கடந்த காலங்களில் நகர சபையிடம் வாடகைக்கு பெற்றவர்கள் அவற்றை நகர சபையின் அனுமதியின்றி வேறு சிலருக்கு அதிக வாடகைக்கு வழங்கியுள்ளனர்.

நகர சபையுடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் வாடகையாளர் வேறொருவருக்கும் கைமாற்றவோ வாடகைக்கு கொடுக்கவோ முடியாது.

நகர சபையால் ஏற்கனவே பதிவுக்கு உட்படுத்தியவர்கள் சட்டத்துக்கு மாறாக வேறு எவருக்கும் கடையை வழங்கமுடியாது.

வாடகையாளர்கள் சபையுடன் காலத்துக்குக் காலம் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறி செயற்பட்டதால் தற்போது கடைகள் நடத்துபவரின் பெயருக்கே பதிவு செய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## மக்கள் மீளக் குடியமர்ந்த எழுதுமட்டுவாழ் பகுதிக்கு மின்சாரம்

தென்மராட்சி, மார்ச் 8

கடந்த வருடம் மீள் குடியமர்வு இடம்பெற்ற எழுதுமட்டுவாழ் தெற்கு கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட 110 குடியிருப்புகள் ஆலயங்கள், பாடசாலை போன்றவற்றுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் விரைவில் மின் சாரம் வழங்கப்படவுள்ளது.

இந்தப் பிரிவில் இந்தியன் வீட்டுத் திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட 80 குடியிருப்புகளுக்கும் புனரமைக்கப்பட்ட 30 குடியிருப்புகளுக்கும் ஆலயங்கள், பாட சாலை ஆகியவற்றுக்கும் மின் விநியோகம் வழங்கப் படவுள்ளது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் விரைவில் மின் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் இலங்கை மின்சார சபையால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிய வருகின்றது. (ம-9)

## புகையிலை கொள்வனவில் வர்த்தகர்கள் ஆர்வம்

வடமராட்சி, மார்ச் 8

வலிகாமம் பிரதேசத்தில் புகையிலை அறுவடை ஆரம்பமானதைத் தொடர்ந்து புகையிலைக் கொள்வனவு செய்வதில் வடமராட்சி புகையிலை வர்த்தகர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

புகையிலையைக் கொள்வனவு செய்து உலரவிட்டு பதப்படுத்தி தென்பகுதிகளுக்கு அவற்றை எடுத்துச் சென்று சந்தைப்படுத்தும் புகையிலை வியாபாரிகளே இவ்விடயத்தில் கடும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

வலிகாமம் பிரதேசத்தில் அறுவடை செய்யப்படும் புகையிலைச் செடி ஒன்று 80 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இந்த பிரதேசத்தில் குறிப்பாக நீர்வேலி, சிறுப்பிட்டிப் பகுதிகளிலேயே அதிக அளவில் புகையிலை கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது.

## சாவகச்சேரி நகரச்சபை உறுப்பினர்களுக்கு விசேட தொலைபேசிக் கொடுப்பனவு

தென்மராட்சி, மார்ச் 8

சாவகச்சேரி நகரசபைத் தலைவர், உபதலைவர் உறுப்பினர்கள் ஆகியோருக்கு மாதாந்தம் தொலைபேசிப் பாவனைக்கென விசேட கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

தலைவருக்கு 3 ஆயிரம் ரூபாவும் உபதலைவருக்கு 2 ஆயிரம் ரூபாவும் ஏனைய 9 உறுப்பினர்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா வீதமும் மாதாந்த தொலைபேசி பாவனைக்கான விசேட கொடுப்பனவு வழங்க வேண் டும்.

**தீர்வையற்ற விதத்தில் வாகனங்கள் வழங்கவும் ஏற்பாடு**

அத்துடன் சபை உறுப்பினர்களுக்கு தீர்வை அற்ற விதத்தில் வாகனங்கள் (மோட்டார் சைக்கிள்) கொள்வனவு செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறான தீர்மானங்கள் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன என்று தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (ம-9)

## எழுதுமட்டுவாழ் தவறணை மீது வீசப்பட்டது கழிவு ஒயில்

தென்மராட்சி, மார்ச் 8

கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட எழுதுமட்டுவாழ் மாவடித் தவறணைக் கட்டடத்தின் மீது இனம் தெரியாதோரால் கழிவு ஒயில் ஊற்றப்பட்டுள்ளது. அத்துடன் பிரதேச சபை உறுப்பினர், கிராம அலுவலர் ஆகியோருக்கு எச்சரிக்கை வாசகமும் எழுதப்பட்டுள்ளது.

''எமது பகுதிச் சிறார்களுக்கு முன்பள்ளியும், மக்களின் தேவைக்கான கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடையும் இல்லாத நிலையில் கள்ளுத் தவறணை அவசியம் தேவையா?'' என்று பிரதேச சபை உறுப்பினர் மற்றும் பிரிவு கிராம அலுவலர் ஆகியோருக்கு எச்சரிக்கை விடும் பாணியில் எழுதப்பட்டுள்ளது.

இதேவேளை கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரால் 20 இலட்சம் ரூபா செலவில் எழுதுமட்டுவாழ் கிளையுடனான கோப்-சிற்றி அமைக்க மேற் கொண்ட முயற்சி, மீளக்குடியமர்ந்த சிலரின் செயற்பாட்டால் தடைப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## வாழ்க்கைச் செலவுப்படி குறைத்து வழங்கல்

தென்மராட்சி, மார்ச் 8

வெளிநாடுகளில் வதிவோருக்கு வழங்கப்படும் ஓய்வூதியக் கொடுப்பனவில் வாழ்க்கைச் செலவுப்படி 675 ரூபா நீக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்களுக்கு மாதாந்தம் வாழ்க்கைச் செலவுப் படியாக 2 ஆயிரத்து 675 ரூபா வழங்கப்படுகின்றது.

ஆனால் வெளிநாடுகளில் வதிவோருக்கு பிரதேச செயலகங்களால் அந்தந்த வங்கிகளில் வைப்புச் செய்யப்படுகிறது.

இந்த நிலையில் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் வெளிநாடுகளில் வதிவோருக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் வாழ்க்கைச் செலவுப்படியாக 2 ஆயிரம் ரூபா மட்டும் வழங்கப்படுவதாக ஓய்வூதியர்கள் தெரிவித்தனர். (ம-9)

## ஈழத்தமிழர் ஆதரவை சுயலாபத்துக்காக பயன்படுத்த எண்ணுகிறார் கருணாநிதி

### வைகோ கண்டனம்



சென்னை, மார்ச் 8

ஈழத் தமிழர் ஆதரவை தனது அரசியல் சுயலாபத்துக்குப் பயன்படுத்திக் கொள்ள எண்ணுகிறார் கருணாநிதி. கருணாநிதியின் பொது வேலை நிறுத்தப் போராட்டத்துக்கான அழைப்புத் தொடர்பாக ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

2009 ஆம் ஆண்டு முத்துக்குமார் உடலுக்கு எரியூட்டப்பட்ட தினமான ஜனவரி 31 ஆம் திகதி தமிழகத்தில் பொது வேலை நிறுத்தத்துக்கு இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கமும் தமிழர் உணர்வாளர்களும் கோரிக்கையை விடுத்தனர். அப்போது பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் பாதுகாப்புச் சட்டம் பாயும் என்று பொலிஸாரின் மூலம் தி.மு.க. அரசு மிரட்டியது.

இவ்வாறு இந்திய அரசின் துரோகத்தை மூடி மறைக்க படாதபாடுபட்ட அப்போதைய முதல்வர் கருணாநிதி, இப்போது எதிர்வரும் 12 ஆம் திகதிஜெனிவாவில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்துக்காக வேலை நிறுத்தம் என்று அறிவித்துள்ளார். தனி ஈழம் அமையும் வகையில் ஐ.நா.மூலம் பொது வாக்கெடுப்பு நடத்துவதே ஈழத் தமிழர் களுக்கு நல்ல தீர்வாக அமையும் - என்றுள்ளது.(வ)



தெற்கு கொல்கத்தா மலையேற்ற பிரியர்கள் சங்கத்தினர் எவெரெஸ்ட் சிகரத்தில் ஏற உள்ளனர். டில்லி ராஷ்டிரபதி பவனில் நடைபெற்ற இதற்கான விழாவில் பங்கேற்ற ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, கொடியசைத்து பயணத்தை ஆரம்பித்து வைத்தார்.

## கரு வளர்ச்சியைக் கண்டறியும் நிலையங்களுக்கு ஆந்திராவில் மூடுவிழா

ஹைதராபாத், மார்ச் 8

பெண் குழந்தைகளின் மீதான வன்முறை மற்றும் பெண் சிசு கொலை போன்றவை காரணமாக ஆந்திராவில் கரு வளர்ச்சியைக் கண்டறியும் நிலையங்களை மூட மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டு ஆயிரம் ஆண்களுக்கு 961 பெண்கள் என்றிருந்த நிலை மாறி தற்போது 943 பெண்களாகக் குறைவடைந்துள்ளது. மாநிலத்தில் வாரங்கல் மாவட்டத்தில் தான் அதிகமான பெண் சிசு கொலை நடைபெறுவதாகவும், அங்கு 2011 ஆம் ஆண்டில் ஆயிரம் ஆண்களுக்கு 912 பெண்கள் மட்டுமே எனக் கூறப்படுகிறது. அதனையடுத்து பெண் சிசுக் கொலையைத் தடுக்கும் நடவடிக்கையாக மேற்கண்ட உத்தரவை மாநில அரசு பிறப்பித்துள்ளது.(வ)

## இலங்கைச் சிறையிலுள்ள தமிழக மீனவரை விடுவிக்க நடவடிக்கை

### பாதுகாப்பு அமைச்சர் அந்தோனி தெரிவிப்பு



டில்லி, மார்ச் 8

இலங்கையில் சிறை வைக்கப்பட்டுள்ள மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கப்படும் என்றும் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் அந்தோனி தெரிவித்தார்.

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கடந்த வாரம் 16 தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்து சிறையில் அடைத் துள்ளது. இது தொடர்பாகவும், தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவது குறித்தும், இந்திய நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் விவாதம் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் டி.ராஜா, அ.தி.மு.க., நாடாளுமன்ற உறுப்பினர் மைத்திரேயன், தி.மு.க மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி ஆகி யோர் விவாதத்தில் பங்கு பற்றினர்

இதன்போது பேசிய மத்திய அமைச்சர் தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மத்திய அரசு மதிப்பளிக்கிறது. இலங்கையில் உள்ள தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை அரசு எடுத்து வருகிறது. தமிழக மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக உறுப்பினர்களின் கவலையை உணர்ந் துள்ளேன்-என்றார்.

# 2 தினங்களில் ஹைதராபாத்தில் மீண்டும் குண்டு வெடிக்கலாம்

### உளவுத்துறை எச்சரிக்கை; 144 தடை உத்தரவு பிறப்பிப்பு

ஹைதராபாத், மார்ச் 8

ஹைதராபாத்தில் இரு தினங்களில் மீண்டும் குண்டு வெடிக்கலாம். எனவே பொது மக்கள் யாரும் வீடுகளை விட்டு வெளியே வரவேண்டாம் என்று மத்திய உளவுத் துறை எச்சரித்துள்ளது.

அதையடுத்து, 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பொலிஸார் உஷார் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

ஆந்திர தலைநகர் ஹைதராபாத்தில் கடந்த 21 ஆம் திகதி தில்சுக் நகரில் 2 இடங்களில் உணவுப்பெட்டிக்குள் வைக்கப்பட்ட சக்தி வாய்ந்த குண்டுகள் வெடித்தன. அதில் 17 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

டில்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள முக்கிய குற்றவாளிகளான இம்ரான், அக்பல் ஆகியோரையும் 5 நாள் காவலில் எடுத்து உளவுத்துறைப் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தினர். அதில், ஹைதராபாத்தில் மக்கள் அதிகமாக கூடும் 12 இடங்களில் மீண்டும் வெடி குண்டுத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருப்பது தெரிய வந்தது. அதையடுத்து இம்ரான், அக்பல் ஆகியோரை ஹைத ராபாத்துக்கு 2 நாள்களுக்கு முன் நள்ளிரவில் இரகசியமாக உளவுத்துறை அதிகாரிகள் அழைத்து வந்துள்ளனர். 5 நாள் விசாரணை முடிவடைந்ததும் தீவிரவாதிகள் 2 பேரும் மீண்டும் திகார் சிறையில் அடைக்கப்பட் டனர்.

அதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் காலை மத்திய உளவுத்துறை பொலிஸார் ஆந்திர மாநில உள்துறை அமைச்சருக்கும், பொலிஸ் அதிகாரிக்கும் அவசர கடிதம் அனுப்பியுள்ளனர். அதில் இன்னும் 2 தினங்களில் ஹைதராபாத் நகரில் மக்கள் அதிகமாகக் கூடும் முக்கிய இடங்களில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதையடுத்து, ஹைதராபாத் முழுவதும் பொலிஸார் குவிக்கப்பட்டு, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது. ஹைதராபாத், செகந்திராபாத் நகரங்களில் பொலிஸார் 144 தடை உத்தரவும் பிறப்பித்துள்ளனர். (வ)

## மும்பையில் குடியிருப்புகளில் தீ 150 வீடுகள் நாசம் 17 பேர் காயம்



சென்னை, மார்ச் 8

மும்பையில் குடியிருப்புகளில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 150 வீடுகள் நாசமாகின. 17 பேர் காயமடைந்தனர்.

மேற்கு மும்பை பந்த்ரா ஸ்டேஷன் அருகே சாஸ்திரி நகர் குடிசைப் பகுதிகளில் நேற்று முன்தினம்இரவு தீ விபத்து ஏற்பட்டது. இதில் 150 இற்கும் மேற்பட்ட குடிசைகள் எரிந்து சாம்ப லாயின. நேற்றுக்காலை 6 மணியளவில் தீயணைப்புப் படையினர் மிகுந்த போராட்டத்தின் பின்னர் தீயை அணைத்தனர்.

## கோயில் கட்ட ஒருலட்சம் நன்கொடை வழங்கிய பிச்சைக்கார மூதாட்டி

*புனே, மார்ச் 8*

*மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த 85 வயது பிச்சைக்கார மூதாட்டி ஒருவர், இராமர் கோயில் அமைப்பதற்காக ஒரு லட்சம் ரூபா பணத்தை நன்கொடையாகக் கொடுத்து அனைவரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளார்.*

*புனேயில் இருந்து 75 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பிம்பள்கான் என்ற கிராமத்தில் பொதுமக்கள் ராமர் கோயில் அமைக்க முடிவு செய்ததைத் தொடர்ந்து அதற்காக நிதி திரட்டுவதற்காக ஊர் மக்கள் ஆலோசனை நடத்தினர். அப்போது அங்கு வந்த லட்சுமி என்ற பிச்சைக்கார மூதாட்டி தானும் கோயில் கட்ட நன்கொடை தருவதாகக் கூறினார்.*

*அவரை ஏளனமாகப் பார்த்த பொது மக்கள், 100 ரூபாயோ, 200 ரூபாயோ கொடுத்து விட்டுப் போ என்று கூறினர். ஆனால் அவர் ஒரு லட்சம் ரூபா நன்கொடை கொடுத்து அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தார். கணவர் இறந்ததில் இருந்து கடந்த 15 ஆண்டுகளாக பிச்சை எடுத்த பணத்தை வங்கியில் சேமித்து வந்துள்ளார். அந்த பணத்தையே அவர் கோயிலுக்கு வழங்கினார். (வ)*

## ‘டெசோ’ அறிவித்துள்ள வேலை நிறுத்தம் தமிழினத்தை திசை திருப்பும் நாடகம்

### சீமான் காட்டம்



சென்னை, மார்ச் 8

‘டெசோ’ அமைப்பு அறிவித்துள்ள பொது வேலை நிறுத்தம் தமிழனத்தை திசை திருப்பும் நாடகம் என்று நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதவாது:-

இலங்கையில்இடம்பெற்ற போரில் ஈழத் தமிழினம் திட்டமிட்ட இன அழிப்புக்கு உட்படுத்தப்பட்டது. அங்கு நடைபெற்றது போர்க் குற்றம் மட்டுமல்ல, அந்தப் போரே குற்றம் என்பதையும் நிரூபிக்கத்தான், சுதந்திர மான பன்னாட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது உலகத் தமிழினத்தின் ஒட்டு மொத்த ஒரே கோரிக்கையாகும்.

இலங்கையில் தமிழினத்தைக் கொன்று குவித்த இலங்கை அரசே, அந்த விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்கிற நிலைப்பாட்டை ஆரம்பத்தில் இருந்தே நாம் தமிழர் கட்சி எதிர்த்து வந்துள்ளது. கொலையைச் செய்தவனே கொலைக்குற்றம் பற்றி விசாரிப்பதா? என்று ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் அமைத்த நிபுணர் குழு அறிக்கை வெளியான உடனேயே நாம் தமிழர் கட்சி கேள்வி எழுப்பியது- என்றுள்ளது. (வ)

## 12 வருடங்களுக்கு முன் புதைக்கப்பட்ட வெடிபொருள் மீட்கப்பட்டு அழிப்பு

திருப்பதி, மார்ச் 8

சித்தூர் அருகே வனப் பகுதி சாலையில் கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்பு இரு பெட்டிகளில் புதைக்கப்பட்டு, வைத்திருந்த 10 கிலோ வெடிபொருள் களை ஆந்திர பொலிஸார் அதிரடியாக மீட்டு அழித்தனர்.

ஆந்திர மாநிலம், கடப்பா மாவட்டப் பொலிஸாரிடம் பிடிபட்ட நக்சலைட், மாவோயிஸ்ட்டுகளிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டது. அதன்போது சித்தூர் மாவட்டம், பீலேர் பகுதியை அடுத்த அப்பிரெட்டிகாரி பாடசாலை அருகே வனப் பகுதி சாலையில், வெடி பொருள்கள் புதைத்து வைத்திருப்பதாகத் தெரிவித்தனர்.

இது குறித்து கடப்பா பகுதிப் பொலிஸார் சித்தூர் மாவட்ட பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர்.

அதன் பேரில் கலக்கடா பிரதிப் பொலிஸ் அதிகாரி தேஜோ மூர்த்தி தலைமையில், பொலிஸ் தனிக் குழு அமைக் கப்பட்டது.

அந்தக் குழுவினர் வெடிகுண்டு கண்டறியும் நிபுணர்களுடன் கடந்த 6 தினங்களாக ஏர்ராவாடி பாளையம், தலபலா, அப்பிரெட்டிகாரி பாட சாலை, ஏலமந்தா ஆகிய கிராமங்களில் உள்ள வீதிகளில் நவீன கருவிகளுடன் இரகசிய சோதனையில் ஈடுபட்டனர்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் காலை அப்பிரெட்டிகாரி பாடசாலை கிராமம் அருகே வனப்பகுதியில் உள்ள வீதியில் வெடி பொருள்கள் புதைக்கப்பட்டிருந்ததைக் கண்டறிந்தனர். அதைத்தொடர்ந்து ஜே.சி.பி. இயந்திரம் வரவழைக்கப்பட்டு வீதியைத் தோண்டி பார்த்தனர்.

அங்கு இரு பெட்டிகள் புதைக்கப்பட்டிருந்தமை தெரிந்தது.அவற்றை பாதுகாப்பாக அங்கிருந்து எடுத்து வனப்பகுதிக்குக் கொண்டு சென்று திறந்து பார்த்த போது, இரு பெட்டிகளிலும் தலா 5 கிலோ எடையுள்ள வெடிபொருள்கள் இருந்தன.வெடிகுண்டு கண்டறியும் நிபுணர்கள் வனப்பகுதியில் அவற்றை அழித்தனர். (வ)

## மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி பிணையில் விடுதலை



மாலே, மார்ச் 8

கைது செய்யப்பட்ட மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி முகமது நஷீட் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவர் மீதான விசாரணைகள் நான்கு வாரங்களுக்குப்பிற்போடப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட அவர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். சுமார் ஒன்றரை மணிநேர விசாரணைகளின் பின்னர் வழக்கை 4 வாரங்கள் ஒத்திவைப்பதாக நீதிபதிகள் அறிவித்ததோடு, அவருக்குப் பிணையும் வழங்கினர்.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட மாலைதீவு அரச ஊடகச் செயலர் மசூத் இமாத் கருத்துத் தெரிவிக்கையில்,

''முகமது நஷீட் பொலிஸ் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். நீதிமன்றம் வழங்கிய அழைப்பாணைகளை அவர் புறக்கணித்தமையாலேயே கைது செய்யப்பட்டார். நஷீட் தரப்பினர் கூறிவது போன்று பழிவாங்கும் நடவடிக்கை இதில் எதுவுமில்லை. முன்னர் கூறுயது போன்று நீதிமன்ற செயற்பாடுகளில் மாலைதீவு அரசு எந்த விதத்திலும் தலையிடாது- என்று தெரிவித்தார்.

தமது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, நீதிபதியைக் கைது செய்ய உத்தரவிட்டார் என்று மாலைதீவு முன்னான் ஜனாதிபதி முகமது நஷீட் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)



## வெனிசுவேலா ஜனாதிபதியின் இறுதி நிகழ்வுகள் நாளை

கராக்கஸ், மார்ச் 8

புற்றுநோய் காரணமாக உயிரிழந்த வெனிசுவேலா ஜனாதிபதி ஹயூகோ சாவேஸின் இறுதி நிகழ்வுகள் நாளை கராக்கஸில் உள்ள இராணுவக் கல்லூரியில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒருவார காலம் துக்கம் அனுஷ்டிக்க அந்த நாட்டு அரசாங்கம் கோரியுள்ளது.

சாவேஸின் மறைவை அடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் தலைநகர் கராக்கஸின் வீதிகளில் திரண்டுள்ளனர்.

14 ஆண்டுகள் வெனிசுவேலாவின் ஜனாதிபதியாகப் பதவி வகித்த சாவேஸ் ஒரு புரட்சியாளராக அறியப்பட்டவர். அமெரிக்காவை விமர்சித்து வந்த ஹயூகோ சாவேஸ், லத்தீன் அமெரிக்க நாடுகளில் இடதுசாரி மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருந்தார். சுமார் ஒரு வருடத்துக்கு மேலாக புற்றுநோய் தாக்கத்துக்கு ஆளாகியிருந்த அவர் தனது 58 ஆவது வயதில் உயிரிழந்தார்.

தற்போது நடைபெறவுள்ள இறுதிக் கிரியைகளுக்காக கராக்கஸிலுள்ள இராணுவக் கல்லூரிக்கு சாவேஸின் உடல் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (ற)

# வாலாட்டும் வடகொரியாவுக்கு தகுந்த பதிலடி கொடுப்போம்

## எச்சரிக்கிறது தென்கொரிய இராணுவம்

சியோல், மார்ச் 8

ஆத்திரமூட்டும் செயற்பாடுகளில் வடகொரியா தொடர்ந்து ஈடுபடுகின்றது. அதற்குப் பதிலடி தருவதற்கு எந்தநேரத்திலும் தென்கொரியா தயாராகவே உள்ளது - இவ்வாறு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார் தென்கொரிய இராணுவத் தளபதி கிம் யெங்-ஹியூன்.

தென்கொரியாவுடன் செய்துகொண்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை முற்றிலும் முறித்துக் கொள்வோம் - என்று வடகொரிய அரசு மிரட்டியிருந்தது. அதையடுத்துக் கருத்துத் தெரிவித்தபோது தென்கொரிய இராணுவத் தளபதி கடுந்தொனியில் மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

வடகொரியா - தென்கொரியா ஆகிய நாடுகளுக்கிடையே இடம்பெற்ற கொரியப் போர் 1953ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது. அதனை அடுத்து இருநாடுகளும் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றைச் செய்திருந்தன. தற்போதும் அந்த உடன்படிக்கை செயற்படுநிலையில் இருந்து வருகிறது.

அந்தநிலையில் தென்கொரியா அமெரிக்காவின் கையாளாகச் செயற்படுகிறது என்று குறிப்பிட்டுள்ள வடகொரியா, தென்கொரியாவுடனான போர் நிறுத்த உடன்படிக்கையை முற்றாக முறித்துக் கொள்வோம் என்று கூறியுள்ளது.

வடகொரியாவின் அறிவிப்புக் குறித்துக் கருத்து வெளியிட்ட தென்கொரிய இராணுவத்தளபதி:-

''தென்கொரிய மக்களின் உயிருக்கும், நாட்டின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையிலான எந்த நடவடிக்கைகளையும் அனுமதிக்கமாட்டோம். வடகொரியா தொடர்ந்தும் கோபமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. தென்கொரிய இராணுவம் மிகவும் பலமான நிலையிலேயே உள்ளது. எமது இராணுவத்தினர் எந்த நடவடிக்கைகளுக்கும் பதிலடி கொடுப்பர். அந்த எதிர்த்தாக்குதல் எதிர்பார்க்காத அளவு உறுதியானதாகவும், பலமானதாகவும் இருக்கும்''-என்றார்.(ற)

## தேர்தல் குறித்து விரைவில் அறிவிப்பு – பாக். அரசு

இஸ்லாமாபாத், மார்ச் 8

பொதுத் தேர்தல் தொடர்பில் எதிர்வரும் 10 தினங்களுக்குள் அறிவிக்கப்படும் என்று பாகிஸ்தான் தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் தற்போதைய அரசு எதிர்வரும் 16ஆம் திகதியுடன் ஐந்தாண்டுகளை நிறைவு செய்கிறது. அதைத் தொடர்ந்து, பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் இடம்பெறவுள்ளது.

இந்த நிலையிலேயே பொதுதேர்தல் மற்றும் பிராந்திய தேர்தல்களுக்கான திகதி விரைவில் அறிவிக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த பாகிஸ்தான் தேர்தல் ஆணையச் செயலாளர் இஷ்தியாக் அகமது,

''இதற்கான பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பாகிஸ்தானில் சுதந்திரமானதும், பாரபட்சமற்றதுமான முறையில் தேர்தல் நடைபெறும். அதற்குத் தேவையான பணிகள் நடைபெற்று வருகின்றன- என்று தெரிவித்தார். (ற)

## இந்தியாவைத் தவறாக பயன்படுத்துகிறது ஈரான்

### கூறுகின்றது அமெரிக்கா

நியூயோர்க், மார்ச் 8

இந்தியா உட்பட 12க்கும் மேற்பட்ட நாடுகளை ஈரான் தவறான செயல்களுக்காகப் பயன்படுத்துகிறது. பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலாக விளங்கும் ஒரே நாடு ஈரானே.

இவ்வாறு குற்றஞ் சாட்டியுள்ளார் அமெரிக்காவின் உயர் இராணு அதிகாரி ஜேம்ஸ் மேட் டிஸ்.

அமெரிக்க மேலவை இராணுவ சபையில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''பிராந்திய வளர்ச்சிக்கு ஈரான் மிகவும் அபாயம் விளைவிக்கக்கூடிய வகையில் செயற்பட்டு வருகிறது. அந்த நாட்டின் போர்க்குணம் மற்றைய நாடுகளை அவர்கள் பக்கம் திருப்பாது. சொந்த மக்கள் மீது தாக்குதல் நடத்தி வரும் சிரிய ஜனாதிபதி பஸார் அல் அசாத்துக்கு ஈரான் தொடர்ந்தும் ஆதரவு அளித்து வருகின்றமை கண்டிக்கத்தக்கது.

சர்வதேச ரீதியில் 12க்கும் மேற்பட்ட நாடுகளைத் தமது தேவைகளுக்கான ஈரான் பயன்படுத்தி வருகின்றது. அந்தப் பட்டியலில் ஆசிய நாடான இந்தியாவும் அடங்குகின்றது. ஈரானின் தவறான கணிப்புகள் பெரும் அழிவை ஏற்படுத்துவதாகவே அமையும்.

இந்தநிலையில், ஈரானிடம் அணு ஆயுதம் கிடைக்கும் பட்சத்தில் அந்த நாட்டின் ஏதேச்சதிகாரப் போக்கு மேலும் அதிகரிக்கும்''- என்றார்.(ற)

## பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட சிரிய மக்கள் வேறிடங்களில் தஞ்சம்



ஜெனீவா, மார்ச் 8

சிரியாவில் இடம்பெற்று வரும் உள்நாட்டுப் போரால் இடம்பெயர்வோரின் எண்ணிக்கை 10 இலட்சத்தை தாண்டியுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள் ளது.

சிரிய ஜனாதிபதி பசார் அல் அசாத்தைப் பதவி விலகக் கோரி புரட்சியாளர்கள் போராடி வருகின்றனர். அந்த மோதல்களில் இதுவரை 70 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்தநிலையில் கருத்துத் தெரிவித்த ஐ.நா. அகதிகள் அமைப்பின் தூதர் அன்டோனியோ குட்ரஸ்:-

அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறை மற்றும் அரச தரப்பினரின் விமானத் தாக்குதல்கள் போன்றவற்றின் காரணமாக மக்கள் அயல் நாடுகளை நோக்கி நகரத் தொடங்கியுள்ளனர். இந்த ஆண்டில் மட்டும் 4 இலட்சம் மக்கள் சிரியாவை விட்டு வெளியேறியுள்ளனர். இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்தைத் தாண்டியுள்ளது.

தினமும் மக்கள் சிரியாவை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். நாங்கள் அவர்களுக்கு உதவத் தயாராக இருக்கிறோம். இடம்பெயரும் மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் சர்வதேச அளவில் எமக்குப் போதியளவு கிடைக்கவில்லை- என்று தெரிவித்தார். (ற)

## சிரியாவின் எதிர்காலத்தில் தீவிரவாதத்துக்கு இடமில்லை


டமாஸ்கஸ், மார்ச் 8

சிரியாவின் எதிர்காலத்தில் அல் குவைதாவுக்கோ அல்லது ஜிகாதிகளுக்கோ இடமில்லை - இவ்வாறு தெரிவித்துள்ளார் 'சிரியாவை விடுவிப்பதற்கான இராணுவத்தின்' தளபதி ஜெனரல் சலீம் இட்ரீஸ்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்:

நாட்டின் எதிரணிப் படையில் தற்போது 2 வீதத்துக்கும் குறைவாகவே தீவிரவாதிகள் இருக்கிறார்கள். அவர்கள் எதிர்காலத்தில் படைகளில் இருந்து விலக்கப்படுவார்கள். சிரியாவின் எதிர்காலத்தில் தீவிரவாதத்துக்கு இடமிருக்காது.

சிரியாவுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள ஆயுதத் தடை ஜனாதிபதி அசாத்தின் அரசுக்கே சாதகமாக அமையும். எனவே ஐரோப்பிய நாடுகள் தடைகுறித்து மீள் பரிசீலனை செய்ய வேண்டும். தடை நீடிக்குமானால் நாம் எமது இலக்கை அடைய நீண்ட காலம் தேவைப்படும். அது தேவையற்ற மனித இழப்புகளையே கொடுக்கும் - என்று தெரிவித்தார். (ற)



## இஸ்ரேலுக்கு 'படையெடுத்து' வரும் பாலைவன வெட்டுக்கிளிகள்

ஜெருசலேம், மார்ச் 8

எகிப்திலிருந்து இஸ்ரேலை நோக்கி இலட்சக்கணக்கான பாலைவன வெட்டுக்கிளிகள் படையெடுக்கத் தொடங்கியுள்ளன என்று கூறப்படுகிறது.

1 மில்லியன் வெட்டுக்கிளிகள் ஏற்கனவே இஸ்ரேலினுள் பிரவேசித்துள்ள நிலையில், ஏறத்தாழ 30 மில்லியன் வெட்டுக்கிளிகள் இஸ்ரேலை வந்தடையும் என்று கூறப்படுகிறது.

வெட்டுக்கிளிகளால் எகிப்து பெருமளவு விவசாய அழிவுகளைச் சந்தித்திருந்தது. இந்தநிலையில் அவை இன்னும் சில தினங்களில் இஸ்ரேலை வந்தடையும் என்று கூறப்படுகிறது.

கடந்த காலங்களில் இந்தவகை வெட்டுக்கிளிகளால் இஸ்ரேல் கடும் விவசாய அழிவுகளைச் சந்தித்திருந்தது. அதனால் வெட்டுக்கிளிகளின் வருகையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் இஸ்ரேலிய விவசாய அமைச்சு முழுவீச்சில் ஈடுபட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

(ற)

ஈரவிழிகளுடன் நான்காம் ஆண்டில்....



மலர்வு 1964 * 09 * 17

உதிர்வு 2009 * 02 * 20

திதி: 08.03.2013

## இ.கிருபாகரன்

(முன்னாள் ஆசிரியர்
கிளி/வட்டக்கச்சி ம.வி)

அப்பா!
பாதி வழியோடு பயணத்தை
முடித்ததால் மீதி வழி முழுவதும்
ஈரவிழியோடு ஏதிலியாய் நாம்..

தாவடி,
கொக்குவில்.

என்றும் உங்கள் நினைவில்
மனைவி, பிள்ளைகள்.

(34197) (10.6)

# சாதாரணதர மாணவருக்கு புதிய அடையாள அட்டைகள்

கொழும்பு,மார்ச்8

இந்த ஆண்டு ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குப் புதிய அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

இவ்வாறு ஆட்பதிவுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆர். எம். என். சரத்குமார தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

இலத்திரனியல் அடையாள அட்டைகளை தயாரிக்கும் பணியில் 800 பயிலுநர் பட்டதாரிகள் ஈடுபடுத்தப்படுவர். பயிலுநர் பட்டதாரிகள் 332 பிரதேச செயலர் பிரிவுகளில் 332 அலகுகளுக்காக தரவுகளை சேகரிப்பர். எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் இலத்திரனியல் அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்படும். இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி 16 வயதைப் பூர்த்தி செய்த மாணவர்கள் அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

அதிபர்கள் ஊடாக தற்போது முதல் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம். விண்ணப்பம் அனுப்பப்பட்டு இரு வாரங்களில் மாணவர்களுக்கான அடையாள அட்டைகள் வழங்கப்படும்.-என்றார். (ச)

## 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20.10.1937

மறைவு 13.02.1988



### அமரர் தி.சி.சண்முகலிங்கம்

(இணுவில் கிழக்கு)

(திதி: அபரபக்க ஏகாதசி 08.03.2013)

மேன்மைச் சைவம் விளங்கும் பதியினிலே!
வான் நிகர்த்த புகழோங்கு சேவையிலே!
காலைக் கதிரவனாய் தாங்கள் திகழ்கையிலே!
மாலை மதியெனவே நாம் மகிழ்ந்திருந்தோமே
எள்ளுச் செடியில் இடி விழுந்தாற் போல் தங்கள் திடீர் பிரிவு
எமை தாக்கிற்று-அப்பா கால விதியால் கோல விழிகள்
கண்ணீர் குளமாயினும் மேலான கல்வியால் மேம்பட்டோம் யாம்
எல்லாமே நாம் எய்திட்ட போதும் நீங்கள் இல்லையே!
சொல்லொணா துன்ப சாகரத்தில் துவழ்கிறோம் நாளும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய சிவகாமியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

"சுகந்தம்", இணுவில் கிழக்கு,
இணுவில்.

அன்பான மனைவி,
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரன்,பேர்த்தி, சுற்றத்தார்.

(34198) (6.11)

## மத்தல விமான நிலையத்தை இன்றுவரை பார்வையிடலாம்

கொழும்பு,மார்ச்8

ஹம்பாந்தோட்டை, மத்தல மஹிந்த ராஜபக்ஷ விமான நிலையத்தைப் பார்வையிட இன்று வெள்ளிக்கிழமை வரைக்கும் பொது மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த விமான நிலையத்தை நாளாந்தம் 20,000 இற்கும் மேற்பட்டோர் பார்வையிட்டு வருகின்றனர்.

ஹம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, பாடசாலை மாணவர்களுக்கு விமான நிலையத்தை பார்வையிடுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். (ச)

## மருத்துவ சேவை வழங்க மறுத்த 20 வைத்தியர்கள் வேலை நீக்கம்

### இலங்கை தேசிய வைத்தியசாலை தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்8

அவசர மருத்துவ சேவைகளை கடந்தவாரம் வழங்குவதற்கு மறுத்த 20 வைத்தியர்கள் வைத்தியசாலையிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று கொழும்பு தேசிய வைத்தியசாலை புதன்கிழமை அறிவித்தது.

அவசர சேவைகளை வழங்குவதற்கு மறுத்த வைத்தியர்கள் பற்றி சுகாதார அமைச்சுக்கு தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அமைச்சு அவர்களை வேலை நீக்கம் செய்துள்ளது என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் அனில் ஜயசிங்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

வைத்தியர்கள் தமது வேலை நீக்கக் கடிதத்தைப் பெற்றுள்ளனர்.

மருத்துவ சேவைகளை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளமை மருத்துவ விதிகளை மீறுவதாக அமையும். இவ்வாறு வைத்தியசாலையிலிருந்து நிறுத்தப்பட்ட வைத்தியர்கள் சிலர் தேசிய வைத்தியசாலையின் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தில் பதவிகளை வகிப்பவர்களாவர்.

அவசர மருத்துவ சேவையை வழங்க மறுப்பது குற்றவியல் செயலாகும். அது மருத்துவ விதிகளுக்கு எதிரானது.

ஒரு நோயாளி உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தபோது வைத்தியர்கள் கண்களை மூடிக்கொண்டிருக்கக்கூடாது.

இது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கொள்கைக்கு எதிரானது.-என்றார். (ச)

## பஸ் - ஓட்டோ மோதி மூவர் சாவு

கொழும்பு,மார்ச்8

காலி, உனவட்டுன பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை பஸ்ஸும் - ஓட்டோவும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த மூவரே உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோவில் பயணித்த மேலும் ஒருவர் படுகாயமடைந்து கராப்பிட்டி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 24.09.1969

ஆண்டவன் அடியில் 01.03.2011

திதி:- 08.03.2013

### திருமதி செல்வநாதன் செல்வநந்தினி (நந்தினி)

யாழ்ப்பாணம், புன்னாலைக் கட்டுவனை பிறப்பிடமாகவும்
திருகோணமலை உவர்மலையை வசிப்பிடமாகவும் கொண்டவர்

அன்பான கணவனும் அழகான குழந்தையும்
அனைவர்க்கும் வாய்ப்பதில்லை
நன்றான உறவுகள் நட்பான அயலவர்
எல்லோர்க்கும் கிடைப்பதில்லை
எல்லாமே இருந்துமே எமை விட்டுப் பிரியவே
எங்ஙனம் மனது கொண்டாய்
எந்நாளும் உன் நினைவு எம்முள் இருக்குமே
இறவாமல் வாழுமே என்றும்.

4,கோணேசபுரம்,உவர்மலை,
திருகோணமலை.

செல்வநாதன் குடும்பத்தினர்.
(026 3262148)

(சி/6924)(2.6)

021 5671111
advt@uthayan.com

## 60 ஆவது பிறந்த தினவாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்

### கிருஷ்ணபிள்ளை சிவராஜா



பிரதி பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர்,
இலங்கை வங்கி (வட பிராந்தியம்)

DEPUTY CHIEF
SECURITY OFFICER
(NORTHERN
PROVINCE)

அன்பான வார்த்தைகள் பண்பான நடத்தைகள்
மூன்று தசாப்தத்திற்கும் மேலாய்
மூச்சுப் பிடித்து சேவையாற்றிய காலம்.....
இலங்கை வங்கித் தாயின்
வட பிராந்திய பாதுகாப்பு அதிகாரி-எனும்
உன்னத பதவியினின்றும்-இன்று
ஓய்வு பெறும் தங்களை...
ஓய்வுக் காலமது சீரும் சிறப்புமாய் அமைய
மனமார வாழ்த்துகின்றோம்
வாழீ நீ! வளமுடன்!

உதவிப் பொது முகாமையாளரும் ஊழியர்களும்,
இலங்கை வங்கி,வட பிராந்தியம்.

(c/6923) (6.7.11)

கடை வாடகைக்கு

இல.08, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்த 40×19 சதுர அடி கொண்ட மாபிள் பதித்த கடை வாடகைக்கும் மின்பிறப்பாக்கி விற்பனைக்கும் உண்டு.

தொடர்பு: 077 5632 526

(26749)(6.11)

காணி விற்பனைக்கு

நல்லூர் சூழலில் வீட்டுடன் மூன்று பரப்பும், தனியாக இரண்டுபரப்பும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 8323 526
075 5109 327

((33957)(45.6.7)

# ரயிலில் அனுமதிச் சீட்டின்றி பயணித்தால் ரூ.2500 தண்டம்


## புதிய திட்டம் மார்ச் 13 முதல் நடைமுறை

கொழும்பு,மார்ச்8

பயண அனுமதிச்சீட்டு இன்றி ரயிலில் பயணம் செய்யும் நபர்களுக்கு அறவிடப்படும் தண்டப் பணத்தை 2500 ரூபாவாக அதிகரிக்க ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்தப் புதிய திட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட் கிழமையில் இருந்து நடை முறைக்கு வரும் என்று ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது.

மூன்றாம் வகுப்பில் பயணிக்க அனுமதிச் சீட்டு எடுத்துவிட்டு இரண்டாம் வகுப்பில் பயணிக்கும் நபர்களுக்கும் 2500 ரூபா தண்டம் அறவிடப்படும் என்றும் ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச)




'இலங்கையர் என்ற வகையில் நாட்டுக்கு சமாதானத்தைப் பெற்றுக்கொடுக்க அணிதிரள்வோம்' என்ற தொனிப் பொருளுடன் இளைஞர் சமாதானப் பாத யாத்திரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் கதிர்காமம், கிரிவெஹெரவில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதில் மதகுருமார், நாடாளு மன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# துமிந்த சில்வாவுக்கு பிணை கேட்கிறார் அவரின் தந்தை

## உயர் நீதிமன்றுக்கு மனு



கொழும்பு,மார்ச்8

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு பிணை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் துமிந்த சில்வா கைது செய்யப்பட்டுள்ளார்.

துமிந்தவை விடுதலை செய்யுமாறு அவரது தந்தை, உயர் நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார். முல்லேரியாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் துமிந்த சில்வா படுகாயமடைந்துள்ளார். மிகவும் ஆபத்தான நிலையில் சிங்கப்பூரில் சிகிச்சை பெற்று வந்த துமிந்த சில்வா தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

எனவே, அவருக்கு சிறந்த முறையில் தொடர்ந்தும் சிகிச்சைகள் அளிக்க வேண்டிய நிலைமை உள்ளது.

இந்தநிலையில் துமிந்தவை விடுவிக்குமாறு கோரி அவரின் தந்தை நேற்று முன்தினம் புதன்கிழமை மனுவொன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் கொலை வழக்கு தொடர்பில் முக்கிய சந்தேக நபராக துமிந்தசில்வா கூறப்படுகின்ற போதும், அவருக்கு எதிரான சட்ட நடவடிக்கையில் மென்மைப் போக்கு கடைபிடிக்கப்படுவதாக எதிர்த்தரப்பால் குற்றம் சுமத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கடற்சிப்பிகளை கடத்த முயன்ற சீனப் பிரஜை வசமாக மாட்டினார்

கொழும்பு,மார்ச்8

சட்டவிரோதமாக ஒரு தொகை கடற்சிப்பிகளை வெளிநாட்டுக்குக் கடத்துவதற்கு முற்பட்ட சீனப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சுமார் 6 கிலோகிராம் கடற் சிப்பிகளுடன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 10.30 மணிக்கு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சுங்கப் பணிப்பாளர் வெல்ஸி காமினி குறிப்பிட்டார்.

கிடைத்தற்கரிய விசேட இனத்தைச் சேர்ந்த இந்த கடற்சிப்பிகள் சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியானவை என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

சந்தேகநபர் விமான நிலைய சுங்க உயிர் பல்வகைத் தன்மை பிரிவு உத்தியோகத்தர்களால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச)

# பாவனைக்கு உதவாத பேரீச்சம் பழங்கள்

## நுகர்வோர் அதிகாரசபையால் பறிமுதல்

கொழும்பு,மார்ச்8

சந்தைக்கு விநியோகிப்பதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த காலாவதியான சுமார் ஆயிரத்து 800 கிலோகிராம் பேரீச்சம் பழங்களை நுகர்வோர் விவகார அதிகார சபையினர் கைப்பற்றியுள்ளனர்.

புறக்கோட்டை, நான்காம் குறுக்குத் தெருவில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போதே இந்தக் காலாவதியான பேரீச்சம்பழங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை பாவனைக்கு உதவாத சுமார் 300 கிலோகிராம் நெத்தலியும், நுகர்வோர் விவகார அதிகார சபையால் கைப்பற்றப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட நெத்தலி மற்றும் பேரீச்சம்பழங்களின் பெறுமதி சுமார் ஐந்து லட்சம் ரூபாவுக்கும் அதிகம் என்று கூறப்படுகிறது. இந்த உணவுப் பொருள்களை களஞ்சியப்படுத்தி வைத்திருந்த வர்த்தகருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (ச)

# பிரிட்டிஷ் பிரஜை கடலில் மூழ்கி சாவு

கொழும்பு,மார்ச்8

பெந்தோட்டைக் கடற்பரப்பில் தனது மனைவியுடன் நீராடிக்கொண்டிருந்த பிரிட்டிஷ் பிரஜை நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

ரிச்சட் ஜோன் வங்ஸ்டான் (வயது - 63) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் பெந்தோட்டப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச)

**TV கள் மலிவு விற்பனை**

மிக மிக மலிவு விலையில் SONY Flat Wega TV கள் 21''- 13000/= முதல், 29''- 16000/=
Panasonic (பனசோனிக்) 29'' - 15000/= Box வகைகள், (2.5) DVD -4200/=
தொடர்பு: 0770440570 (அப்பன்)
சோனி ரேற் சென்ரர் (கொமர்சல் வங்கி எதிரே)
56, K.K.S வீதி, சுன்னாகம்.
(341241)(7.11)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யாழ்.பல்கலைக்கழகத்தின்
28 ஆவது பட்டமளிப்பு
விழாவில் சைவ சித்தாந்த
முதுகலைமாணி பட்டம்
(அதிவிசேட சித்தி) பெற்ற
யா/போக்கட்டி றோ.க.த.க.பாடசாலை
அதிபர் கு.இரவீந்திரன் அவர்களை
[B.A., Dip.in.Edu., M.ED - M.A.(SS.D.S)]
பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல
பட்டங்களைப் பெற்று சீரும் சிறப்புடனும்
வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்;
ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/போக்கட்டி றோ.க.த.க.பாடசாலை,
கொடிகாமம்.



**பதவி வெற்றிடம்**

அச்சுவேலி, ஏழாலையில் கிளைகளைக் கொண்ட கணினிக் கல்லூரிக்கு
பின்வரும் வெற்றிடங்களுக்கு ஆள் தேவை.
★ சந்தைப்படுத்தல் பிரதிநிதி
தகுதி:O/L, A/L
பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்.
5Km தூரத்துக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும் (ஆண்கள் மட்டும்)
★ அலுவலக உதவியாளர்
தகுதி: A/L, Ms OFFICE
அச்சுவேலி கிளையிலிருந்து 5Km இற்கு உட்பட்ட பெண்கள் மட்டும்
(வயது எல்லை- 18-25)
தொடர்பு: 0772395823
(34270)(6.11)

**முதலாம் ஆண்டு நினைவு தினம்**

திருமதி
பாரதி இரத்தினராசா



தோற்றம்
12.07.1947
மறைவு
08.03.2012

அல்வாயூர்க் கவிஞர் பெற்றெடுத்த எங்களம்மா
எங்களை நீ விட்டுச் சென்று பன்னிரண்டு திங்களம்மா
அப்பாவோ சென்று இருபத்து ஐந்தாண்டம்மா
ஆனாலும் ஆறுகின்றோம் அம்மாவே! நாம் இன்று
அப்பாவிடம் நீங்கள் சேர்ந்தீர்கள் என்று.

குடும்பத்தினர்,
நி.சர்வேசன் (மருமகன் கனடா),
ச.சுதர்சனா (மகள் கனடா),
ச.மமதி (பேத்தி - கனடா),
கோ.கந்ததாஸன் (மருமகன் - சுவிஸ்),
க.சங்கீத்தா (மகள் - சுவிஸ்),
க.லகீரன் (பேரன் - சுவிஸ்),
க.ராகவி (பேத்தி சுவிஸ்),
க.துரணி (பேரன் சுவிஸ்),

பாரதி பவனம்
கவிஞர் செல்லையா வீதி,
அல்வாய்.
(27765)(25.6)

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும்**

சுப்பிரமணியம் ஜனார்த்தனன்



மலர்வு
1985.11.29
உதிர்வு
2013.02.06

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று
(08.03.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணி
யளவில் அவரின் இல்லத்தில் இடம்பெறும். அதனைத்
தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும்
கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய வாய்க்கால்,
மிருசுவில்.
- குடும்பத்தினர்.

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**



தோற்றம்
22.04.1922
மறைவு
07.02.2013

அமரர்
S.மரியானாப்பிள்ளை

கடந்த 07.02.2013 அன்று இறைபதம் அடைந்த
சொலைமரியானாப்பிள்ளை அவர்களின் 31 ஆம் நாள்
நிகழ்வு அன்னாரது இல்லத்தில்
(இல.31, கண்டி வீதி, யாழ்ப்பாணம்) நாளை
(09.03.2013) சனிக்கிழமை நடைபெறும். காலை 6
மணிக்கு புனித புவானியார் ஆலயத்திலும்
(யாழ்ப்பாணம்) மாலை 6.30 மணிக்கு அன்னை
வேளாங்கண்ணி ஆலயத்திலும் (செட்டித்தெரு,
கொழும்பு - 13) திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
அன்றைய தினம் அவரது இல்லத்தில் நண்பகல் 12
மணிக்கு இடம்பெறும் ஆத்மசாந்தி வழிபாட்டிலும்,
மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு
உற்றார், உறவினர், அருட்தந்தையர்கள்,
அருட்சகோதரிகள், நண்பர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள்:- அருட்சகோதரி றோஸ்மலர் அ.கா., மேரிறோசா எலியாஸ்,
யோகராசா செபமாலை (கனடா), மேரி றோசாலியா (கனடா),
மரியாகோறற்றி (பாரா - நோர்வே)
மருமக்கள்:- யூலியஸ் மகேந்திரன் (கனடா), விமலா (கனடா),
நற்குணரட்ணம் ஜோசப் (நோர்வே)
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

இல.31, கண்டிவீதி.
யாழ்ப்பாணம்.
(34209)(2.6)

## மீள்தன்மை கொண்ட அதிநவீன மின்கலம்

தொழில்நுட்பப் புரட்சியின் விளைவாக நாள்தோறும் புதிய புதிய சாதனங்கள் அறிமுகமாகியவண்ணமே காணப்படுகின்றன. இதன் தொடர்ச்சியாக தற்போது முறுக்கப்படக்கூடியதும், வளைக்கப்படக் கூடியதும் மீள்தன்மை கொண்டதுமான மின்கலம் (Battery) உருவாக்கப் பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலாக இந்த மின்கலங்கள் மீண்டும் மீண்டும் மின்னேற்றம் செய்து பயன்படுத்தக் கூடியதாகக் காணப்படுகின்றமை விசேட அம்சமாகும்.


இந்த நவீன மின்கலத்தின் கண்டுபிடிப்பால், எதிர் காலத்தில் உருவாக்கப்படும் மின்கலத்தை அடிப்படையாகக் கொண்ட இலத்திரனியல் சாதனங்களிலும் பல்வேறு மாற்றங்கள் காணப்படும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## புதிய தொழில் நுட்பத்துடன் சாம்சங் கலக்சி எஸ்4

மொபைல் போன் மற்றும் லாப்ரொப் கணினி போன்றவற்றை, கண்களின் அசைவைக் கொண்டு இயக்கக்கூடிய கணினி பயன்பாட்டு மென் பொருள் பயன்பாட்டுக்கு வந்திருப்பதாக சாம்சங் நிறுவனம் தெரிவித்துள்ளது.



## 10 விரல்களையும் பயன்படுத்தக் கூடிய All&In&One PC



ECS நிறுவனமானது அனைத்துப் பாகங்களையும் ஒருங்கே கொண்டு அமைக்கப்பட்ட அதிநவீன All& In-&One PC ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.

G24 எனும் தொடரிலக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்தக் கணினியானது விண்டோஸ் 8 இயங்குதளத்தில் செயற்படக்கூடியதாகக் காணப்படுகின்றது.

மேலும் இதில் காணப்படும் 23.6 அங்குல அளவுடைய தொடுதிரையில் ஒரே நேரத்தில் 10 விரல்களையும் பயன்படுத்திக் கையாளக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மெல்லியதான அமைப்புடைய இக்கணினியில் Mini&ITX Motherboard இணைக்கப்பட்டுள்ளது.

அப்பிள் நிறுவனத்தோடு போட்டி போட்டுக்கொண்டிருக்கும் சம்சங் நிறுவனம் ஐ-போனை மிஞ்சும் வகையில் தன்னுடைய அடுத்த தயாரிப்பை எதிர்வரும் 14ஆம் திகதி வெளியிடவுள்ளதாக அறிவித்துள்ளது


கலக்சி எஸ்4 என்ற இந்தப் புதிய கைபேசி, பார்ப்பவரின் கண் அசைவைக் கொண்டு பக்கங்களை நகர்த்தும் தன்மை உடையதாக இருக்கும் என்று சம்சங் நிறுவன ஊழியர் ஒருவர் தெரிவித்துள்ளார். 5 அங்குல திரை கொண்ட இந்த கைபேசியில், 13 மெகா பிக்ஸல் கமராவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சம்சங் நிறுவனம், கடந்த ஜனவரி மாதம் ஐரோப்பாவில் ஐ-ஸ்க்ரோல் என்ற வணிக முத்திரைக்காகப் பதிவு செய்து, பெப்ரவரி மாதம் அமெரிக்காவில் சம்சங் ஐ-ஸ்க்ரோல் என்ற தலைப்பில் பதிவு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

கைபேசி மற்றும் மடிக் கணினிகள் போன்றவற்றை கண்களின் அசைவைக் கொண்டு இயக்கக்கூடிய கணினி பயன்பாட்டு மென்பொருள் பயன்படுத்தப்பட்டிருப்பதாக சம்சங் நிறுவனம் தெரிவித்துள்ளது. எனவே, மிகுந்த எதிர்பார்ப்புக்களும் ஊகங்களும் இந்த புதிய வெளியீடு குறித்து இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை கூகுள், பேஸ்புக் மற்றும் பல மென்பொருள்கள் அறிமுகமான குறுகிய வருடங்களிலேயே இந்த விடயத்தில் பரிணமிக்க, அவர்களுக்கெல்லாம் முன்னோடியான மைக்ரோசொப்ட் சிறிது தாமதமாக இந்த விடயத்தை கையில் எடுத்து பல வசதிகளை அதன் பயனாளர்களுக்குத் தந்துள்ளது.



## விண்டோஸ் 7 ஐ முழுமையாக தமிழில் பயன்படுத்த...

கணினி உலகம் மற்றும் இணையத்தில் ஒவ்வொரு நிறுவனமும், தனக்கான இடத்தைத் தக்கவைத்துக் கொள்ளவும், அதிகமான வாசகர்களைப் பெறவும் நிறைய வசதிகளை அறிமுகம் செய்வது வழக்கம்.

அதில் முக்கியமானது தங்கள் படைப்புகளை குறிப்பிட்ட மொழிகளில் தந்து அதிக பயனாளர்களைப் பெறுவது.

இதுவரை கூகுள், பேஸ்புக் மற்றும் பல மென்பொருள்கள் அறிமுகமான குறுகிய வருடங்களிலேயே இந்த விடயத்தில் பரிணமிக்க இவர்களுக்கெல்லாம் முன்னோடியான மைக்ரோசொப்ட் சிறிது தாமதமாக இந்த விடயத்தை கையில் எடுத்து பல வசதிகளை அதன் பயனாளர்களுக்குத் தந்துள்ளது.

அந்த வகையில் விண்டோஸ் 7 இயங்குதளம் கொண்ட கணினியை எப்படி தமிழில் பயன்படுத்துவது என்று பார்ப்போம்.

முதலில் கீழே உள்ள இணைப்பில் சென்று தமிழுக்கான விண்டோஸ் 7 மொழி இடைமுகத் தொகுப்பை (Lanugage Interface Pack & LIP) தரவிறக்கம் செய்யுங்கள். 32 பிட் அல்லது 64 பிட் ஏதேனும் ஒன்றை மட்டும். எது என்ற குழப்பத்தில் உள்ளவர்கள் 32 பிட்டை தரவிறக்கம் செய்யவும்.

உங்கள் கணினியில் தரவிறக்கமான பின்பு, அதை உங்கள் கணினியில் நீங்கள் இன்ஸ்டால் செய்ய வேண்டும்.

Next என்பதைத் தெரிவு செய்து, பின் அடுத்து வரும் பகுதியில் ஐ Accept the license terms என்பதைத் தெரிவு செய்து, மீண்டும் ஒரு Next, அடுத்து மீண்டும் ஒரு Next, இப்போது தமிழ் மொழி உங்கள் கணினியில் இன்ஸ்டால் ஆகும்.

இன்ஸ்டால் ஆன பின் மீண்டும் Next என்பதை கிளிக் செய்யுங்கள்.

இப்போது நீங்கள் Display மொழியைத் தெரிவு செய்ய வேண்டும். அதில் தமிழ் என்பதைத் தெரிவு செய்து 'Apply display language to welcome screen and system accounts' என்பதை கிளிக் செய்து 'Change Display Lanugage' என்பதை கிளிக் செய்யுங்கள்.

அவ்வளவு தான். இப்போது உங்கள் கணினியை ஒரு முறை நீங்கள் Restart செய்ய வேண்டும்.

இனி உங்கள் கணினி தமிழில் இயங்க ஆரம்பிக்கும். அனைத்து வசதிகளும், செயல்களும் தமிழில் இல்லாவிட்டாலும் பொதுவான பல விடயங்கள் தமிழில் இருக்கும்.

இனிமேல் ஆங்கிலம் தெரியாதவர்கள் கூட கணினியில் அடிப்படை விடயங்களைச் செய்ய முடியும்.

**மீண்டும் ஆங்கிலத்துக்கு மாற:** ஆரம்ப் மெனு கட்டுப்பாட்டுப் பலகம் காட்சி மொழியை மாற்றவும் என்பதை கிளிக் மாற்றலாம். இவ்வாறு வராதவர்கள் கட்டுப்பாட்டுப் பலகம் வட்டாரம் மற்றும் மொழி என்பதை கிளிக் செய்து வரும் சிறிய விண்டோவில் 'விசைப்பலகைகளும் மொழிகளும்' என்கிற பகுதியில் காட்சி மொழி ஒன்றைத் தெரிவு செய்யவும் என்பதற்கு கீழே English என்பதைத் தெரிவு செய்யுங்கள்.

ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு மாற (இன்ஸ்டால் செய்த பின்): Control Panel Change Display Language என்பதைக் கிளிக் மாற்றலாம்.

இவ்வாறு வராதவர்கள் Control Panel Region and Language என்பதை கிளிக் செய்து வரும் சிறிய விண்டோவில் Keyboards and Language என்பதில் Choose a Display Language என்பதன் கீழே தமிழைத் தெரிவு செய்து கொள்ளலாம். இணையத்தள முகவரி

http://www.microsoft.com

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, ஜோதி புக் சென்ரர் – மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571.

# வாய்ச்சொல்லில் பயனில்லை

இன்று மகளிர் தினம். இவ்வளவு நாளும் உறங்கிக் கிடந்த மகளிர் அமைப்புகளுக்கு உறக்கம் கலையும் நாள். தாம் இருக்கின்றோம் என்பதைக் காட்டுவதற்காக அவசர அவசரமாக அந்த அமைப்புகள் பேரணி, பொதுக்கூட்டங்கள், கலை நிகழ்வுகள், கோலம் போடுதல் முதலான போட்டிகள் என்பவற்றை நடத்துவதற்கு ஏற்ற நாளும் இதுவே.

பெண் விடுதலை பற்றியும், அடிமைச் சங்கிலியை உடைப்பது பற்றியும், ஆணாதிக்கத்தின் அடக்கு முறைகள் பற்றியும் மேடைகளில் இந்த மகளிர் அமைப்புப் பிரதிநிதிகள் இன்று முழங்கித் தள்ளுவார்கள். அத்தோடு அவர்களது கடமை முடிந்து விடும். இன்றைய நிகழ்வை பதிவாக்கி அதைக் காண்பித்தே நாலைந்து செயற்திட்டங்களை பெற்று விடுவார்கள். பின்னர் அடுத்த மகளிர் தினம் வரும் வரை பழையபடி உறங்கு நிலைதான்.

உண்மையில் மகளிர் தொடர்பான பாரதூரமான அடக்குமுறைகள் வன்முறைகள் என்பன இலங்கையில் தமிழர் பகுதியிலேயே அதிகமாக நிகழ்கின்றன. அதேபோன்று மகளிர் நலன் காக்கும் அமைப்புகளுக்கும் இந்தப் பகுதிகளில் குறைவில்லை. ஆனால் அவற்றில் எத்தனை அமைப்புக்கள் இதய சுத்தியோடு பெண்களின் மேம்பாட்டுக்காக உழைக்கின்றன?

சிலநாள்களுக்கு முன்னர் விசேட தேவையுடைய தன்னுடைய மகனுக்கு உதவி கோரி ஒரு தாய் வந்திருந்தாள். அவரும் சக்கர நாற்காலியின் உதவியோடுதான் நகரக் கூடியவர். கணவர் இல்லை. பெற்ற பிள்ளையை உழைத்துக் காப்பாற்ற அவருக்கு இயலாத நிலையில் பிறரின் உதவியை வேண்டி நின்றாள்.

''அம்மா! உங்களைப் போன்ற பெண்கள் மகளிர் அமைப்புகள் மூலம் உதவியைப் பெறலாம் தானே?'' என்று அவரிடம் கேட்ட போது இப்படிச் சொன்னார்.

''அவையின்ர 'புரஜெக்ட்டில' இதுக்கெல்லாம் உதவி வழங்க முடியாதாம்''.

சொல்லிவிட்டு அந்தத் தாய் எதிர்ப்பட்டோரிடம் எல்லாம் கையேந்தத் தொடங்கினாள்.

இதுதவிர யாழ்ப்பாணத்தில் மகளிர் உரிமைகளை குழிதோண்டிப் புதைக்கும் வகையில் ஏராளமான நிகழ்வுகள் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன. அவற்றுக்கெல்லாம் இந்த மகளிர் அமைப்புக்கள் ஒரு அறிக்கை தானும் விடவில்லை. தாம் உண்டு தம் பாடு உண்டு என்று ஒதுங்கிக் கொண்டு விட்டன. அண்மையில் மண்டைதீவில் மூன்று வயதுச் சிறுமி ஒருத்தி பாலியல் கொடூரத்தின் பின்னர் கொலை செய்யப்பட்டிருந்தார். மனதை பிழியும் இந்தச் சம்பவத்துக்குக் கூட யாழ்ப்பாணத்தில் உள்ள மகளிர் அமைப்புக்கள் போராட முன்வரவில்லை. ஆனால் மண்டைதீவுச் சம்பவம் நிகழ்வதற்கு சில நாள்களுக்கு முன்னர் இந்தியாவில் மும்பையில் கூட்டுப் பாலியல் வன்முறையில் சிக்கி உயிரிழந்த மாணவிக்காக இந்தியாவில் உள்ள ஒட்டு மொத்த மகளிர் அமைப்புக்களும் எவருடைய தூண்டுதலும் இன்றி களத்தில் இறங்கிப் போராடின. இதன் விளைவாக பெண்கள் மீதான பாலியல் குற்றங்கள் புரிவோருக்கான தண்டனைகளை கடுமையாக்கியுள்ளது இந்திய அரசு.

ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எதிலும் இறங்காமல் '' பெண் விடுதலை'' என்று வெறும் வாய்ப்பந்தல் போடுவதால் பயன் ஏதும் இல்லை.

ஆனாலும் இதைப்பற்றி மகளிர் அமைப்புகள் கவலைப்படப் போவதில்லை. பிரபல்யமும், செயற் திட்டங்களும் கிடைத்தால் அவைகளுக்குப் போதும்.

மகளிர் அமைப்புகளே! தாரை தப்பட்டை முழங்க இன்றைய விழாவுக்கு புறப்படுங்கள். நீங்கள் கிழிக்கிற கிழியில் தோரணங்கள் அறுந்து தொங்க வேண்டாமா?

# பெண்கள் மீதான வன்முறையற்ற புதிய உலகு மலரட்டும்......

■ தர்மவிலாஷினி
கௌரி முகுந்தன்

மகளிரைக் கௌரவப்படுத்துவதற்காகவும், அவர்களது மகத்துவத்தைப் பறைசாற்றுவதற்காகவும் உலகளாவிய ரீதியில் அனைவராலும் மார்ச் மாதம் 08 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

பெண்கள் இன்றைய சமுதாயத்தை முன்னேற்றுவதில் முதுகெலும்பாகவும், பயன்தரும் நாற்றுக்களாகவும் தங்களை அர்ப்பணிப்பதையும், அர்ப்பணித்துக் கொண்டுள்ளதையும் காணக் கூடியதாக உள்ளது.

இயற்கையின் படைப்பிலே அன்பிற்கும், தாய்மைப் பண்பிற்கும் உறைவிடமாகப் பெண்கள் விளங்குகின்றனர். அறிவு, ஆக்கம், அர்ப்பணிப்பு ஆகிய மாபெரும் முச்சக்திகள் இவர்களிடமே உள்ளன. இத்தகைய மாபெரும் சக்திகளை பெண்ணானவள் தக்க தருணத்தில் பயன்படுத்தும்போதே அவளால் தனது சிறப்பான ஆற்றலை வெளிப்படுத்தி நிற்க முடிகிறது. இவர்களது அறிவுத்திறனும், ஆக்கமும் அர்ப்பணிப்புத் தன்மையும் ஒரு சேர மிளிருமிடத்து பெண் குலத்துக்குப் பெருமை சேர்கிறது.

*''மங்கையராய்ப் பிறப்பதற்கே - நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா..''*


என்னும் கவிமணி அவர்களின் வரிகளிலிருந்து பெண்மையின் மகத்துவத்தை எம் அனைவராலும் புரிந்து கொள்ள முடியும். உலக வாழ்க்கையின் ஜீவநாடியாக விளங்கும் மாதர் குல மாணிக்கங்கள் இன்று தடம் பதிக்காத துறைகளே இல்லை என்று கூறும் அளவுக்கு ஆண்வர்க்கத்தைப் புறந்தள்ளி எந்தவொரு வேலையையும் தங்களால் சீராகச் சிறப்பாகச் செய்திட இயலும் என இன்றைய பெண்கள் மார்தட்டி முன்வருவதைக் கண்டு ஆணுலகம் அஞ்சுகிறது. இன்னும் சில ஆண்டுகளின் பின், முன்பு பெண்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்ததைப் போன்று ஆண்களும் வீட்டில் ஒதுங்கியிருக்க வேண்டிய நிலை வந்துவிடுமோ என்று கவலைப்படும் அளவுக்கு, பெண்கள் பல்வேறு தொழிற்துறைகளிலும் தமது திறனை வெளிப்படுத்தி தங்களை உயர்த்திக் கொண்டு விட்டனர்.

இத்தகையதொரு உயர்ச்சி என்றாவது ஒருநாள் நிச்சயம் நிறைவேறியே தீரும் என்ற தீர்க்கதரிசனத்தினாலேயோ என்னவோ, பெண்ணைப் பற்றி அன்றே பாரதி விடுதலைக்கும்மி வாயிலாக பாடிச் சென்றுள்ளான்.

*''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள்
செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்,
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே
-பெண்
இளைப்பில்லை காண்...''*

இத்தகைய பெண்களின் வளர்ச்சியை ஆண்களில் ஒரு தரப்பினர் ஆதரிக்கும், அனுசரிக்கும், தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தும் அதேவேளை, மற்றொரு தரப்பினர், பொறாமை காரணமாகவோ, ஆணாதிக்க மனநிலை காரணமாகவோ பெண்களது திறன் வளர்ச்சியை வெறுக்கும் சூழ் நிலையையும் இன்று காணக்கூடியதாக உள்ளது. இவை ஒருபுறமிருக்க, இன்றைய சூழலில் பெண்களுக்கெதிரான உரிமை மீறல்களும், வன்முறைகளும், துஷ்பிரயோகங்களும் கட்டவிழ்த்து விடப்பட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இலங்கையைப் பொறுத்த வரையில் மனுக்குலத்தின் வாழ்வுக்கும் வனத்துக்கும் ஊற்றாகவும் உயிர்ப்பாகவும் இருக்கும் தாய்க் குலத்தை மதிப்பதற்காக மானுடன் தேர்ந்தெடுத்த அனைத்துலக மகளிர் தினம்– மார்ச் 8 ஆம் திகதி இன்றாகும். அமெரிக்காவின் நியூயோர்க் நகர நெசவுத் தொழிலாளர்களான பெண்கள், தமக்குச் சம உரிமை வேண்டி 1857 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதியன்று வீதியில் இறங்கி தொழிற்சங்கப் போராட்டத்தில் குதித்தனர். அதன் பின்னர் டென்மார்க் தலைநகர் கோப்பஹேகனில் 1910 ஆம் ஆண்டில் நடைபெற்ற சர்வதேச பெண்கள் சமவுரிமை மாநாட்டில் நியூயோர்க் நகர நெசவுப் பெண்களின் உரிமைக் கோரிக்கைப் போராட்டம் நினைவு கூரப்பட்டது. அந்தப் போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்த மார்ச் 8 ஆம் திகதியை சர்வதேச மகளிர் நாளாக அனுஷ்டிக்கவும் தீர்மானிக்கப் பட்டது. அதன்படி 1911 ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த 102 வருடங்களாக இந்தத் தினம் சர்வதேச மகளிர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.



ஒவ்வொரு 7 மணித்தியாலத்துக்கொருமுறை யாராவது ஒரு பெண் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்படுகிறாள் என்பது அதிர்ச்சியூட்டும் தகவல். இன்று இலங்கையில் பெண்களின் உரிமையைப் பாதுகாப்பதற்கு பல்வேறு அமைப்புகள் செயற்படுகின்ற போதிலும் ,பாடசாலைகள், வீடுகள், வேலைத்தளங்கள் போன்ற பல்வேறுபட்ட இடங்களிலும் பெண்கள் ஆண்களால் பாலியல் துஷ்பிரயோகம் உட்பட பல தரப்பட்ட வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படுவதும் , அவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு இம்சிக்கப்படுவதும் இன்றளவும் குறைவடைவதாக இல்லை. மாறாக, நாளுக்குநாள் அத்தகைய சம்பவங்கள் அதிகரித்துச் சென்ற வண்ணமுள்ளன. இவற்றை தடுத்து நிறுத்தப் பல்வேறு மட்டங்களிலும் மேற்கொள்ளப்படும். முயற்சிகள், சாதகமான, பூரண திருப்தியான பலாபலனை நல்கவில்லை என்பது கசப்பானதொரு உண்மை.

இலங்கையில் மட்டுமன்றி உலக நாடுகள் பலவற்றிலும் கூட, பெண்களுக்கான சம உரிமை வழங்குவதன் மூலம் நாகரிகமடைந்த நாடுகளாக அடையாளப்படுத்தப்படும் நாடுகளில் கூட, இன்று பெண்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம், வன்முறைகள் எனப் பலதரப்பட்ட நியாயமற்ற செயற்பாடுகள் பரவலாக இடம்பெற்றே வருகின்றன.

வெறுமனே பெண்ணியம் பெண் விடுதலை தொடர்பாக வாய் கிழியப் பேசுவதில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படப்போவதில்லை. சமூகத்தில் ஆண், பெண்ணுக்கிடையே காணப்படும் பால்நிலை சமத்துவமின்மையானது களையப்பட வேண்டும். போகப் பொருளாக பெண்களைக் கருதும் ஆண்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

சமூகத்தில் பெண்கள் பெண்களாக மதிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகள், துஷ்பிரயோகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு பெண்கள் தொடர்பான இறுக்கமான சமூகப் பார்வையில் மாற்றங்கள் எற்படும் மகத்துவம் மிக்க அந்த நாளே உண்மையான மகளிர் தினம்.

''பெண்கள் வன்முறையற்ற உலகை கட்டியெழுப்புவதற்காக அனைவரும் ஒன்றிணைவோம்.''

தருவது வித்தியா

## இன்றைய நாள்
### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** வெளியூரிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். உத்தியோகத்தில் வேலைச் சுமை குறையும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். நட்பு வட்டாரம் விரிவடையும்.

**இடபம்:** சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் இருக்கும். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள். உதவி கேட்டு தொந்தரவுகள் அதிகரிக்கும். அடுத்தவர்களைக் குறை கூறிக் கொண்டிருக்காதீர்கள்.

**மிதுனம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப் பவர்களால் இருந்துவந்த தொல்லைகள் அகலும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். எதிர்காலத்திற்கான முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

**கடகம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்கசமயத்தில் கிடைக்கும். பிரியமானவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகளால் இலாபத்தை அதிகரிப்பீர்கள்.

**சிங்கம்:** எண்ணம்போல் செயற்பட வேண்டும்மென எண்ணுவீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

**கன்னி:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. அயல் வீட்டாரின் அன்புத்தொல்லை விலகும்.

**நாளை**

மாசி- 25 சனிக்கிழமை 09.03.2013
திதி: திரயோதசி பி.இ. 04.11 வரை
நட்சத்திரம்: திருவோணம் பி.ப. 02.01 வரை
சுபநேரம்: 03.23- 04.53 வரை
இராகுகாலம்: 09.23- 10.53 வரை

**துலாம்:** எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். அரச காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** சோர்வு நீங்கி புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். சகோதர வகையில் மகிழ்ச்சியுண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**தனுசு:** ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டி வரும். கோபத்தால் இழப்புகள் ஏற்படும். சிலர் உங்களிடம் நயமாகப்பேசினாலும் சொந்த விடயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் அளவாகப் பழகுங்கள்.

**மகரம்:** உறவினர்களுடன் மனத்தாங்கல் வரும். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். தடைகளைத் தாண்டி முன்னேறும் நாள்.

**கும்பம்:** நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுண்டு.

**மீனம்:** தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் மதிப்பார்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். வியாபாரத்தில் இலாபம் உண்டு. உத்தியோகத்தில் தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். வீண் அலைச்சல் நீங்கும்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | 6 | | | 1 | | 4 | |
| | 9 | 8 | | 4 | 7 | 1 | 2 | |
| | 3 | | | | | | | 7 |
| 4 | 8 | | | 9 | | 5 | | 3 |
| | 7 | | | | | | 8 | |
| 9 | | 5 | | 3 | | | 1 | 2 |
| 6 | | | | | | | 5 | |
| | 5 | 2 | 1 | 7 | | 9 | 6 | |
| | 1 | | 6 | | | 2 | | 4 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 4 | 3 | 6 | 7 | 9 | 2 | 8 |
| 8 | 2 | 6 | 1 | 4 | 9 | 5 | 3 | 7 |
| 7 | 9 | 3 | 2 | 8 | 5 | 6 | 4 | 1 |
| 1 | 3 | 7 | 4 | 9 | 6 | 2 | 8 | 5 |
| 6 | 4 | 5 | 7 | 2 | 8 | 3 | 1 | 9 |
| 9 | 8 | 2 | 5 | 3 | 1 | 4 | 7 | 6 |
| 2 | 6 | 9 | 8 | 1 | 3 | 7 | 5 | 4 |
| 4 | 5 | 1 | 9 | 7 | 2 | 8 | 6 | 3 |
| 3 | 7 | 8 | 6 | 5 | 4 | 1 | 9 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1—9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1—9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1—9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
25.03.1967

மறைவு
08.02.2013

### அமரர் கிருஸ்ணபிள்ளை பிறேமதாஸ்

(முகாமைத்துவ உதவியாளர், வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி)

கடந்த 08.02.2013 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைத்தொடர்புகள் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (09.03.2013) சனிக்கிழமை காலை 6 மணியளவில் தெணியம்மன் ஆலய அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கதிரைவேற்பிள்ளை வீதி,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

(சு/6925) (45.6.7)



## 45ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்தியமும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 | 23 |
| 05 | 01 |
| 1934 | 2013 |

அமரர்

### சின்னட்டி செல்லையா

நீங்கள் மறைந்து 45 நாள்களாகி விட்டது ஐயா!
மறைந்து விட்டீர்கள் என்பதை இன்னமும்
எங்கள் மனங்கள் ஏற்க மறுக்கின்றன. வீட்டில்
நீங்கள் இருக்கின்றீர்கள் என்ற நினைவுதான்
இப்பவும் எங்களுக்கு
பாசமுள்ள சகோதரங்கள் நாங்கள் என்று எப்போதும்
சொல்லுவீர்கள். அதை நிரூபித்துக் காட்டவா?
உங்கள் தம்பியையும் அழைத்துச் சென்றீர்கள்,
இன்று வீட்டில் உங்கள் ஆத்மா சாந்தியடைய
வேண்டி கொண்டாட்டம் நடைபெறுகின்றது.
இனி எங்கள் வீடுகளில் நடைபெறும் எல்லாக்
கொண்டாட்டங்களிலும் நீங்கள் இல்லையே!
என்ற கவலைதான் எங்களை கலங்கவைக்கும்.

கடந்த 23.01.2013 இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை இன்று (08.03.2013) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் அனைவரும் பங்கு கொள்வதோடு தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கலைநகர்,
அளவெட்டி தெற்கு.

குடும்பத்தினர்.

(34176)(10.6.7)

# ஜெனிவாவில் இலங்கை மீதான பிரேரணைக்கு அரசே காரணம்

## ரணில் குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச்8
இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட வுள்ள பிரேரணைக்கு இலங்கை அரசே காரணமாகும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கட்சியின் சில உறுப்பினர்களை அவர் சந்தித் துப்பேசும்போதே இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறிய தாவது:- நாம் பதவியில் இருந்த போது, ஐக்கிய நாடுகள் சர்வதேச குற்றவியல் சாசனத்தில் இருந்து இலங்கை விலக்கப் பட்டிருந்தது. எனினும் 2006 ஆம் ஆண்டில் அரசு இதனை வரவேற்றது. அதனாலேயே அரசு இவ்வாறான அழுத்தத்தை சந்திக்கிறது.

எனவே அரசு இனி சர்வதேச நாடுகளுடன் ஒத்துச் செயற்படுவதைவிட வேறுவழியில்லை. ஆனால் அதனை நாம் கூறினால், எம்மைப் புலி என்று கூறுவார்கள். இது ஒன்றும் புதிய விடயம் இல்லை.-என்றார். (ச)

# ஜூலைக்கு பின்னரே பஸ் கட்டண உயர்வு

## பஸ் சங்கங்களும் அதற்கு இணக்கம் தெரிவித்தன என்கிறார் ரட்ணாயக்க

கொழும்பு,மார்ச்8
பஸ் கட்டணத்தை அதிகரிக்குமாறு தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ள நிலையில், எதிர்வரும் ஜூலை மாதம் வரை பஸ் கட்டணத்தில் எவ்வித அதிகரிப்பும் செய்யப்படமாட்டாது என்று தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர் சி.பி. ரட்ணாயக்க தெரிவித்தார்.

கடந்த எட்டு வருடங்களுள் 12 தடவைகள் பஸ் கட்டணங்களில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. அதன்போது வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பியிருந்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-
16 ஆயிரத்து 652 தனியார் பஸ்கள் நாட்டில் சேவையில் ஈடுபடுகின்றன. அவற்றுள் மாகாண சபை பஸ்களின் எண்ணிக்கை 14 ஆயிரத்து 69 ஆகும்.மாகாணங்களுக்கிடையில் 2 ஆயிரத்து 583 பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன.



2004 ஆம் ஆண்டிலிருந்து கடந்த வருடம் வரை 13 தடவைகள் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள் ளன. அதில் 2004 ஆம் ஆண்டில் இரண்டு தடவைகள் அதிகரிக்கப் பட்டது. அதன் பின்னர் 2007 ஆம் ஆண்டுவரை தலா ஒவ்வொரு தடவையும், 2008 இல் 3 தடவைகளும் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன. 2009 ஆம் ஆண்டில் 2 தடவைகளும், 2010, 2011, 2012 ஆகிய ஆண்டுகளில் ஒவ்வொரு தடவையும் பஸ் கட்டணங்களில் அதிகரிப்பு செய்யப்பட்டது.

பஸ் கட்டண அதிகரிப்பானது 2004 ஆம் ஆண்டில் 9 வீதத்தால் அதிகரிக்கப்பட்டது. அதே ஆண்டு ஒக்ரோபரில் மீண்டும் 5 வீதத்தாலும், 2005 ஜூலை மாதம் 13.8 வீதத்தாலும், 2006 ஏப்ரலில் 16 வீதத்தாலும், 2007 ஜூலையில் 17.5 வீதத்தாலும், 2008 பெப்ரவரியில் 4.9 வீதத்தாலும், 2008 மே மாதத்தில் 27.2 வீதத்தாலும், 2009 செப்ரெம்பரில் 5.3 வீதத்தாலும், 2011 ஜூலையில் 7.6 வீதத்தாலும், 2012 பெப்ரவரியில் 20 வீதத்தாலும் அதிகரிக்கப்பட்டன.

எனவே, எதிர்வரும் ஜூலை மாதம் வரை-பஸ் கட்டணங்கள் அதிகரிப்பு செய்யப்படமாட்டாது. அதற்கு பஸ் சங்கங்களும் இணக்கம் தெரிவித்துள்ளன.-என்றார். (ச-சி)

**வாடகைக்கு விடப்படும்**


எம்மிடம் மிகக்குறைந்த வாடகைக்கு
JCB, Excavator Mini Excavator
D4 E DOZER, Mini Dozer, Tractor
With Rotavator, Carrier
வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 072 2263 778, 071 4167 878.
(34257)(45.6)

**PC MATE SYSTEMS**
Computer Sales & Repair
உங்களது கணினியில் ஏற்படும்
Software/Hardware/Virus
பிரச்சினைகளுக்கு சிறப்பாகவும் மிக விரைவாகவும் தீர்வைப்பெற்றுக்கொள்ள எங்களை நாடுங்கள்
மலிவு விலையில்
Core 2 duo, Dual Core, LGA HT
Branded Computers 0779689043
478 Mother Board
LGA DDR2 Board
DDR/DDR2 Rams
IDE/SATA HDD
LCD Monitors
Computers
எமது புதிய கிளை
746B பருத்தித்துறை வீதி
நல்லூர்
யாழ் மாநகரசபை முன்பாக
(34260)

## அமரர் சூசைப்பிள்ளை அகஸ்ரீன் அவர்களின்

## ஓராண்டு நினைவு தினம்
**08.03.2013**



விழிகளில் காய்ந்திடா கண்ணீர்த் துளிகள்
வியப்பில் உறைந்திட்ட உந்தன் உறவுகள்
மீள முடியாத உம் பிரிவுக் காயங்கள்,
தந்திட்டவடுக்கள் மூடி மறைவதற்குள்
ஓடி மறைந்ததுவே! ஓராண்டு காலமது
ஆண்டொன்று கடந்தாலும்
ஆறாது உம் பிரிவுத்துயர்

பாசமுடன் கைகோர்த்துப் பணிபுரிந்த பாடசாலை
பார்போற்ற வித்திட்ட அகஸ்ரீன் எனும் ஒளிவிளக்கே!
எந்நாளும் உமை மறவோம்.
உம் பணியை எடுத்துரைப்போம்.
தினம் தினம் உம் நினைவலையால்
துவண்டிருக்கும் உம் குடும்பம் தன்னில்
இணைந்து நின்று இறைஞ்சுகின்றோம் இறைவனை
உமது ஆன்மா சாந்தி பெற

கிளி/கிளாலி றோ.க.த.க.
பாடசாலை,
எழுதுமட்டுவாழ்.

என்றும் நீங்கா நினைவுடன்!
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்கள்,
நலன் விரும்பிகள்,
பழைய மாணவர்கள்.
(34217)(10.6.27)

# பொதுபலசேனாவை முறியடிக்க களத்தில் சிங்கள நிறுவனங்கள்

## திட்டம் வகுக்கிறது உலாமா சபை

ஹலால் சான்றிதழுக்கு எதிரான பொதுபலசேனாவின் பிரசாரத்தை முறியடிப்பதற்காக - அந்தச் சான்றிதழின் முக்கியத்துவம் பற்றி சிங்கள மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக சிங்கள வர்த்தக நிறுவனங்களைக் களமிறக்க உலமா சபை திட்டமிட்டுள்ளது.

அது தொடர்பில் அந்த நிறுவனங்களுக்கும் உலமா சபைக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெறும் என்று உலமா சபை தெரிவித்துள்ளது.

உலமா சபையின் இந்தத் திட்டத்துக்கு அமைய செயற்படுவதற்கு அந்த நிறுவனங்கள் மறுக்கும் பட்சத்தில், அந்த நிறுவனங்களுக்கான ஹலால் சான்றிதழ் வாபஸ் பெற்றுக்கொள்ளப்படும். அந்தச் சான்றிதழுக்கான எதிர்ப்பை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு முடிவை உலமா சபை மேற்கொள்ளக்கூடும் என்று உலமா சபை முக்கியஸ்தர் ஒருவர் கூறினார். இதேவேளை, ஹலால் சான்றிதழ் தொடர்பான அமைச்சரவை உப குழுவின் சிபாரிசுகளையும் உலமா சபை எதிர்பார்த்துள்ளது.

ஹலால் சான்றிதழ் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு உலமா சபை அரசிடம் கோரிக்கை வைத்துள்ளது.

அந்தக் கோரிக்கையை அரசு நிராகரித்ததைத் தொடர்ந்தே அடுத்த கட்ட நடவடிக்கையாக உலமா சபை சிங்கள வர்த்தகர்களின் ஊடாக இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தீர்மானம் எடுத்துள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச)

**வீட்டு வேலைக்கு ஆள் தேவை**

கொழும்பில் உள்ள கௌரவமான முஸ்லிம் குடும்பத்துக்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய சிங்களம் பேசத்தெரிந்தவர்கள் கட்டாயம். கிறிஸ்தவப் பெண்கள் விரும்பத்தக்கது.
(காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணிவரை தொடர்புகொள்ளவும்)
தொடர்பு: 077 7777 552
(34253)(45.6.7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயத்தில்
அதிபராகக் கடமையாற்றும்

திருமதி
**இராசேஸ்வரி திருஞானசிவம்**



08.08.2012ஆம் திகதியில் இருந்து அதிபர் சேவை 2-II இல் பதவி உயர்வு பெற்றமையையிட்டு மன மகிழ்ச்சி அடைகின்றோம். இவர் மேன்மேலும் பதவிகள் பல பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் இறை ஆசி பெற்று வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்.

## நினைவில் நீங்காத

பதின்மூன்றாம் வருட நிறைவினில்.....

அமரர்
**முருகேசு நடராஜலிங்கம்**
(ஓய்வுபெற்ற இ.மி.ச.உத்தி யோகத்தரும், "இந்திரதீம்" உரிமையாளரும்)



மண்ணில்
19.12.1944
விண்ணில்
01.03.2000
திதி:ஏகாதசி
(08.03.2013)

காலத்தின் ஒளிவிளக்காய் எம்மோடு இருந்து
இன்று உயிரோடு உயிராய்
கலந்து விட்ட தெய்வமே பப்பா!
கண்முன்னே வாழ்ந்த காலங்கள் கனவாகிப் போனதுவோ
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
உங்கள் அன்புக்கு ஈடாகுமோ!
மண்ணைவிட்டு விண்சென்று
பதின்மூன்று ஆண்டுகள் ஆனபோதும்
மண்ணில் நாம் உள்ளவரை
மறப்போமா உங்கள் நினைவை
இன்றைய நாளில் உங்கள் ஆன்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள்நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
என்றும் அன்புடன்:
மணியகாரன் சந்தி,
தும்பளை, பருத்தித்துறை.
தி.பிருத்தயன், தி.கபிசாயினி.
(34199)(2.6)

# இலங்கைக் கடற்படை துப்பாக்கிச் சூடு காரைக்கால் மீனவர் ஒருவர் காயம்





காரைக்கால், மார்ச்.8

தமிழகத்தின் காரைக்கால் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நேற்று முன்தினம் இரவு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தச் சம்பவத்தால் தமிழக மீனவர்களிடையே மீண்டும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

காரைக்காலைச் சேர்ந்த மீனவர்கள் 13 பேர் இரண்டு விசைப்படகுகளில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். நேற்றுமுன்தினம் இரவு நாகை மாவட்டம் கோடிக்கரையில் அவர்கள் மீன்பிடித்துக்கொண்டிருந்தனர். அப்போது,"அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் காரைக்கால் மீனவர்கள் மீது துப்பாக்கியால் சுட்டுள்ளனர்.

இதில், கிளிஞ்சல் மேட்டைச் சேர்ந்த மீனவர் செண்பக குமாரின் உடலில் குண்டு பாய்ந்தது. படகுகளில் இருந்த மீனவர்களின் பொருள்களையும் கடற்படையினர் வீசினர்.

அங்கிருந்து உயிர் தப்பிய மீனவர்கள், பலத்த காயம் அடைந்த மீனவர் செண்பககுமார் வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்தச்சம்பவம் குறித்து செண்பககுமார் கூறியதாவது,

''இந்திய கடல் பகுதியில் கோடியக்கரையில் இருந்து 18 மைல் தூரத்தில் மீன் பிடித்துக்கொண்டு திரும்பிக் கொண்டிருந்தோம். அப்போது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் மீன் வலைகளை அறுத்து எறிந்து, சரமாரியாகச் சுட்டனர்'' என்றார்.

இதுகுறித்து பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்துள்ளதாக மீனவர் அமைப்பினர் தெரிவித்தனர். (வ)

### மீனவர் மீதான தாக்குதல் தொடர்பில்:

# இனியும் வேண்டாம் மௌனம்

## பிரச்சினைக்கு முடிவு காணுங்கள்



சென்னை, மார்ச்.8

இந்திய மத்திய அரசு இனியும் மெத்தனப் போக்கைக் கடைப்பிடிக்காமல் இலங்கை அரசுடன் கண்டிப்பான பேச்சு நடத்தி தமிழக மீனவர் மீதான தாக்குதல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சமத்துவ மக்கள் கட்சியின் தலைவரும் நடிகருமான ஆர்.சரத்குமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் ஒட்டுமொத்த தேசத்தின் கண்டனக் குரலை இந்திய மத்திய அரசு புறக்கணித்து வருவதைப்போல, தமிழக மீனவர் பிரச்சினையிலும் மத்திய அரசு கண்டுகொள்ளாமல் புறக்கணித்து வருவது கண்டிக் கத்தக்கதாகவும் வேதனை அளிப்பதாகவும் உள்ளது.

அந்த வகையில் இலங்கை அரசு தமிழக மீனவர்களுக்கு இழைத்துவரும் அநீதிகளின் தொடர்ச்சியாக, அண்மையில் தூத்துக்குடியைச் சேர்ந்த மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்டிருப்பதும் கண்டனத்துக்குரிய செயலாகும்.

சிறைப்பட்டிருக்கும் தூத்துக்குடி மீனவர்களை உடனடியாக இலங்கை அரசு விடுவிக்க வேண்டும். இந்திய மத்திய அரசு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்- என்றுள்ளது. (வ)

### மீனவர் மீதான தாக்குதல் தொடரும் நிலையில்

# தற்போதும் நட்பு நாடு தானா இலங்கை கேள்வி எழுப்புகின்றார் திருமா எம்.பி.

சென்னை, மார்ச்.8

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் இன்னமும் தொடரும் நிலையில் இலங்கை தற் போதும் நட்பு நாடு என்று வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் வெளி யிட்ட கருத்து புரியாத புதிராக உள்ளது என்று தொல்.திருமாவளவன் கடும் கண்டனம் தெரிவித் துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கோடியக்கரைக்கு அருகே இந்தியக் கடல் எல்லைக்குள் மீன்பிடித்துக்கொண்டிருந்த காரைக்காலைச் சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டதில் செண்பககுமார் (வயது 40) என்கிற மீனவர் படுகாயம் அடைந்திருக்கிறார்.

படகுகள் நாசமாகியிருக்கின்றன. இரண்டொரு தினங்களுக்கு முன்புதான் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்து சிறையில் அடைத்துள்ளது. அவர்களை உடனே விடுவிக்க வேண் டும் என்று மத்திய, மாநில அரசுகள் கூறிய பின்னரும் இதுவரை இலங்கை அரசு அதை மதிக்கவில்லை.

இந்தநிலையில் மீண்டும் தமிழக மீனவர்கள் மீது அத்துமீறி இலங்கைக் கடற்படை துப்பாக்கிச் சூடு நடத் தியிருக்கிறது. ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பாக மாநிலங்களவையில் விவாதம் இடம் பெற்றபோது இலங்கை, இந்தியாவின் நட்பு நாடு என்று வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் குறிப்பிட்டார்.

தமிழக மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் விதமாக அந்தப் பேச்சு இருந்தது. இலட்சக்கணக்கில் ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்ததோடல்லாமல், இந்தியத் தமிழக மீனவர்கள் மீதும் இலங்கை அரசு தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இதுவரை 500 இற்கும் மேற்பட்ட இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படை படுகொலை செய்திருக்கிறது. இந்தியாவுக்கு உரிமையான கச்சதீவை ஒப்பந்தத்துக்கு மாறாக இலங்கை ஆக்கிரமித்துக் கொண்டி ருக்கிறது.

இவ்வளவுக்குப் பின்னரும் இலங்கை ஒரு நட்பு நாடு என்று இந்தியா சொல்வது எமக்குப் புரியாத புதிராகவே உள்ளது.- என்றார். (வ)

# தி.மு.க.வின் பொய்ப் பிரசாரத்தை மறுக்கிறார் சனல்—4 தயாரிப்பாளர்

சென்னை, மார்ச்.8

திராவிட முன்னேற்ற கழகத்தின் பொய்யான பிரசாரத்தை சனல் 4 தொலைக்காட்சியின் பணிப்பாளரும், இலங்கையின் கொலைக்களம் காணொலியின் தயாரிப்பாளருமான கெல்லம் மக்ரே நிராகரித்தார்.

இலங்கைத் தமிழர்களின் விடயத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்காக, அதன் உப தலைவர் மு.க.ஸ்ராலினை, சனல் 4 தொலைக்காட்சியின் பணிப்பாளர் கெல்லம் மக்ரே பாராட்டியதாக, திராவிட முன்னேற்றக்கழகம் பிரசாரம் செய்து வந்தது.

இந்தநிலையில், இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள கெல்லம் மக்ரே,

''எல்லா நன்மனம் படைத்தவர்களும், இலங்கைத் தமிழர்களுக்கான நீதியும், நியாயமும் கிடைக்க வேண்டும் என்று விரும்புகின்றனர்.

இதற்காக தாம் தனிப்பட்ட எந்தக் கட்சியையும் பாராட்டவில்லை''-என்று தெரிவித்துள்ளார். (வ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 28 ஆவது பட்டமளிப்பு விழாவில் முதுகலை மாமணி (M.A) பட்டம் பெற்ற

செல்வன் சண்முகலிங்கம் முகுந்தன்

(ஆசிரியர், நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்)

"தன்னலம் கருதா மைந்தன்
தனக்கென முயலாச் செம்மல்
கல்விப் பணியினை கடவுள் பணியாக ஏற்று –மாணவரின்
கலங்கரை விளக்காய் பிரகாசிக்கும் – நீங்கள்"

மேன்மேலும் பல பட்டங்களைப் பெற்று கல்வியுலகில் சாதனைகள் படைத்து நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
நண்பர்கள் : ந.ஜெகதீஸ்வரன் (ஜெகன்), நா.பரமநாதன் (சாயூ), ந.மோகன்.

(C/9220)(2.6)



## வேலை ஆள்கள் தேவை

தையல் வேலை தெரிந்த மற்றும் பழக விரும்பும் பெண் பிள்ளைகள் தேவை. பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவு பேசித் தீர்மானிக்கப்படும். அத்துடன் தூர இடங்களிலிருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதிகளும் உண்டு.

தொடர்பு: ஆகாஷ் காமன்ஸ்/ அபி புரடக்ஸன்
இல.18, காளி கோயில் வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை.
T.P- 0776701495

(27876)(6.11)



## Do you want to study & settle in UK, Australia, Canada, Swiss, New Zealand?

*Free consultation & counseling.*
*Quick Admission to World ranking Universities for UG & PG courses*
*Assistance in Lodging visa application and follow ups*



*Your gateway to study abroad*

**Smart Global Partners**

Hotline :0727 00 22 11

No:429, 2nd Floor,
Kirimandala Mw,
Nawala , Rajagiriya

Mob: 0727 45 66 46
info@smartglobalpartners.com
www.smartglobalpartners.com

(சி/6840)



## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை பிரதான பஸ் நிலையத்தில் இருந்து 100 m தூரத்தில் உள்ள 1 ஆம் குறுக்குத்தெருவில் இரண்டு கடையுடன் கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 9297 300, 077 9420 554.



## Vacancies

1) Experienced Computer operator and Accounts Clerk
2) Driver

To Apply:-
AMT Transport Service (Nestle)
28, New Sivan Road, Thirunelvely.

(34283)(2.6)



## தேயிலை விற்பனைக்கு

மலிவு விலையில் 240/= இல் இருந்து 480/= வரை
தொடர்பு: 0779279469

(34285)(2.6)


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி நாகேந்திரம்



பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி -சின்னம்மா தம்பதியரின் மகன் 'வாத்தி' என்று அழைக்கப்படும் நாகேந்திரம் (05.03.2013) காலமாகிவிட்டார்.

அன்னார் கனகேஸ்வரி, செல்வராணி ஆகியோரின் கணவரும், காலஞ்சென்ற தமிழ்நேசன் மற்றும் புஸ்பவசந்தன் ஆகியோரின் தந்தையும், நந்தினி, ஆன்சுலசனா ஆகியோரின் மாமனும், அபிநயா, றொகித், அபிஷேக், ஜெப்பினி ஆகியோரின் பேரனும், குணசிங்கத்தின் (டென்மார்க்) சகோதரனும், சந்திரமதியின் (டென்மார்க்) மைத்துனரும், செந்தில்குமார் (டென்மார்க்), பிரதிக்குமார் (டென்மார்க்), தினேஷ் (டென்மார்க்) ஆகியோரின் பெரிய தகப்பனும், காலஞ்சென்றவர்களான கந்தையா, தங்கமணி மற்றும் மாணிக்கம் ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2013)வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(34281)(6.11)

தகவல்:
குடும்பத்தினர்.

# இன, மத பேதங்களை எவரும் தூண்டக்கூடாது

## நாட்டில் அமைதியை ஏற்படுத்த அனைவரும் ஒற்றுமையுடன் செயற்படுவோம் என்கிறார் டி.ஐ.ஜி.



மட்டக்களப்பு,மார்ச்8

இன, மத, பேதங்களை எவரும் தூண்டக்கூடாது. நாட்டில் சமாதானம் நிலவ அனைத்து இனங்களும் ஒற் றுமையுடன் செயற்பட வேண் டும்.

இவ்வாறு கிழக்குக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்தார்.

மட்டக்களப்பு, தன்னாமுனை, மியானி அரங்கத்தில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது:-

பொலிஸாரும் பொது மக்களும் இணைந்து கடந்த 20 நாள்களுக்குள் சமூக நல செயற்பாடுகளில் ஈடுபட்டதன் பெறுமதி சுமார் இரண்டு கோடி எழுபது லட்சம் ரூபா மதிப்பை எட்டுகின்றது.

கிழக்கு மாகாணத்திலுள்ள 43 பொலிஸ் நிலையங்களில் நடமாடும் பொலிஸ் நிலையங்களை அமைத்து மக்களை இணைத்துக் கொண்டு சிரமதானத் தொண்டு புரிந்ததன் மூலம் இந்தச் சாதனை எட்டப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையங்களுக்கு வரும் முறைப்பாடுகளைக் அவதானித்தால் மற்ற வர்களின் சொத்துக்களை அபகரிப்பது, திருட்டு, கொலை, கொள்ளை வன்புணர்வு, ஏமாற்று என எண்ணிலடங்கா பாதகச் செயல்கள் இடம் பெற்றிருப்பதை அறிய முடிகிறது.

நமது உடலை அர்ப்பணித்து பொதுத் தொண்டுகளில் ஈடுபடுவதற்கும், இன்னொருவரை வருத்திப் பிழைப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கின்றது. பொதுத் தொண்டு செய்வதிலுள்ள ஆத்ம திருப்தி மற்றவரை வருத்துவதால் வந்துவிடுமா என்று நாசகார வேலைகளில் ஈடுபடுவோர் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாட்டில் இனிமேல் பயங்கரவாதம் வளரக்கூடாது. அவ்வாறு பயங்கரவாதம் மீண்டும் தலையெடுப்பதற்கான சூழ் நிலைமைகளுக்கு யாரும் இடம் வைத்து விடக்கூடாது.- என்றார். (ச)

# சிறுவர்களுக்கு கொடுப்பனவு

வழங்கியது சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்



கொழும்பு,மார்ச்8

குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களிலுள்ள பாடசாலை செல்லும் சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த கொடுப்பனவு வழங்கப்பட்டது.

இந்த கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்றுமுன் தினம் புதன்கிழமை சம்மாந்துறையிலுள்ள சிறுவர் நன்னடத்தை அலுவலகத்தில் இடம்பெற்றது.

சிரேஷ்ட மாவட்ட நன்னடத்தை அதிகாரி எ.உதுமாலெப்பை தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில், கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்திய சிறுவர் பராமரிப்புத் துறை அமைச்சர் எம்.ஐ.எம்.மன்சூர், பொதுசன தொடர்பு அதிகாரி யூ. எல். பஸீர், இணைப்பதிகாரி ஏ.எம்.தபீக் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட இந்தக் கொடுப்பனவுகள், 132 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டன. (ச)

# கிழக்கு முதலமைச்சர் தலைமையிலான குழு தென்கொரியாவுக்குப் பயணம்

திருகோணமலை,மார்ச்8

கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் தலைமையிலான உயர்மட்டக் குழு நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை தென்கொரியாவுக்குச் சென்றுள்ளது.

இந்தப் பயணத்தில் முதலமைச்சரின் செயலர் யு.எல். ஏ.அஸீஸ், கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட், அவரது செயலர் கே.பத்மநாதன் மற்றும் உள்ளூராட்சி திணைக்களத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் இணைந்து கொண்டுள்ளனர்.

தென்கொரிய அரசின் உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில், அங்கு சென்றுள்ள முதலமைச்சர் தலைமையிலான குழு, கொரிய நாட்டு வர்த்தக சம்மேளனம் உட்பட நிபுணத்துவமிக்க உயரதிகாரிகளுடன் கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு, அபிவிருத்தி தொடர்பான பேச்சுக்களில் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் செயற்றிட்டங்களை மேம்படுத்தும் திட்டத்துக்கு அமைய, தென் கொரிய நாட்டின் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளுடன் அவர்கள் பேச்சு நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

வோகன் தோட்டம் – டீகல பிரிவு

# தோட்டத் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்

நுவரெலியா,மார்ச்8

வோகன் தோட்டம், டீகல பிரிவு தோட்டத் தொழிலாளர்கள் மீண்டும் வழமை போல் வேலைக்குத் திரும்பியுள்ளனர்.

வோகன் தோட்டம், டீகல பிரிவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காவலாளியை தோட்ட முகாமையாளர் தாக்க முயன்றதன் காரணமாக தொழிலாளர்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்

தோட்ட வெளிக்கள உத்தியோகத்தர் தனது வேலை பொறுப்பை தோட்டக் காவலாளியிடம் ஒப்படைத்துச் செல்லும்போது அந்த இடத்துக்கு வந்த முகாமையாளர் காவலாளியை தகாத முறையில் ஏசியுள்ளார்.

பின்னர் முகாமையாளர் காவலாளியைத் தாக்க முற்பட்டுள்ளார். இந்தப் பிரச்சினை ஜனநாயக மக்கள் காங்கிரஸ் பொறுப்பாளரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதன் பேரில், தொழிற்சங்க ரீதியாக தொழில் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர் பிரபாகணேசனின் ஆலோசனைக்கேற்ப இந்தப் பிரச்சினை தொடர்பாக பேச்சு நடத்தப்பட்டது.

இந்தப் பேச்சில் பிரச்சினை சம்பந்தமான கருத்துகள் முன்வைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்ட போது தோட்ட முகாமையாளர் மன்னிப்புக் கோரியுள்ளார். மீண்டும் இவ்வாறான பிரச்சினைகள் இடம்பெறாமலிருப்பதற்குத் தான் பொறுப்பு என்று உறுதியளித்தமையால் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. அதனை அடுத்து தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCIES

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts up to 21.03.2013.

### FACULTY OF AGRICULTURE

Temporary Lecturer in
Agronomy/ Agricultural Biology/ Agricultural Chemistry/ Agricultural Economics

Temporary Demonstrator in
Agronomy/ Agricultural Biology/ Agricultural Chemistry/ Animal Science/ Agricultural Economics/ Agricultural Engineering

| Post | Salary |
|---|---|
| Temporary Lecturer | Rs.26020/- p.m. (fixed) |
| Temporary Demonstrator | Rs.21370/- p.m. (fixed) |

Other allowances approved by University Grants Commission will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with **a self –addressed stamped envelope** 23x10 c.m. in size.

Those who wish to apply **for more than one post** should make **separate applications.**

Applicants from the University System/Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Heads of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**2013.03.07**

(c/6941) (10,27,6)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
பொதுக்கூட்டம்- 2013

இடம்: குமாரசாமி மண்டபம்
காலம்: 07.04.2013 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: முற்பகல் 10.00 மணி

குறிப்பு:
பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 31.03.2013 ஆம் திகதிக்கு முன்னர் கல்லூரி அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

பொ.ஸ்ரீகந்தராஜா
செயலாளர்.

வீ.கணேசராஜா
அதிபர்.

(C/6945)(6.11)

நீண்டகால சேவைக்கான விருது வழங்கல்



இன்று (08.03.2013) வெள்ளிக்கிழமை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்
இடம்பெறும் நீண்டகால சேவைக்கான
விருது வழங்கும் வைபவத்தில்
எமது சக பணியாளராகிய
சிவகுரு உமாகரன்
மைதான பராமரிப்பாளர் அவர்கள்
25 வருடங்களுக்கு
மேல் சேவையாற்றியமைக்காக
விருது வழங்கி கௌரவிக்கப்படுகின்றார்.
இவரது சேவையைப் பாராட்டி மேன்மேலும் இவர் சிறப்படைய வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.
சக பணியாளர்கள்,
உடற்கல்வி அலகு, யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
(34239)(2.6)

மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ, 1983 ஆம் ஆண்டு பிறந்த, கனடாவில் PR உள்ள மணமகனுக்கு அழகிய, நற்பண்புள்ள மணமகள் தேவை.
தொடர்பு: 0777705307
(34288)(7.11)

வான் விற்பனைக்கு

253-XXXX இலக்கமுடைய TOYATA, HIGH ROOP (நீட்டுமொடல்)
டபிள் A/C, T.V வசதியுடைய
மிக நல்ல நிலையிலுள்ள
வான் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0777635926
(34288)(7.11)

வேலைவாய்ப்பு

வீட்டில் இருந்து சிகிச்சை பெறுபவர்களுக்கு உதவக்கூடிய அண்மைக் கால நிகழ்வுகளால் தனிமைப்படுத்தப்பட்ட பெண்கள் தமது சுயவிவரத்துடன் வரவும்.
வைத்திய பணிப்பாளர், யாழ்.சிகிச்சை நிலையம்,
335, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி.

# மானிப்பாய்-பம்பலப்பிட்டி இந்துக்கள் இன்று மோதல்





மானிப்பாய் இந்துக்கல்லூரியினதும் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியினதும் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையே இரண்டாவது வருடமாக இடம்பெறும் 50 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்டகிரிக்கெட் போட்டி மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இன்றுவெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி நிக்சன் தலைமையிலும் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி அணி யாசோ தலைமையிலும் களமிறங்கவுள்ளன.(ங-23)

# ஞானம்ஸ் இறுதிப்போட்டிக்குள் நுழைவு





கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 'ஸ்ரார் ஒவ் வடமராட்சி' கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு ஞானம்ஸ் அணி தகுதி பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் அல்வாய் நியூபவர் விளையாட்டு கழகத்தை எதிர்த்து ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் களமிறங்கியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஆட்டநாயகனாகத் தெரிவான ஞானம்ஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த சேந்திரனுக்கு விருதுக்கின்னமும், சிறந்த பந்து வீச்சாளராகத் தெரிவுசெய்யப்பட்ட நியூயுபவர் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த நிவந்தனுக்கு சீருடையும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.


இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் 15 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 66 ஓட்டங்களை பெற்றது. ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் சார்பில் சுகந்தன் 17 ஓட்டங்களையும். விஜயகுமார் 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் நியூபவர் விளையாட்டு கழகம் சார்பாக நிவந்தன் 4 இலக்குகளையும், பிரகாஸ் 3 இலக்குகளையும், சேந்திரன், ராம் ஆகியோர் தலா ஓர் இலக்கினையும் கைப்பற்றினார்கள்.

67 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய நியூபவர் விளையாட்டுக்கழகம் 14 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 49 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. அந்த அணி சார்பில் பிரனாலன், பிரகாஸ், பகிந்தன் ஆகியோர் தலா 9 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் சார்பாக குணசீலன் 3 இலக்குகளையும், சுதர்சன், சேந்திரன் ஆகியோர் தலா இரு இலக்குகளையும், அனுசீலன், விஜயகுமார் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர்.

இந்த அரையிறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாகத் தெரிவான ஞானம்ஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த சேந்திரனுக்கு விருதுக்கிண்ணத்தையும், சிறந்த பந்து வீச்சாளராகத் தெரிவு செய்யப்பட்ட நியூயுபவர் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த நிவந்தனுக்கு சீருடையையும், கொலின்ஸ் விளையாட்டுக்கழகத்தின் முன்னாள் கோல் காப்பாளரும், உடற்கல்வி ஆசிரியருமான ஜெயகரன் வழங்கிக் கௌரவித்தார். (ங-422)




# சிவானந்தா, பாரதி, ஐக்கியம் அணிகள் அடுத்த சுற்றுக்குள்



கரணவாய், மார்ச் 8

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நவிண்டில் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம், கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம், கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம் என்பன வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவு செய்யப் பட்டுள்ளன.

முதலில் இடம் பெற்ற ஆட்டமொன்றில் நவிண்டில் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும், பொலிகை பாரதி விளையாட்டுக்கழகமும் மோதின.

இதில் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் அபாரமாக விளையாடி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அந்த அணி சார்பாக எஸ். பானுராஜ், எஸ். சசிகுமார் ஆகியோர் தலா ஒரு கோலைப் பெற்றுக் கொடுத்தனர்.

மற்றொரு ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகமும், அல்வாய் பாரதி விளையாட்டுக்கழகமும் மோதின.

ஆட்டம் ஆரம்பமாகி முடிவடையும் வரை சிவானந்தா அணியின் பக்கமே வெற்றிக்காற்று வீசியது. பாரதி விளையாட்டுக்கழகத்தினர் எதிர் அணியினர் கோல் அடிப்பதைத் தடுக்கும் வகையில் விளையாடிய போதும் அவர்களிடம் காணப்பட்ட பலவீனமான நிலைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன் படுத்திய சிவானந்தா அணி வீரர் விஜித் ஆட்டத்தின் 19 ஆவது, 26 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து 2 கோல்களை அடித்து அசத்தினார்.

இடைவேளை முடிவடைந்து மீண்டும் ஆட்டம் ஆரம்பமாகி 5 ஆவது நிமிடத்தில் சிவானந்தா அணி வீரர் பிரதீப் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தினைக் கோலாக மாற்றித் தமது அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

இந்தச் சூழ்நிலையில் பாரதி அணியினர் கோல் பெறுவதற்குக் கடுமையாக முயற்சிகளை மேற்கொண்டனர். இருந்தபோதும் அந்த முயற்சிகள் கைகூடவில்லை. இறுதியில் 3:0 என்ற கோல் அடிப்படையில் சிவானந்தா விளையாட்டுக் கழகம் வென்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது.

அடுத்து இடம் பெற்ற ஆட்டத்தில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகமும், வல்லை ஆதிசக்தி விளையாட்டுக்கழகமும் ஒன்றையொன்று எதிர்த்தாடின.

இரு அணிகளும் மிகவும் பலம் வாய்ந்த அணிகளாகக் காணப்பட்டன. இதனால் மைதானத்திலும் அதற்கு வெளியேயும் மிகுந்த பரபரப்பான சூழல் ஏற்பட்டது. இருந்த போதும் கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழக வீரர்களான சஞ்சீவன் மற்றும் நிஷாந்தன் ஆகியோர் 10 ஆவது, 22 ஆவது நிமிடங்களில் தலா ஒரு கோலைத் தமது அணிக்குப் பெற்றுக் கொடுத்தனர்.

ஐக்கிய அணி இரு கோல்களைப் பெற்று முன்னிலையில் இருந்தபோது, ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகியதும் இரு அணி வீரர்களும் கோலைப் பெறுவதற்கு பெரும் முயற்சிகள் செய்த போதும் அவை கைகூடவில்லை. இறுதியில் 2:0 என்ற கோல் கணக்கில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது. (ங-400,422)

## இன்றைய ஆட்டங்கள்

கைதடி விநாயகர் சன சமூக நிலையம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**இரவு 7 மணி**

மயிலிட்டி கணேசா வி.க. எதிர் ஆலடி சிந்து வி.க.

**இரவு 8 மணி**

இணுவில் அண்ணா வி.க எதிர் மானிப்பாய் வெஸ்றொம் வி.க.

* * *

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**பி.ப. 3 மணி**

நவிண்டில் கலைமதி வி.க. எதிர் கரவை சுடர் வி.க.

**பி.ப. 4 மணி**

திக்கம் இளைஞர் வி.க எதிர் உடுப்பிட்டி யுத் வி.க.

* * *

ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

* * *

யாழ்.மாவட்டக் கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டிகள் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளன.

* * *

புதுக்குடியிருப்பு கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான 15, 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்கிடையிலான பூப்பந்தாட்டப் போட்டிகள் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி ஆடுகளத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன. (ங-23,400,422)

# சமரவீர ஓய்வு

இலங்கை அணியின் சிரேஷ்ட துடுப்பாட்ட வீரர் திலான் சமரவீர சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். இதன்படி ஆஸ்திரேலியாவுக்கெதிராக அவர் பங்குபற்றிய டெஸ்ட் போட்டியே அவரது இறுதி டெஸ்ட் போட்டியாக அமைந்துள்ளது.

அண்மைக்காலமாக துடுப்பாட்டத்தில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தத் தவறியதால் திலான் சமரவீர, பங்களாதேஷுக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டிக்கான 16 பேர் கொண்ட குழாம் அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

முதலில் அறிவிக்கப்பட்டிருந்த 23 பேர் கொண்ட அணியிலும் திலான் சமரவீரவின் பெயர் இடம் பெறவில்லை. ஆயினும், மஹேல ஜெயவர்த்தனவுக்கு காயம் ஏற்பட்டதால், அவருக்குப் பதிலாக திலான் சமரவீர 23 பேர் கொண்ட அணியில் மீண்டும் சேர்க்கப்பட்டிருந்தார். ஆனால் அதன் பின்னர் இறுதியாக இப்போது வெளியிடப்பட்டுள்ள 16 பேர் கொண்ட அணியில் அவருக்கு இடம் கிடைக்கவில்லை.

இதனால் அதிர்ச்சியுற்ற அவர் ஓய்வு பெறும் கடிதத்தை இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் கையளித்தார். எனினும், அவரது முடிவை மீள்பரிசீலனை செய்யுமாறு இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கோரிக்கை விடுத்திருந்தது. எனினும் அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாத திலான் சமரவீர, சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.


பங்களாதேஷுக்கெதிரான தொடரில் தான் சேர்க்கப்படாததை எண்ணித் தான் மிகவும் அதிர்ச்சியடைந்ததாகத் தெரிவித்த திலான் சமரவீர, அவருக்கான விடைபெறல் போட்டியாக பங்களாதேஷுக்கெதிரான தொடரில் பங்குபெறுமாறு இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை விடுத்த கோரிக்கையையும் நிராகரித்தே இந்த ஓய்வு முடிவைத் தெரிவித்துள்ளார்.



36 வயதான திலான் சமரவீர, இலங்கை சார்பாக 81 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 48.76 என்ற சராசரியில் 5462 ஓட்டங்களைக் குவித்திருந்தார். 14 சதங்கள், 30 அரைச்சதங்களும் இவற்றில் உள்ளடங்குகின்றன.

அது தவிர, 53 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் அவர் பங்குபற்றியிருந்தார். (ந)

# ஷேவாக் 'அவுட்'



ஆஸ்திரேலிய அணிக்கெதிரான மீதமுள்ள 2 டெஸ்ட் போட்டிகளில் பங்குபெறவுள்ள இந்திய அணியிலிருந்து அதிரடித் தொடக்க வீரர் வீரேந்திர ஷேவாக் நீக்கப்பட்டுள்ளார்.

சமீபகாலமாக டெஸ்ட் அரங்கில் தொடர்ந்து ஏமாற்றி வருகிறார் மூத்த வீரர் ஷேவாக். 34 வயதான இவர், கடைசியாக விளையாடிய 9 இன்னிங்ஸ்களில் (25, 30, 9, 23, 49, 0, 2, 19, 6) ஒரு அரைச்சதம் கூட அடிக்கவில்லை.


ஆஸ்திரேலிய அணிக்கெதிரான முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளின் நான்கு இன்னிங்ஸ்களிலும் மொத்தம் 277 ஓட்டங்கள் தான் எடுத்தார். இருப்பினும், இந்திய அணி வெற்றி பெற்றதால் மீதமுள்ள போட்டிகளிலும் ஷேவாக் தொடர்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், புதிய திருப்பமாக ஷேவாக் அணியில் இருந்து நீக்கப்பட்டார். இவருக்குப் பதில் புதியதாக யாரும் சேர்க்கப்படவில்லை. அதாவது 15 பேர் கொண்ட அணிக்குப் பதிலாக 14 பேர் கொண்ட அணியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**அறிவிக்கப்பட்டுள்ள அணி வீரர்கள் விவரம்:**

மஹேந்திர-சிங் டோனி (அணித் தலைவர், விக்கெட் காப்பாளர்), விராட் கோஹ்லி, முரளி விஜய், ஷிகர் தவான், சச்சின் டெண்டுல்கர், சட்டீஸ்வர் புஜாரா, ரவிந்திர ஜடேஜா, ரவிச்சந்திரன் அஷ்வின், அஜின்கியா ரஹானே, பிரக்யான் ஓஜா, ஹர்பஜன் சிங், இஷாந்த் சர்மா, புவனேஷ்வர் குமார், டிண்டா. (ந)

# ஒதுங்கியது ஏன்?



மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அதிரடி வீரரான கிறிஸ் கெய்ல் சிம்பாப்வே அணிக்கெதிரான ஒருநாள் மற்றும் 20/20 தொடரிலிருந்து சுயவிருப்பின் பேரில் தற்காலிகமாக ஓய்வெடுத்திருந்தார்.

சிறந்த சகலதுறை வீரரான இவர், இதுவரை 95 டெஸ்ட் (6691 ஓட்டங்கள், 72 இலக்குகள்), 242 ஒருநாள் (8442 ஓட்டங்கள், 157 இலக்குகள்), 32 சர்வதேச 20/20 (993 ஓட்டங்கள், 15 இலக்குகள்) போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு வந்துள்ள சிம்பாப்வே அணி மூன்று ஒருநாள், இரண்டு சர்வதேச 20/20 மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. ஒருநாள் தொடரை மேற்கிந்தியத் தீவுகள் அணி 3-0 என்று முழுமையாக வென்றது.

. ஒருநாள் மற்றும் சர்வதேச 20/20 தொடரில் இருந்து கெய்ல் விருப்ப ஓய்வு பெற்றுக்கொண்டார். இந்த மாதம் 12 ஆம் திகதி பிரிட்ஜ்டவுன் நகரில் தொடங்கவுள்ள சிம்பாப்வேவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் கெய்ல் களமிறங்குவார் எனத் தெரிகிறது.

இது குறித்து கிறிஸ் கெய்ல் கூறுகையில்,

"கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் இலங்கையில் நடந்த 20/20 உலகக் கிண்ணத் தொடருக்குப் பின்னர், டிசெம்பர் மாதம் ஆஸ்திரேலியாவில் நடந்த பிக் பாஷ் லீக் தொடரில் விளையாடினேன்.

இந்த ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கெதிரான ஒருநாள் மற்றும் 20/20 தொடரிலும் பங்கேற்றேன். தொடர்ச்சியான அட்டவணை காரணமாக நிறையப் போட்டிகளில் விளையாட வேண்டியதாயிற்று. எனது உடற்தகுதி மற்றும் மனவலிமையை வலுப்படுத்துவதற்காக சிறிது ஓய்வு தேவைப்பட்டது.

இதனால் தான், சிம்பாப்வே அணிக்கெதிரான ஒருநாள் மற்றும் 20/20 தொடரில் இருந்து விருப்ப ஓய்வை பெற்றுக் கொண்டேன். இந்த ஓய்வு, இந்த மாதம் 12 ஆம் திகதி தொடங்கவுள்ள சிம்பாப்வே அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் சாதிக்க ஊக்கம் அளிக்கும், உடல் மற்றும் மனதளவில் டெஸ்ட் தொடருக்கு தயாராக முடியும்."
- என்றார். (ந)

# மாற்றம்

சென்னையில் நடைபெறவிருந்த ஆசிய தடகளப் போட்டிகள் கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளன. இந்தப் போட்டிகள் மே 18 ஆம் திகதி சென்னையில் இடம்பெறவிருந்தன.

எனினும் இந்தப் போட்டியில் இலங்கை வீரர்கள் கலந்துகொள்வதற்கு தமிழக அரசு எதிர்ப்புத் தெரிவித்திருந்தது. இதனாலேயே இந்தப் போட்டிகள் கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளன.

(ந)

# 13ஆவது நாள் நினைவஞ்சலி



தோற்றம் 13-09-1925 மறைவு 24-02-2013

## பிரம்ம ஸ்ரீ புவனசபாபதிக்குருக்கள் சதாசிவக்குருக்கள்

(அன்புத்தாத்தா)

அன்பின் வடிவமாய் பண்பின் உருவாய்
எல்லோரையும் பாசத்தோடு அழைக்கும் தாத்தா
உங்கள் குரல் எங்கள் காதில் இன்னும
ஒலித்துக் கொண்டு இருக்கிறது தாத்தா.
எத்தனை துன்பங்கள் வந்தபோதிலும்
எம்மை துன்பத்தில் நீங்கள் விடுவதில்லை
இப்போ மீளா பெருந்துயரில் ஆழ்த்திவிட்டு
எங்கு சென்றீர்கள் தாத்தா.
இறைவன் இன்னொரு இறைவனைச்
சந்திக்க காலநேரம் வந்ததோ?
என்ன புண்ணியம் செய்தோம் இறைவனே
எமக்கு தாத்தாவாக் கிடைத்தமைக்கு
என் கைகளால் உங்கள் கால்கள்
பிடித்தால் தான் தூங்குவேன்
என்று சொல்லுவீங்க தாத்தா
உங்கள் கடைசி நிமிடம் வரைக்கும்
உங்கள் பாதம் தழுவிக்கொண்டே இருந்தேனே.
அந்த பாக்கியம் நீங்கள் எனக்குத் தந்த வரம் தாத்தா.
நீங்கள் தூங்கிவிட்டீங்கள் என்று
நானும் சிறிது கண் அயர்ந்த வேளை
காலன் வந்ததேன் எங்கள் தாத்தாவை
எம்மிடம் இருந்து பிரித்ததேன்?
நெஞ்சம் பொறுக்கவில்லை உங்கள் நினைவுகள்
எம்மைவிட்டு அகலவில்லை
அதிகாலை வேளையில் நல்லூர்க்கந்தன்
மணி ஓசையோடு கலந்த எங்கள்
தாத்தாவின் ஆத்மா சாந்தியடைய சிதம்பரேசர் சகித
சண்முகப் பெருமானைப்பிரார்த்திக்கும்

என்றும் உங்கள் பாதக்கமலத்தில்
அன்புப்பேரனாக
உங்கள் J.ஞானா

(34293) (8,16)

---

# 29ஆம் ஆண்டு 06ஆம் ஆண்டு





**குருநாதர் சின்னத்துரை**
(கிராம சேவை அலுவலர் தென்மராட்சி)

தோற்றம் 24.11.1933
மறைவு 12.01.1984

அப்பா
ஆண்டில் ஒரு தினம் மட்டுமல்ல
உங்கள் நினைவு அனுதினமும்
உங்கள் நினைவே
நேர்வழி காட்டி நீதியாய்
வாழ்ந்த உங்கள் வழித்தடங்கள்
பின்பற்றி உங்கள் பெயர் வாழ
நீதியாய் நாமும் உறுதியுடன்
வாழ்ந்திடுவோம்.
உயிர் தந்த உறவே
அநியாயங்களும், நயவஞ்சகமும்
நிறைந்த மனிதரிடையே
நீங்கள் எமை தலை நிமிர்ந்து
வாழ வைத்த தெய்வம் அப்பா.

**சின்னத்துரை சிவசுதன்**
(ஆசிரியர் யா/வரணி மகா வித்தியாலயம்)
B.A. (Hons)

தோற்றம் 10.02.1975
மறைவு 08.02.2007

சோதரா!
ஜிம் என்றால் பல்கலையில்
உனை தெரியாதோர்
இல்லையே தரணி
போற்ற வாழப்பிறந்த
உன்னை காலனவன்
இடைநடுவில் கவர்ந்து
மனத்துயர் தந்திடினும்
தொப்புள் கொடியுறவே!
நீ என்றும் எம் மழலைகள்
வடிவில் எம்மிடையே
வாழ்ந்திடுவாய்
என்றும் உன் நினைவில்

கைதடி வடக்கு, கைதடி.
71, நந்தாவில் அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கு.

குடும்பத்தினர்.

---

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



## பிரம்மஸ்ரீ
## ச. சதாசிவக்குருக்கள்

கடந்த (24.02.2013) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது தந்தையார் ச.சதாசிவக்குருக்கள் (திருநெல்வேலி சிவன் கோயில் பிரதம குருக்கள்) அவர்களின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் சமாரா தனையும் (மதிய போசனம்) இன்று (08.03.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கல்வியங் காட்டில் உள்ள அவரது இல்லத்தில் நடை பெறும். இந்த நிகழ்வில் அனைத்து அன்பு நெஞ் சங்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

இலங்கைநாயகி
அம்மன் கோயிலடி,
கல்வியங்காடு.

குடும்பத்தினர்.

(34207) (10,6,7)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## நல்ல மனம் இருந்தால் போதும்

எமது துன்பத்துக்குக் காரணமாய் அமைவது ஆசையும், பற்றும்தான். எவ்வளவு சம்பாதித்தாலும் மனம் திருப்தியடையாது ஆசைகளுக்கு அளவில்லை. பழைய ஆசைகள் தீர்ந்த பின்பு புதிய ஆசைகளைத் தேடி மனம் அலையும். ஆகையால் மனம் திருப்தி அடைவதே மகிழ்ச்சிக்கு வழி. மனத்தைச் செம்மைப்படுத்துவதே அமைதியைத் தேடிக்கொள்ளும் வழி. மனிதனுடைய வாழ்க்கை மனத்தின் அடிப்படையிலே தான் நடக்கின்றது.




மனமே சிக்கல்களுக்கு காரணமாய் அமை கின் றது. அது நினைக்கும் விதத்தில் தான் வாழ்க்கையில் பிரச்சினைகளும் உருவாகின்றன. மனப்பக்குவம் அடைந்தவர்களுக்கு ஆசைகளை அடக்கவும் தெரியும். ஆகையால் பிரச்சினைகளை உருவாக்காமல் வாழும் வழியையும் அறிவார்கள். ஆகவே ஒரு நல்ல வாழ்க்கையின் அடிப்படை, அடக்கமான மனதில் தான் இருக்கின்றது. மனத்தை இப்படி அடக்கிய பிறகு அதைத் தூய்மைப்படுத்த முயலவேண்டும். தூய்மையான மனத்தில் தெளிவான சிந்தனை இருக்கும். தெளிவான சிந்தனை இருக்கும் பட்சத்தில் இறைவன் கொலுவிருப்பார்.

## அபராதம் 18, 500 ரூபா

தென்மராட்சி, மார்ச் 8

வாகனம் செலுத்துவதற்குரிய ஆவணங்கள் இன்றி மது போதையில் வாகனம் செலுத்திய பருத்தித்துறை வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த புதன்கிழமை 18 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

எதிரி மதுபோதையில் இருந்தமை, சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி, வரி ஆகியவை இல்லாததை ஒப்புக் கொண்டதையடுத்து 18 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அபராதத் தொகை செலுத்தத் தவறின், நான்கு மாத சாதாரண சிறைத்தண்டனை அனுப விக்குமாறும் உத்தரவிடப் பட்டது. (3-9)

## உன்னையே நீ அறிவாய்

சோக்கிரட்டீஸ் கிரேக்க நாட்டின் மேதை: மெய்யியல் ஞானி: தத்துவ இயலின் தந்தை: பேராசிரியர். மனிதனை மையமாகக் கொண்டு சிறப்பாக இளையோரைச் சுட்டி தனது ஆழ்ந்த மெய்யியல் தத்துவங்களை சிந்தனைச் சிதறல்களாக வெளிப்படுத்தினார். அதில் முக்கியமான மனிதவாழ்வின் உண்மைத் தத்துவம் தான் ''உன்னையே நீ அறிவாய்''.

ஒவ்வொரு மனிதனும் தன்னை எப்போது முழுமையாக அறிந்து உணர்கின்றானோ, அப்போதுதான் அவன் வாழ்வில் பெரும் மாற்றம் ஏற்பட்டு அவனது வாழ்வே வளம் நிறைந்ததாக மாறுகிறது. அவன் வழியாக ஏனையவரின் வாழ்விலும் ஏற்றம் வருகிறது.

இந்த உண்மையை லூக்கா நற்செய்தியில் 15:11-25இல் காண்கின்றோம். இது யேசுவினால் கூறப்பட்ட ''காணாமற்போன'' அல்லது ''ஊதாரிப்பிள்ளை''யின் உவமையாகும்.

செல்வந்தரான ஒரு தந்தைக்கு இரு மகன்கள். அதில் இளையவன் ''அப்பா சொத்தில் எனக்குரிய பங்கைத் தாரும்'' என்று கேட்டு அதைப் பெற்றுக்கொண்டு வேறொரு நாட் டுக்குச் சென்று அங்கு ஊதாரியாக வாழ்ந்து தன் சொத்தை எல்லாம் அழித்து பின் உண்ணுவதற்கு கூட எதுவும் இல்லாமல் கஷ்டப்பட்டான். ஒரு செல்வந்தரிடம் வேலை கேட்டான். அவர் பன்றி மேய்க்க தோட்டத்துக்கு அனுப்பினார். அங்கு பன்றிகள் தின்னும் தீனி கூட அவ்னுக்குக் கிடைக்கவில்லை.




அந்த நிலையில் அவன் தன் நிலையையும், உண்மைத் தன்மையையும் அறிகிறான். ''எனது தந்தையின் வீட்டில் கூலியாள்களுக்குத் தேவைக்கு மிகுதியாக உணவு இருக்க, நான் இங்கு பசியால் சாகிறேன். நான் புறப்பட்டு என் தந்தையிடம் போய் அப்பா கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன். உமது கூலியாள்களுள் ஒருவனாக என்னையும் வைத்துக்கொள்ளும்'' எனக் கேட்பேன் என எண்ணி தந்தையிடம் சென்றடைந்தான். அவனுக்காக நாளாந்தம் காத்திருந்த தந்தை அவனை அன்போடு அணைத்து முதல்தரமான ஆடைகள் அணிவித்து விருந்து கொண்டாடினார். இந்த தவக்காலத்தில் நாமும் நமது உண்மை நிலையை அறிந்து எமது வாழ்வை மாற்றி அமைப்பதற்கு என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்து நமது வாழ்வை மகிழ்வானதாக மாற்றிக்கொள்ளவேண்டும்.

இன்றைய வாழ்வில் நாம் உலக சுகபோக வாழ்வில் இறைவன் கொடுத்த செல்வத்தையும் சொத்துக்களையும் . பாவ வழியில்அழித்துவிட்டு, நமக்கு உதவி செய்ய யாருமற்று நிர்க்கதியாகி நிற்கிறோம். மாறாக நமக்கு இறைவன் கொடுத்த செல்வத்தை நாம் சரியான முறையில் நமது தேவைகளுக்கும், அன்புப் பணிகளுக்கும் திருச்சபையின் பணிகளுக்கும் செலவு செய்தால் நமது வாழ்வு வளம் பெறும். எப்போதும் பலரும் நம்மோடிருப்பர். இறைவன் நமது செல்வத்தை எப்போதும் செழித்து வளரச் செய்வார். மனித வாழ்வு மகிழ்வானதாக இருக்கும்.

அருட்பணி அ.ம.ஸ்ரீபன், செ.தா

## வாராந்த சொற்பொழிவு

வடமராட்சி, மார்ச் 8

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த ஆன்மிகச் சொற்பொழிவு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''கந்த விரதங்களும் சைவ வாழ்வியலும்'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு நடைபெறும்.

பேரவை நிர்வாக உறுப்பினர் கே.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சைவப் புலவர் கு.சண்முகலிங்கம் சொற்பொழிவை நிகழ்த்துவார்.(3-8)

## குப்பிளானில் உளஆற்றுப்படுத்தல் நிகழ்வு

குப்பிளான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில், உள ஆற்றுப் படுத்தல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் காலை 8.30 மணி யிலிருந்து மாலை 5 மணி வரை நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வளவாளராக கா.வைத்தீஸ்வரன் கலந்து கொள்வார். (3)

## வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம், மார்ச் 8

மாநகர சபைக்கு உட்பட்ட கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை கொழும்புத்துறை சனசமூக நிலையத்திலும் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை எ.வி. றோட் சென்மேரிஸ் தேவாலயத்திலும், முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை இலந்தைக்குளம் வீதி புளியடியிலும் தடுப்பூசி வழங்கப்படும்.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை பாஷையூர் புதுக்குடியிருப்பிலும், முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை பாஷையூர் மகப்பேற்று நிலையத்திலும், எதிர்வரும் 13 ஆம்திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை கொய்யாத்தோட்டம் பார்க்குளம் சனசமூக நிலையத்திலும், முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை விதானையார் வீதி வைரவர் கோயிலிலும் வழங்கப்படும்.(ம-14)

## கிணற்றில் தவறி வீழ்ந்து முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 8

வீட்டுக் கிணற்றில் தவறி வீழ்ந்த முதியவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சின்னையா பரமசாமி (வயது-66) என்பவரே உயிரிழந்தவராவார்.

அவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ம-4)

## இரு தினங்களில் 103.3 மி. மீற்றர் மழை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ். குடாநாட்டில் கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய இரண்டு நாள்களில் 103.3 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. அதேநேரம் கடந்த புதன்கிழமை 30.9 பாகை செல்சியஸ் வெப்ப நிலை பதிவாகியுள்ளது என்று யாழ். திருநெல்வேலியிலுள்ள வளிமண்டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

திங்கள் காலை 8.30 மணி தொடக்கம் செவ்வாய் காலை 8.30 மணிவரை 68.4 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், செவ்வாய் காலை 8.30 தொடக்கம் புதன்கிழமை காலை 8.30 மணி வரைக்கும் 34.9 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளன.

அதேவேளை கடந்த புதன்கிழமை 30.9 பாகை செல்சியஸ் வெப்ப நிலையும், செவ்வாய்க்கிழமை 30.1 பாகை செல்சியஸும், திங்கள் 29.9 பாகை செல்சியஸும் வெப்பநிலை பதிவாகியுள்ளன. (த-4)

## சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மாரச் 8

மகளிர் தினத்தை முன்னிட்டு தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளில் மகளிர் கணக்கு (ஸ்திரி) வைத்துள்ள பெண்களுக்கு விசேட பரிசில்கள் இன்று வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

★ ★ ★

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நெடுந்தீவு முகிலனின் 'சாம்பல்' குறும் பட வெளியீடு நடைபெறும் இந்த நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.15 மணிக்கு யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது. (3)

★ ★ ★

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் 'பெண்களின் மாற்றத்துக்கான செயற்பாட்டு வலைப்பின்னல் அமைப்பின்' வடமாகாண பெண்கள் பங்கு பற்றும் சர்வதேச பெண்கள் தினம் இன்று நடைபெறவுள்ளது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வுக்கு வடமாகாண பெண்கள் மாற்றத்துக்கான செயற்பாட்டு வலைப்பின்னலின் தலைவி திருமதி சுகந்தி சிவகரன் தலைமை வகிப்பார். நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளர் திருமதி கோசலை மதன் கலந்துகொள்வார். (3-400)

★ ★ ★

அல்லாரை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சர்வதேச மகளிர் தின விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும். சங்க உப தலைவி ச.சாந்தினி தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி றஞ்சனா நவரத்தினமும், சிறப்பு விருந்தினர்களாக பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலர் சு.ரவிகரன், கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குலதுங்க ஆகியோரும் கலந்துகொள்வர். நிகழ்வில் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (3-9)

★ ★ ★

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கோண்டாவில் பொது நூலகத்தில், மகளிருக்கான விசேட போட்டிகள் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன. பெண்களது ஆற்றல்கள், திறன்கள், சாதனைகள், வாழ்க்கைக் குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்கியதான தகவல்களைக் கொண்ட நூல்கள் இன்று அறிமுகப்படுத்தப்பட்டு அதிலிருந்து வினாடிவினாப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகள் கோண்டாவில் பொது நூலகர் கே. அனிதா தலைமையில் நடைபெறும். இதன்போது இலவசமாக பெண்களை நூலக அங்கத்தவர்களாக இணைக்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (3-14)

★ ★ ★

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர்திருமதி பூபதி சிவலோகநாதன் கலந்து கொள்வார்.

★ ★ ★

மக்கள் வங்கி, மாவட்ட வலைப் பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் இன்று காலை 9 மணிக்கு ஸ்ரான்லி வீதியில் உள்ள மக்கள் வங்கிக் கிளையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் மக்கள் வங்கியால் அறிமுகப் படுத்தப்பட்ட ''வனிதா வாசனா'' கணக்கு தொடர்பான அறிமுக உரையும், வங்கியில் மூத்த பெண் உத்தியோகத்தர்கள் கௌரவிப்பும் நடைபெறவுள்ளன. (3-14)

★ ★ ★

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர்தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச உதவிப் பிரதேச செயலாளர் செல்வி ரஞ்சனா நவரத்தினம் கலந்துகொள்வார். (3-14)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 8

இலங்கை வங்கியின் வட்பிராந்திய நிலையத்தின் ஏற்பாட்டில் இலங்கை வங்கியின் இரண்டாம் தரக்கிளை நடத்தும் மகளிர் தின நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி வெளிவாரி பட்டப் படிப்புகள் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கி உத்தியோகத்தர் திருமதி சங்கீதா தயானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வி.விமலநாதன் கலந்து கொள்வார். (3-14)

## கணினிப் பயிற்சி ஆரம்பம்

கரவெட்டிப் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் கணினிப் பயிற்சி நெறிக்கு பதிவு செய்த மாணவர்களுக்கான வகுப்புகள் நடைபெறவுள்ளன. இந்த வகுப்புகள் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் நடைபெறவுள்ளது. (3)

## நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமாவுக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை நூலகச் சங்கத்தின் நூலகத் தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறி தரம்-1 இற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கைநெறிக்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல் அல்லது ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் இருதடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் தாய் மொழி உட்பட 2 பாடங்களில் திறமைச்சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.இதற்கான நேர்முகத் தேர்வு நாளை சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் நடைபெறும் என இலங்கை நூலகச் சங்க யாழ். நிலைய ஒருங்கிணைப் பாளர் திருமதி கல்பனா சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.(3-14)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்மகிழ 11-06-1950

மண்மகிழ 16-01-1962



கண்நெகிழ 01-01-2013

கண்நெகிழ 23-01-2013

அமரர்களான

## சங்கரப்பிள்ளை தங்கேஸ்வரன்
## தங்கேஸ்வரன் ஜீவமாலா

வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் வருடங்களில் இல்லை
வாழ்க்கையில் உண்டென்பதை வாழ்ந்து காட்டிய நீங்கள்...
காலனவனின் கட்டளைதனை விரைந்தே நிறைவேற்றி
கண்ணீர்கடலில் எங்களை தத்தளிக்க விட்டதேன்?
போகட்டும்... விதி வலிந்து நீவீர் இருவரும்
புதுவுலகம் ஏகினாலும் விழித்துளி வழியே
எப்போதும் எம் உயிரை நனைத்தபடி எங்களோடு நீங்கள்...

இன்று (08.03.2013) வெள்ளிக்கிழமை அன்னார்களது வீட்டுக்கிருத்தியமும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் சகோதரன் வரதனின் இல்லத்தில் நடைபெறும்.

37/23, 1ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

இங்கனம்
குடும்பத்தினர், சகோதரர்கள்,
சிறிஸ்காந்தன்(சிறி கடை புங்குடுதீவு)
சிறிதரன்(பொலிவியா),
சிறிவரதன்(சரண்ஜா தொலைத்தொடர்பகம்),
சிறிபாலன்(ஜேர்மனி)

(34266) (8,16,14)

# வீதிகளைத் திருத்தக் கோரிக்கை

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மோசமாகச் சேதமடைந்துள்ள இரு வீதிகளை புனரமைத்துத் தருமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றிடம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பருத்தித்துறை -மருதங்கேணி பிரதான வீதியில் 15 ஆவது கிலோ மீற்றர் தொடக்கம் 29 ஆவது கிலோமீற்றர் வரையான 14 கிலோ மீற்றர் நீளமான வீதி மிகமோசமாகச் சேதமடைந்த நிலையில் உள்ளது.

குறிப்பாக நாகர் கோயில் சந்தியில் இருந்து 450 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள பாலம் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட முடியாத நிலையில் காணப்படுகின்றது. இதனைத் திருத்த அவசரமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது.

(ம-8)

# நன்றி நவிலலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



திருமதி
சுவாமிரத்தினசர்மா
திரிபுரேஸ்வரி அம்மா(சரோஜா)

கடந்த (25.02.2013) திங்கட்கிழமை சிவபதமடைந்த திருமதி சுவாமிரத்தினசர்மா திரிபுரேஸ்வரி அம்மா (சரோஜா) அவர்களின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்தோருக்கும். தொலைபேசி அழைப்பு மற்றும் இதர ஊடகங்களினூடாக அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும், ஏனைய உதவி ஒத்தாசை புரிந்த உறவினர் மற்றும் நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கும் அதே வேளை அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை மாசி மாதம் 25ஆம் நாள் (09.03.2013) சனிக்கிழமை மு.ப.11.00மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். மேற்படி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சாந்தி,
தாவடி, கொக்குவில்
தொ.பே. 021 222 6072

குடும்பத்தினர்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியின் கணித, விஞ்ஞான பாட ஆசிரியையாகிய

## திருமதி சுதர்சினி சிறிகாந்தன்

அவர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் IIIஇல் சித்தியடைந்து வட மாகாணக் கல்வித் திணைக்களத்தில் கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றதையிட்டு அகமகிழ்வதுடன் தொடர்ந்தும் அவர் பல பதவி உயர்வுகளைப் பெற்று கல்வியுலகிற்கு சேவையாற்றுவதற்கு இறைவன் துணை நிற்க வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, வல்வெட்டித்துறை.

# முதலாம் ஆண்டு நினைவு தினம்



நயினாதீவு தில்லைவெளி ஸ்ரீ பிடாரி அம்பாள் அன்னதானசபை பொருளாளரும், சமய சமூக சேவகியுமான

அமரர்

## முத்தையா ஞானேஸ்வரி

ஆண்டு ஒன்று ஆனதம்மா-எமைப்பிரிந்து
மீண்டு கொள்ள முடியவில்லையே உங்கள் பிரிவு
வேண்டுகின்றோம் அன்னையவள்-சன்னதியில்
வேண்டுமினி அணையாது எங்களுக்கு
மீண்டும் இந்த பூமிதனில் பிறந்திடவே
தாயவளே! வாருமம்மா! வாருமம்மா!

இன்று (08.03.2013) வெள்ளிக்கிழமை மு.ப.11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

8ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(c/6917) (8,16,14)

குடும்பத்தினர்.

# பிறந்தநாள் வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்



உயர்திரு

## கிருஷ்ணப்பிள்ளை சிவராஜா

(பிராந்திய பிரதம பாதுகாப்பு அதிகாரி) (D.C.S.O)

பாதுகாப்பின் மகத்துவ சேவை
மனித வாழ்வின் அடையாள முத்திரை
இனிய உங்கள் சேவைக்கு
பணிந்தது எமது பாராட்டு
துணிந்த உங்கள் சேவைக்கு

இலங்கை வங்கி
வெளிக்கள பாதுகாப்பு
உத்தியோகத்தர்கள்,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்கள்

## அம்பலவாணர் கதிரிப்பிள்ளை
### (காசிப்பிள்ளை)

அல்வாயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - பொன்னாச்சி தம்பதியரின் மகன் கதிரிப்பிள்ளை (காசிப்பிள்ளை) கனடாவில் நேற்று (07.03.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தம்மா (முத்தாச்சி)வின் அன்புக் கணவரும் கனகாம்பிகை (கனடா), காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் மற்றும் சுசீலாதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சீவரத்தினம் (செல்லக்கிளி- கனடா), துரைராஜா (கனடா), காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும் வசந்தா நேரு (கனடா), ஜெயந்தகுமார் உமா (கனடா), கீதா சுதாகரன் (கனடா), உதயகுமார் (கனடா), ராஜ்குமார் (கனடா), சிறிகாந்தன், திருமகள் (கொடிகாமம்), காந்தரூபன், கவிதரூபனா (கச்சாய்), பிரஜீவ் (கனடா), தீபா கருணா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கண்டாவத்தை,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

தகவல்
க.புவனேந்திரன்
(அப்பு)

## சின்னத்தம்பி இராசம்மா

வேலணையைப் பிறப்பிடமாகவும், அல்லாரையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராசம்மா நேற்று (07.03.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நாகரத்தினத்தின்(தவராசா) அன்புத் தாயும் சிவத்தின் அன்பு மாமியும் சுஜீவன், சுபாசினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2013) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெள்ளாம் போக்கட்டி, அல்லாரை,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி பொன்னம்மா கோபாலசாமி

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும்,81/A சிவன்பண்ணை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா கோபாலசாமி நேற்று (07.03.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

81/A. சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## பழநி சுப்பிரமணியம் (சீவரட்ணம்)



யாழ்ப்பாணம், சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி கோயிற் குடியிருப்பு, விநாசித்தம்பி வீதியை வதிவிடமாகவும் கொண்ட பழநி சுப்பிரமணியம் நேற்று (07.03.2013) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியை கள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

விநாசித்தம்பி வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/9222) (45.6)

## சுப்பிரமணியம் வள்ளிநாயகி



சுதுமலை தெற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் வள்ளிநாயகி நேற்று (07.03.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு -சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், பரமலிங்கம், பத்மரேகா(பவளம்), பரமேஸ்வரி, பஞ்சாட்சரம், பாக்கியலட்சுமி(குஞ்சு), பத்மகலைவாணி(பாப்பா),நிர்மலா(ராதா) ஆகியோரின் அன்புத் தாயும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08.03.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

சுதுமலை தெற்கு,
மாவடிலேன், மானிப்பாய்.

மகன். சு.பஞ்சாட்சரம்,
மருமகன் இராமச்சந்திரன்.

## தமிழீழமே...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

காரம் தொடர்பில் டில்லி மக்களவையில் நேற்று நடந்த சிறப்பு விவாதத்தில் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சராக யார் இருந்தாலும் இலங்கை தொடர்பான கொள்கை ஒன்றும் மாறவில்லை. டெசோ தீர்மானங்களை நாங்கள் கொடுத்தபோது இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் நிலை என்ன என்பதே ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம் பிள்ளை உள்ளிட்ட வெளிநாட்டவர் பலரதும் கேள்வியாக இருக்கிறது. இப்போதாவது இலங்கை விவகாரத்தில் இந்திய அரசு தெளிவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

நாங்கள் தமிழீழம் கோருகிறோம். அது தி.மு.கவின் நிலைப்பாடு மட்டுமல்ல, அனைத்துக் கட்சிகளின் நிலைப்பாடும் அதுவே. நாங்கள் ஒருமித்த குரலில் தமிழீழத்தைத் தவிர வேறு தீர்வு இல்லை என்கிறோம். தற்போது தமிழீழம் பற்றி பேசவில்லை. அதற்கு முன்பாக புனர்வாழ்வுப் பணிகள் அங்கு மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம்.

புலம்பெயர்ந்த ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேரின் கதி என்ன? இலங்கை அரசு தமது சொந்த மக்களையே இனப்படுகொலை செய்திருக்கிறது. இலங்கை தமிழர் பிரதேசங்களில் 49 ஆயிரம் விதவைகள் இருக்கின்றனர். தமிழ்ப் பெண்கள் தடுத்துவைக்கப்பட்டு பலாத்காரம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் இன்னமும் சித்திரவதைக்குள்ளாகின்றனர்.

பெண்களுக்கு எதிராக நடத்தப்பட்ட திட்டமிட்ட சித்திரவதையும் படுகொலையும் இனப்படுகொலையே. இதேபோல், தமிழர்களின் கலாசாரத்தை இலங்கை இராணுவம் திட்டமிட்டு சீரழித்ததும் இனப்படுகொலையே.

இலங்கையில் 367 இந்து கோயில்கள் அழிக்கப்பட்டுவிட்டன. 89 தமிழ் கிராமங்களின் பெயர்கள் சிங்களத்தில் மாற்றப்பட்டுள்ளன. இது ஒரு கலாசார இனப்படுகொலை.

பெர்லின் நூலகத்தில் யூதர்களின் கலாசாரத்தை சொல்லக் கூடிய பல்லாயிரக்கணக்கான நூல்களை ஹிட்லர் எரித்தார். இதுதான் இலங்கையில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அனைத்து சர்வதேச போர் விதிகளையும் இலங்கை மீறி அப்பாவி பொதுமக்களை, பெண்களைப் படுகொலை செய்தது. அப்படிப்பட்ட போர்க்குற்றம் புரிந்த நபருக்கு - தமிழரின் இரத்தக் கறைபடிந்த கையோடு வரும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு - சிவப்புக்கம்பள வரவேற்பு எப்படிக் கொடுத்தது இந்திய அரசு?

பிரபாகரனின் மகன் 12 வயது பாலச்சந்திரனுக்கு சாப்பிடக் கொடுத்து விட்டு 10 நிமிடங்களிலேயே கொடூரமாக சுட்டுக் கொன்றிருக்கிறது இலங்கை இராணுவம். ஒரு துப்பாக்கி குண்டு பாய்ந்த நிலையில் உயிரிழந்துவிட்டான் பாலச்சந்திரன். ஆனால், அதற்கும் மேல் 4 தடவைகள் சுட்டு பாலகனை படுகொலை செய்திருக்கிறது இலங்கை இராணுவம்,

யூகோஸ்லோவியாவில் 1991 ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைக்காக 1992 ஆம் ஆண்டு ஐ.நா. சர்வதேச விசாரணைக்கு உத்தரவிட்டது. சிரியா, போஸ்னியா, வடக்கு சூடான் ஆகிய நாடுகளின் ஜனாதிபதிகளுக்கு எதிராக போர்க்குற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்போது இலட்சக்கணக்கான தமிழர்களைப் படுகொலை செய்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஏன் போர்க்குற்ற நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது?

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவின் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும். சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கையை நிறுத்த வேண்டும் - என்றார் அவர்.

## தொலைந்து விட்டது

முருகேசு ரமேஸ் என்பவரது தே.அ.அட்டை இல.823025084V, சாரதி அனுமதிப்பத்திரம் அட்டை இல. B-1384056, ATMகாட்2 என்பன குஞ்சர்கடைக்கும்-நெல்லியடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:- 077 1377356

## வயல் காணி உடன் விற்பனைக்கு

கொடிகாமம் பருத்தித்துறை பிரதான வீதியில் இருந்து 250 யார் தூரத்தில் 19 பரப்பு வயல் உடன் விற்பனைக்கு

தொடர்பு: 077 7561 341

## திருநெல்வேலி சிமாட் கிட் ஸ், உரும்பிராய்கிட்ஸ்பார்க்முன்பள்ளி
## ஆசிரியர் பதவி வெற்றிடம்

க.பொ.த. உயர்தரத்தில்
நடனம், சங்கீதம்,
நாடகமும் அரங்கியலும்
ஆகியவற்றில் திறமைச்சித்தி
பெற்றவர்களும், இதே பாடங்களில்
O/L இல் திறமைச் சித்தி
அடைந்தவர்கள் கற்பித்தல்
அனுபவம் இருப்பின்
விண்ணப்பிக்கலாம்.
நேர்முகப் பரீட்சைக்கு 11.03.2013
திங்கட்கிழமை முற்பகல் 10.00
மணிக்கு
உரிய ஆவணங்களுடன்
சமுகம் தரவும்.
நேர்முகப்பரீட்சை நடைபெறும்
இடம்

திருநெல்வேலி சிமாட் கிட் ஸ்
ஆடிய பாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு.

advt@uthayan.com
0215671111

இறந்த சந்தியை மீண்டும் பெற்றிட பாவிருங்கள்
றோயல் குளுக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12. T.P 0777 2776 70




சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.021 222 2567

★ விளையாட்டுத்துறையில் வெற்றிபெறும் வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் வீறு கொண்டெழும் வேகத்தினை வழங்குவது றோயல் குளுக்கோஸ்
★ நோயுற்றவேளை சோர்வுற்று இருக்கும் உங்களுக்கு புத்துணர்வும் புதுத்தென்பும் தருவது றோயல் குளுக்கோஸ்
★ காலை முதல் மாலைவரை வேலை அதிகம் காரணமாக சோர்வுற்ற நிலை அடையும் போது புதிய உற்சாகம் பெற உங்கள் கையில் இருக்க வேண்டியது றோயல் குளுக்கோஸ்
★ மழலைகட்கும் மகப்பேற்றுத்தாய்மாருக்கும் விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கும் முதியோருக்கும் முதாதையர் காலத்தில் இருந்து முன் நின்று உற்சாகம் தருவது றோயல் குளுக்கோஸ்
சந்தைப்படுத்துவோர்:- சிவா நறுமணப் பூங்கா, 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
உற்பத்தியாளர்:- றோயல் இன்டஸ்ரீஸ், ஹூல்வோன்டல் ஸ்ரீற், கொழும்பு - 13

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 28ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற

### கனகசபாபதி சஞ்சீவன்
B.A.(Hons)Economics

அவர்கள் மேன்மேலும் பலபட்டங்கள் பெற்று வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்
மாமா, மாமி
கிருசன்(மச்சான்)

## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
## வருடாந்தப் பொதுக் கூட்டம்

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் 24ஆம் திகதி மார்ச் மாதம் 2013 ஆம் ஆண்டு (24.03.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் எல்லோரையும் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம். விலாசங்கள் மாறி இருப்பவர்கள் தயவு செய்து எங்களுடன் தொடர்பு கொள்ளவும். அழைப்பு கிடைக் காதவர்கள் இந்த அறிவித்தலைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம். 27.01.2013 இல் பொதுக் கூட்டம் என்று 17.03.2013 இல் அறிவிக்கப்பட்டது. அந்த அறிவித்தல் 24.03.2013 இற்கு மாற்றப்பட்டுள்ளது.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம் கொக்குவில் இந்துக் கல்லூரி.

# மரண அறிவித்தல்

## சுப்பையா கமலம்



வேலணை மேற்கு வண்ணாம்புலத்தைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா கமலம் நேற்று (07.03.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேரக்கேணியடி,மட்டுவில் மத்தி,
சாவகச்சேரி.

தகவல்:
பே.நடேசப்பிள்ளை.
(மருமகன்)

# யூசுப் பதானுக்கு டும்... டும்... டும்...

இந்திய அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராகத் திகழ்ந்த யூசுப்பதான் சிறப்பான ஆட்டத்தைத் தொடர்ந்து வெளிப்படுத்தாததால் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அணியில் இருந்து நீக்கப்பட்டார்.

யூசுப்பதானுக்கும், மும்பையைச் சேர்ந்த பிசியோதெரபி மருத்துவர் அப்ரீனுக்கும் கடந்த ஆண்டு மார்ச் 24 ஆம் திகதி திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றிருந்தது.

தற்போது யூசுப்பதான்-அப்ரின் திருமணம் இந்த மாதம் 27 ஆம் திகதி மும்பையில் நடைபெறுவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதை யூசுப்பதான் குடும்பத்தினரும், உறுதிப்படுத்தியுள்ளனர். திருமண வரவேற்பு யூசுப்பதானின் சொந்த ஊரான வதோதராவில் நடைபெறவுள்ளது. அங்குள்ள நட்சத்திர ஹோட்டல் அல்லது நாடியாத்தில் உள்ள பண்ணை வீட்டில் திருமண வரவேற்பு நடைபெறவுள்ளது.

# ஆள் மாறாட்டம், ஓர் எச்சரிக்கை



என்னுடைய பெயர் Dr. அமிர்தலிங்கம் பகீரதன். நான் தற்பொழுது ஒரு மருத்துவராக ஐக்கிய இராட்சியத்தில் வேலை செய்கிறேன். நான் திரு அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களின் இரண்டாவது மகன். அமிர்தலிங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளராகவும் இலங்கை நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவராகவும் தமிழர் பிரதிநிதியாகப் பல வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தவர்.

சமீபத்தில் என்னுடைய பெயரைச் சொல்லி ஓர் ஏமாற்றுக்காரர் மோசடியில் ஈடுபடுகிறார் என்பது எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. தான் கனடாவில் வசிப்பதாகவும் மக்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகவும் சொல்லி மக்களிடம் இந்த நபர் பணமும் பாஸ்போட்டும் பெற்று இருக்கிறார். பின் அங்கிருந்து பணத்துடன் காணாமற் போய்விட்டார் என்பது என் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இப்படியான நடவடிக்கை முன்னரும் நடந்துள்ளது. 1997 இல் இந்த மோசடி தொடர்பில் ஒருவர் பிடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அதன் பின்னர் தணிந்திருந்த இந்தக் குற்றச் செயல் தற்போது மீண்டும் தலைதூக்கி உள்ளது. இதில் ஒருவரோ அல்லது ஒருசிலர் கூட்டாகவோ இணைந்து செயற்படுகிறார்கள் என நான் கருதுகிறேன்.

நான் இந்தமாதிரியான சட்டவிரோத நடவடிக்கைகள் எதிலும் ஈடுபட்டது கிடையாது. ஈடுபடுவதும் இல்லை. என் பெயரைச் சொல்லி அல்லது வேறுவிதமாக யாராவது உங்களை அணுகினால் தயவுசெய்து பொலிஸாருடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

ஏமாற்றப்பட்டவர்களுக்கும் பொருளை இழந்தவர்களுக்கும் என் வருத்தத்தைத் தெரிவிக்கும் அதேவேளை இந்தச் சம்பவம் எதற்கும் நான் பொறுப்பல்ல என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

**Dr. அமிர்தலிங்கம் பகீரதன்**


advt@uthayan.com
0215671111

## கிளி/ எடிசன் கல்லூரியில் சாதனை

A/L கலை வர்த்தக மாணவர்கள் பொருளியல் பாடத்தில் ஆசிரியர் சி.சத்தியசீலனின் வழி நடத்தலில் இக் கல்வி நிலையத்தில் 12 மாணவர்கள் A தரசித்தியையும், ஏனைய மாணவர்கள் அனைவரும் B,C தரச்சித்திகளையும் பெற்றுள்ளனர்.
குறிப்பு:- இங்கு எந்த ஒரு மாணவரும் F,S தரத்தைப் பெறவில்லை என்பதுடன் இவ் ஆசிரியரால் முழுமையாக வழிநடத்தப்பட்ட ஒரு மணவரேனும் F,S தரத்தைப் பெற்றிருந்தால் அவர் இக்கல்வி நிலையத்தில் பொருளியல் பாடத்துக்கு கட்டிய முழுப் பணத்தினையும் மீளப்பெற முடியும்.

பொருளியல் பாட ஆசிரியர்.
சி. சத்தியசீலன்

## THE SCIENCE POINT
கண்ணாதிட்டி வீதி, யாழ். நகர்.

Inorganic Paper
Fri 3.15- 5.15
இன்று 08.03.2013 ஆரம்பம்

அயன் சமநிலை
பிரிவு- II
Sun 3.30 - 4.30, Wed 5.15- 6.15
ஆரம்பம்:- 10/03 ஞாயிறு 3.30

By:- அன்பு

## வீடு வாடகைக்கு தேவை

சிறிய குடும்பத்துக்கு மாநகர சபை எல்லைக்குள், நல்லூர், அரியாலை போன்ற பிரதேசங்களில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு
0770417644

## New Degree College
மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக

தமிழ் திரு.A.K. கீர்த்திராஜன்
A/L 2013, DAY CLASS வினாவிடை வகுப்புகள், A/L 2014, 2015 புதிய பிரிவுகள் நடைபெறுகின்றன. தமிழ் இலக்கணத்திற்கு தனிப் பிரிவுகள். தனிப்பாட அனுமதி உண்டு.

## Iphone log உடைத்துத் தரப்படும்

Iphone 5, iphone 4S போன்கள்
X - Sim போட்டு
Log உடைத்துத் தரப்படும்.
தொடர்பு: 077 7794324

## வாடகைக்கு கடை தேவை

யாழ். நகர் மையப் பகுதியில் மேல்மாடியுடன் கூடிய கடை வாடகைக்குத் தேவை.
தொடர்பு:- 0777777552

## கணினி பழுது பார்த்தல்

உங்கள் வீட்டு, அலுவல கணினிகள் பழுதடைந்தால், சீரான முறையில், விரைவாகத் திருத்திப் பெற்றுக்கொள்வதற்கும், வலைப்பின்னல் மற்றும் இதர நிபுணத்துவ ஆலோசனைகளுக்கும் நாடுங்கள்....



IT ISLAND
Digital Services
347, Kasthuriyar Road,
Jaffna

## நுட்பம் - இலங்கை

தமிழ் தகவல் தொழில்நுட்ப அமையம்
நடாத்தும்
நுட்பம் மாநாடு - 2013
NUDPAM CONFERENCE
நாளை 9ஆம் திகதி காலை 9.00 மணி முதல் 4.30 வரை
இடம்: யாழ். பொது நூலக கேட்போர் கூடம்
தகவல் தொழில்நுட்பத்துறை சார்ந்த கருத்துரைகள்
பதிவுகளுக்கு- www.nudpam.lk
அனுசரணை:
etisalat
Sri Lanka Telecom One Country. One Voice.
HARIKANAN PRINTERS OF THE NORTH
MCS IT Campus
கிருபா லேணர்ஸ்
கம்ப்யூட்டர் ருடே

## போட்டிப்பரீட்சை விசேட வகுப்புகள்

★ வடமாகாண கணக்காளர் பரீட்சைக்கு ஒவ்வொரு ஞாயிறும் மு.ப. 10 மணி-3மணி வரை
* G.S.சட்டக்கல்லூரி, வங்கிகள்சார் பரீட்சைகளுக்கு ஒவ்வொரு ஞாயிறும் பி.ப.12.30 மணி
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கிக்கு அருகில்)

## வயது ஒரு தடையா!

65 வயதுக்குட்பட்ட ஆர்வமுள்ள வேலை வாய்ப்பை நாடி நிற்போருக்கு, அரச காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி ஆலோசகராகப் பணியாற்றி நல்ல வருமானத்தை ஈட்ட ஓர் அரிய வாய்ப்பு!!

குறிப்பு: முழுநேரமாகவோ, பகுதி நேரமாகவோ பணியாற்றலாம்.

* 2 வார பயிற்சிக் காலமுடையது.
* பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
* பணி நிலையங்கள்:-யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, நெல்லியடி, கிளிநொச்சி.

அடிப்படைத் தகைமைகள்:
★ G.C.E(O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
★ 18வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை 28.03.2013 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல. 4440
மே/பா. உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



25ஆம் வருட சேவையை நிறைவு செய்யும்
திரு.இ.மதிகரன்
(மின்னியலாளர் யாழ். பல்கலைக்கழகம், நல்லூர் பிரதேச இந்து ஆலயங்களின் நலநோம்பு அபிவிருத்தி ஒன்றியத் தலைவர்)
தன்னிலை தாழ்ந்தாலும் தன் சமூக நிலை உயர்த்தும் தமைமையுடையோன் பொன், பொருள் பாராது பொருத்த மாணவர்களை போற்றும் பண்புடையோன் எந் நிலை வந்தாலும் எடுத்த காரியத்தை சிறப்புடன் ஆற்றும் துணிவுடையோன். தனது சேவைக் காலத்தில் 25 வருடங்களை கடந்து மேலும் உயர்வு பெற வாழ்த்தும்

அரியாலையூர்
ச.பஞ்சாட்சரம் (குடும்பம்), ஏ.வீரசிங்கம் (குடும்பம்), பாஸ்கரன் தேவகி (குடும்பம்)

## IIS

அனைத்து கணனிக் கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவு ஆரம்பம்
09.03.2013 காலை 10.00மணி
மேலதிக விபரங்களுக்கு: 021 4922 741
IIS INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

## A/L ENGLISH MEDIUM CLASSES @ TOP NOTCH

ACC- S.S.Karunaithas (B.B.A(HONS), P.G.Dip.Edu(Distinction)
ECON- S.Richikesan (B.B.A(HONS)(HRM spl)
B.ST- Famous CIMA Lecturer (CIMA Passed Finalist)

2014 & 2015 Batch Start on 09 - 03 - 2013 Satur day 8.00 AM
377, kasthooriyar road,Jaffna
To contact- 0770276441,0750424069


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## உங்களது பணத்தை வீண் விரையமாக்கவோ அல்லது உயிரை ஆபத்தில் இட்டுச்செல்லவோ வேண்டாம்



பிரெண்டன் ஓ கொணர்
அவுஸ்திரேலியாவின் குடிவரவு மற்றும் பிரஜாவுரிமை தொடர்பான அமைச்சர்

இதுபற்றி மிகத் தெளிவாகக்கூற எனக்கு இடமளியுங்கள். மிகவும் நியாயமான ஒரு காரணமின்றி, எந்தவொருவருக்கும் புகலிடம் வழங்க, அவுஸ்திரேலியாவுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவ்வாறானவர்கள் இலங்கைக்கு வரும் அடுத்த விமானத்திலேயே மீண்டும் திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள். எனவே, உங்கள் பணத்தை வீணாக விரையம் செய்ய வேண்டாம். உங்களது உயிரை ஆபத்தில் இட்டுச் செல்ல வேண்டாம்.

ஏற்கனவே இவ்வாறு இங்கு வந்த நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். எதிர்காலத்திலும் இவ்வாறு வருபவர்கள் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள். அவுஸ்திரேலியாவில் புகலிடம் பெற மிக நியாயமான காரணம் இல்லையேல், துரிதமாக உங்களை இலங்கைக்கு அனுப்பி வைக்க நேரிடும். அவ்வாறானவர்களுக்கு பணம் அல்லது வேறு எந்த வகையிலான ஒத்துழைப்புக்களும் கிடைக்க மாட்டாது என்பதைக் கூறவேண்டும். தனது பணத்தை வீண் விரையம் செய்து, உயிரைப் பணயம் வைத்து, கடல் மார்க்கமாக அவுஸ்திரேலியாவுக்கு வர முயற்சி செய்வது சிறிதேனும் பயனுள்ள ஒரு முயற்சியல்ல. மீண்டும் இலங்கைக்கு வரக்கிடைப்பது மாத்திரமே அதன் ஒரேயொரு பிரதிபலனாகும்.

உங்களை அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்ல பொய் கூறுவார்கள். பொய் சத்தியம் செய்வார்கள். அவ்வாறு வருபவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை என்று நான் மீண்டும் கூறுகின்றேன். எந்தவித துரித பிரதிபலனும் கிடைப்பதில்லை. எவ்விதமான விசேட கவனிப்புகளும் கிடைக்காது.

மிகவும் ஆபத்தான முறையில் மேற்கொள்ளப்படும் படகுப் பயணங்களில் இருந்து மனிதர்களைப் பாதுகாக்க அவுஸ்திரேலிய அரசாங்கம் ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றது.

### அவுஸ்திரேலிய அரசாங்கம் தமது கொள்கைகளை எவ்வாறு மாற்றியுள்ளது?

எமது அரசாங்கம் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மீண்டும் செயற்படுத்தியுள்ளது. படகுகளில் கடல் மார்க்கமாக வருபவர்களை, குறித்த ஒரு காலத்திற்கு, நாவுறு அல்லது பப்புவா நியூகினி போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்க முடியும். உண்மையில், மற்றமடைந்துள்ள நடவடிக்கைகளுக்கு அமைய, சாதாரண விதிமுறைகளுக்கு அமையாத எந்தவொருவருக்கும் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பை அவுஸ்திரேலியா ஏற்றுக்கொள்ள மாட்டாது. அவுஸ்திரேலிய சர்வதேச கொள்கைகளுக்கு அமையாத அனைவரும், துரிதமாக மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள்.

எமது அரசாங்கம் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மீண்டும் செயற்படுத்தியுள்ளது. படகுகளில் கடல் மார்க்கமாக வருபவர்களை, குறித்த ஒரு காலத்திற்கு, நாவுறு அல்லது பப்புவா நியூகினி போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்க முடியும். உண்மையில், மற்றமடைந்துள்ள நடவடிக்கைகளுக்கு அமைய, சாதாரண விதிமுறைகளுக்கு அமையாத எந்தவொருவருக்கும் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பை அவுஸ்திரேலியா ஏற்று மாட்டாது. அவுஸ்திரேலிய சர்வதே கொள்கைகளுக்கு அமையாத ... இலங்கைச்




### ஹஸிதவின் பயங்கரமான அந்த உண்மைச் சம்பவம்

“எனது பெயர் ஹசித. எனக்கு நன்கு அறிமுகமான ஒருவர் என்னிடம் வந்து "படகு மூலமா அவுஸ்திரேலியா செல்ல முடியும்" என்று கூறினார். சுமார் 20,000 கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரம் என்றாலும், பணக் கஷ்டம் காரணமாக, படகில் அவுஸ்திரேலியா செல்ல நான் தீர்மானித்தேன். இதற்காக நான் வட்டிக்கு பணம் பெற்றேன். கடன்களை வாங்கினேன். வீட்டுப் ப்த்திரத்தையும் அடகு வைத்தேன். ஒரு நாள் இரவு சுமார் 50 பேர்கள் கொண்ட எமது குழு படகில் ஏறியது. காற்று வரக்கூட படகில் ஒரு ஜன்னல் இருக்கவில்லை. சூரியனைக் கண்களால் காணாது மூன்று வாரங்கள் நாம் நீண்ட தூரம் மிதந்து சென்றோம். உணவும், நீரும் மிகக் குறைந்தளவிலேயே எம்மிடம் இருந்தது. பசியும், வியர்வையும் தாங்க முடியவில்லை. நாங்கள் அவுஸ்திரேலியாவைச் சென்றடைந்ததும், சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் என்று எம்மைக் கைது செய்தனர். அவுஸ்திரேலியாவில் எமக்கு தொழில் இல்லை என்றும், வீணாக உயிரைப் பணயம் வைத்து இவ்வாறான ஒரு பயணத்தை மேற்கொள்ள முன்னர், சற்று சிந்திக்க இருந்ததாகவும் அவர்கள் எம்மிடம் கூறினர். நான் ஒரு பொறியில் மாட்டிக்கொண்டேன் என்பது அப்போதுதான் எனக்குத் தெரிய வந்தது. நான் நினைத்தவாறு எதுவுமே நடக்கவில்லை. IOM மூலமாக, எங்களை மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது. உயிரைப் பணயம் வைத்து, இவ்வாறான ஆபத்துமிக்க பயணத்தை மேற்கொள்ள நினைக்கவும் வேண்டாம் என்றுதான் நான் கூறுவேன்.”

(இதில் குறிப்பிடப்படும் பெயர் மாத்திரம் மாற்றப்பட்டுள்ளது)

### அவுஸ்திரேலிய அரசாங்கம் தமது கொள்கைகளை ஏன் மாற்றியது?

அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்வதாகப் பொய் சொல்லி, போலி வாக்குறுதிகளையும் வழங்கி, எவ்வித பிரயோசனமும் அற்ற படகுச் சவாரிகளை மேற்கொள்ளும் போது, பெரும்பாலானோர் உயிரிழக்கின்றனர். இவை பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு விடயமல்ல. மிகவும் பயங்கரமான, உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய, படகுச் சவாரிகளினால், மக்களைக் காப்பாற்ற அவுஸ்திரேலிய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதனால் அவர்களுக்கு எவ்வித பலனும் கிடைக்கப் போவதில்லை. உயிரைப் பணயம் வைத்து இங்கு வந்தாலும், அவர்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை. அவர்களுக்கு கிடைக்கும் ஒரேயொரு விடயம் யாதெனில், கையிலுள்ள பணம் விரையமாவதுடன் ஆழ்கடலில் தமது உயிரை மாய்த்துக்கொள்வதும் மாத்திரமே.

அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்வதாகப் பொய் சொல்லி, போலி வாக்குறுதிகளையும் வழங்கி, எவ்வித பிரயோசனமும் அற்ற பட்குச் சவாரிகளை மேற்கொள்ளும் போது, பெரும்பாலானோர் உயிரிழக்கின்றனர். இவை பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு விடயமல்ல. மிகவும் பயங்கரமான, உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய, படகுச் ... மக்களைக் காப்...

அவுஸ்திரேலியாவுக்கு படகில்
**போக வேண்டாம்**

Australian Government

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ்.நகரை அண்டிய பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய சிறிய வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு:-077731 9536
(34274) (2.6)

**வான் சேவை**

உள்ளூர் வான் சேவை கிலோ மீற்றருக்கு ரூபா 50/=
தொடர்பு:-0773734109
(ஆகக்குறைந்த கட்டணம் 2,000/=)
(34278)(2.6)

**காணி விற்பனைக்கு**

பழைய பூங்கா வீதியில் 2 பரப்பு கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-0779232471, 0778161277, 021 222 5298
(34279)(2.6)

**ENGLISH CLASSES**

கரணவாயில் ஆங்கில வகுப்புகள்
(Spoken & Grammar)
நடைபெறுகின்றன.
தொடர்பு:-077 7343629

**சேவை நலன் பாராட்டும் பிறந்த நாள் வாழ்த்தும்**

08.03.2013



எமது கல்லூரியின் சிரேஷ்ட கணித ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும், சேவையாற்றி ஓய்வு பெற்றிருக்கும்
திருமதி **கோகுலராணி சிறீகரன்**
அவர்கள் பிறந்த இந்நாளில் இறையருள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.
**கல்லூரிச் சமூகம்**
**யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை.**
(34275)(6.11)



**மங்கள இசை**

கோயில் உற்சவ தினங்களா?
கல்யாண வைபவங்களா?
பூப்புனித நீராட்டு விழாக்களா?
மற்றும் மங்களகரமான இசை விழாக்களா?
அனைத்து நிகழ்வுகளையும் மங்களகரமாகச் சிறப்பிக்க அழையுங்கள்!!



ஜேர்மனியிலிருந்து வருகை தந்திருக்கும்
"ஐரோப்பிய தவில் சக்கரவர்த்தி"
எனும் புகழ் பெற்ற நெல்லியடி தவில் வித்துவான்
**K.P. செல்வநாயகம்** அவர்களை
அத்துடன் தவில் கற்றுக்கொள்ள எங்களை நாடுங்கள்:
மக்கள் வங்கி அருகில், பிள்ளையார் கோயிலடி, வதிரி றோட், இமையாணன், உடுப்பிட்டி T.P. 077 9768573, 077 0287911

# பிரம்மாவின் ஆணவம்

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களில் படைத்தல் தொழிலைச் செய்வது பிரம்மா என்பது உங்களுக்குத் தெரியும். சரஸ்வதி தேவியின் கணவர் இவர். சகல வேதங்களையும் அறிந்தவர். சிவபெருமான் மீது பக்தி கொண்டவர். தவம் செய்கிறவர்களுக்கு வரங்களை வாரி வழங்கக் கூடியவர். அவ்வப்போது தேவர்களை அசுரர்களிடம் இருந்து காப்பதற்காக ஆலோசனைகள் வழங்குபவர். தருமத்தில் பிடிப்பு உள்ளவர் தேவர்களும் மற்றவர்களும் பணிந்து போற்றத்தக்கவர்.

இத்தகைய பெருமைகளையும், சிறப்புக்களையும் கொண்ட இந்தப் பிரம்மாவிடமும் ஆணவம் என்ற துர்க்குணம் இருந்தது. ஊழிக்காலம் வரும்போது எல்லாத் தேவர்களும் மறைந்து போவார்கள். சகல உயிர்களும் அழிந்து போகும், அம்மையப்பராகிய ஒருவர் மட்டுமே இருப்பார். திரும்பவும் அவர் சிருஷ்டியை உண்டாக்குவார். இவை கற்ப கோடி காலமாக நடந்து வருபவை. திருமால், பிரம்மாவுக்கும் கூட ஆயுள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பிரம்மா உறங்கப்போகும் காலம்தான் ஊழிக்காலம். அதனால் பிரம்மாவுக்கு உண்மை விளங்காமல் இருந்தது. ''தான் உறங்கும் போது எல்லா உலகங்களும்அழிந்து போகின்றன. மீண்டும் தான் விழித்தால் எல்லா உலகங்களும் இயங்குகின்றன' என்று அவர் நினைத்துக் கொண்டார். ஊழிக்காலம் முடிந்ததும் சிவபெருமான் ஒருவர் மட்டும் இருந்து படைப்புத் தொழிலுக்காக பிரம்மனை உருவாக்குவதை அவர் அறியவில்லை. அதனால் தானே பிரம்மம் என்றும், தன்னை விட மேலானவர் யாரும் இல்லை என்கிற ஆணவமும் அவரிடம் தோன்றியது. இதனை அறிந்த சிவபெருமான் வைரவர் வடிவில் வந்து அவருடைய ஆணவச் சிரசை வெட்டி வீழ்த்தினார். அப்போதுதான் பிரம்மாவின் ஆணவம் அழிந்தது.

இதற்கு முன்னர் ஐந்து தலைகளைக்கொண்ட பிரம்மா ஒரு தலையை இழந்து நான்முகன் என்ற பெயரைப் பெற்றார். தன்னைச் சிருஷ்டித்து படைப்புத் தொழிலை அளித்த சிவபெருமானையே மறந்து விட்டுத்தானே எல்லோரைக் காட்டிலும் பெரியவர் என்று அவர் நினைத்த காரணத்தால் அவர் ஒரு தலையை இழந்தார்.

மற்றுமொரு சம்பவமும் அவருடைய ஆணவத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. ஒரு சமயம் திருமாலுக்கும், பிரம்மாவுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. ''இந்த உலகத்தைப் படைத்து சகல உயிர்களையும் உருவாக்குபவன் நான்தான். அதனால் நானே பெரியவன் என்று பிரம்மா சொன்னார். அதை மறுத்த திருமால் படைத்தல் தொழில் செய்தால் மட்டும் போதுமா...? படைக்கப்பட்ட உயிர்களைக் காப்பாற்றவில்லையானால் அவை அழிந்து போகும். நான் தான் சகல ஜீவராசிகளையும் காத்து வருகிறேன். ஆகவே நான்தான் உன்னைக் காட்டிலும் பெரியவன், மேலானவன்.'' என்று திருமால் கூறினார். இருவருக்கும் வாக்குவாதம் நடந்து கொண்டே இருந்தது.

படைக்கும் கடவுளும், காக்கும் கடவுளும் தம் கடமைகளை மறந்து சச்சரவு செய்து கொண்டிருந்தால் உலகத்து உயிர்கள் துன்பம் அடையுமல்லவா...? அதனால் சிவபெருமான் அங்கு தோன்றி ''என் அடி முடியை எவர் காண்கிறார்களோ அவரே பெரியவர்; முயலுங்கள்'' என்றார்.

உடனே பிரம்மா அன்னப்பறவை வடிவம் எடுத்து முடியைக் காணப் பறந்து சென்றார். வராக வடிவம் எடுத்து பூமியைத்தோண்டிக்கொண்டு எம்பெருமானின் அடியைக் காண திருமால் சென்றார். சிவபெருமானின் வடிவம் நீண்டு கொண்டே சென்றதால் திருமால் அடியினைக் காணாமல் சோர்ந்து போனார்.

பூமியைத் தோண்டித் தோண்டி, அவர் சென்று கொண்டே இருந்தார். ஆனாலும் எம்பெருமானின் அடியை அவரால் காணமுடியவில்லை. காண முடியாது என்ற உண்மையையும் அவர் புரிந்து கொண்டார். வெகுதூரம் பூமியைத் தோண்டி வந்ததால் திரும்பவும் மேலே வரும் சக்தி அவருக்கு இல்லை. அதனால் சிவபெருமானைத் துதித்து தன் அறியாமையை மன்னித்தருள வேண்டும் என்று வேண்டினார். எம் பெருமானின் திருக்கருணையால் அவர் உடனே பூமியின் மேல் வந்தார். அன்னப்பறவை வடிவம் எடுத்துச் சென்ற பிரம்மாவாலும் சிவபெருமானின்முடியினைக்காண இயலவில்லை. அவருடைய இறகுகள் பறந்து, பறந்து சோர்ந்து போயின. அந்தச் சமயம் சிவபெருமானின் திரு முடியிலிருந்து தாழம்பூ ஒன்று நழுவி பூமியை நோக்கி வந்து கொண்டிருந்தது. அதைக் கவனித்த பிரம்மா, ''நீ எங்கிருந்து வருகிறாய்?'' என்று கேட்டார்.

''நான் சிவபெருமானின் திருமுடியிலிருந்து வருகிறேன்'' என்று அது சொல்லியது. ''நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். சிவனின் முடியை நான் பார்த்ததாக நீ சாட்சி சொல்ல வேண்டும்'' என்று அவர் கேட்டார்.

தாழம்பூவும் அதற்கு ஒப்புக்கொண்டது. கீழே வந்த பிரம்மா தான் சிவபெருமானின் முடியைக் கண்டுவிட்டதாகப் பொய்யுரைத்தார். சகலமும் அறிந்த சிவபெருமான், ''நீ பொய்யுரைத்தாய், உன்னைவிடத் திருமாலே பெரியவர். உனக்குப் பூலோகத்தில் தனியாக திருக்கோயில்கள் அமையாது. பொய்ச் சாட்சி சொன்ன தாழம்பூ இனி என் சந்நிதானத்தில் ஏற்கப்படமாட்டாது'' என்று கூறினார்.

அதன் பிறகுதான் பிரம்மாவுக்குத் தெளிவு வந்தது. தன்னை மன்னித்து அருளும்படி அவர் வேண்டினார். சிவபெருமானின் அடி, முடியைத் தேடிய அந்த இடம்தான் தற்போது திருவண்ணாமலை என்று பிரசித்தி பெற்று விளங்குகிறது. தன்னுடைய நீண்ட உருவத்தைச் சுருக்கிக் கொண்டு அண்ணாமலையாக எப்போதும் அவர் அருட்காட்சி தந்து கொண்டிருக்கிறார்.

எல்லாச் சிறப்புக்களும் நிறையப் பெற்றும், பிரம்ம்மாவிடம் ஆணவம், பொய் ஆகிய துர்க்குணங்கள் இருந்தன. அதனால் ஒரு சமயம் தலையை இழந்தார். மறுசமயம் பூலோகத்தில் திருக்கோயில்கள் அமையப் பெறாது என்ற சாபத்தையும் பெற்றார். பிரம்மாவே ஆனாலும் கூட துர்க்குணங்கள் இருந்தால் அவர் தண்டிக்கப்படுவார் என்பது இதிலிருந்து தெரிகிறது.

நம்முடைய வாழ்க்கையில் ஆணவம் தலைதூக்கும் போதெல்லாம் துன்பம் என்கிற அடி விழுகிறது. திரும்பத் திரும்ப அடி விழுந்த பிறகும்கூட பலருக்குத் தெளிவு வருவதில்லை. அதனால்தான் அவர்கள் தொடர்ந்து துன்பம் என்னும் படு குழியில் விழுந்து வேதனையடைகிறார்கள். துர்க்குணத்தால் பிரம்மாவே தண்டனைகள் பெற்றார் என்றால் நாம் எவ்வளவு விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.



**பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்**

# 121 ஆவது ஆண்டு விழாக்காணும் நெளுக்குளம் கலைமகள் ம.வி.




■ வண்ணன்

1888 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி நெளுக்குள வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட தினமாகும். அன்றுதான் நெளுக்குளத்தில் இலங்கைத் திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலை ஒன்றை ஆரம்பித்த நன்நாளாகும். பப்பிஸ்ற் மிஷனரிச் சங்கம், வெஸ்லியன் மிஷனரிச் சங்கம், அமெரிக்கன் மிஷனரிச் சங்கம், திருச்சபை மிஷனரிச் சங்கம் போன்றன இலங்கையின் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த காலத்தில், வவுனியாவில் திருச்சபை மிஷனரிச் சங்கம் பல இடங்களில் ஆரம்பப் பாடசாலைகளை ஆரம்பித்தது. அதில் நெளுக்குளமும் ஒன்றாகும். இதற்கு முன்னோடியாக அமைந்தவர் அருட்திரு. அருட்பிரகாசம் மத்தியதாஸ் ஆவார். பாடசாலையின் வளர்ச்சியில் அருட்திரு. தில்லைநாதன், சத்தியநாதன், அருட்திரு. சங்கரப்பிள்ளை சோமசுந்தரம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

இலங்கைத் திருச்சபையானது மதம் பரப்புக் கல்விக்கூடங்களைக் கருவியாகப் பயன்படுத்திய போதிலும், நெளுக்குளம் பாடசாலையானது எழுத்தறிவூட்டலில் சிறந்த கலைக் கூடமாகத் திகழ்ந்தது. இந்த வழியிலே வந்த ஆரம்பகால ஆசான்களாக உடுவில் சீவரெத்தினம் வாத்தியார், செல்லையா வாத்தியார் போன்றோர் மக்களின் மனதில் இடம் பிடித்தவர்களாவர். 1901 இல் இருந்து அருட்பிரகாசம் மத்தியதாஸ் தேவாலயமாகத் திகழும் இடத்துக்குப் பாடசாலை மாற்றப்பட்டது. இங்கு சேவை குரவர்கள் மரியம்பிள்ளை அக்கா, அன்னப்பிள்ளை அக்கா, செல்லத்துரை வாத்தியார், அழகக்கோன் வாத்தியார் போன்றோர் நெளுக்குளம் மக்கள் மனதிலிருந்து அகலாத பேராசான்கள்.

> இலங்கைத் திருச்சபை ஆனது மதம் பரப்புக் கல்விக் கூடங்களைக் கருவியாகப் பயன்படுத்திய போதிலும், நெளுக்குளம் பாடசாலையானது எழுத்தறிவூட்டலில் சிறந்த கலைக் கூடமாகத் திகழ்ந்தது.

இந்த வளர்ச்சித் தொடரில் 1919 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் இப்பாடசாலை அரச உதவி பெறும் பாடசாலையாக அங்கீகாரம் பெற்றது.

சிறுகத்தொடங்கி படிப்படியாக வளர்ச்சி பெற்ற இந்தப் பாடசாலைக்கு, 1935 இல் இந்த ஊரைச் சேர்ந்த நாகமணி உடையார் ஒரு நிரந்தரக் கட்டடத்தைக் கட்டிக் கொடுத்தார். பின் திருமதி பொன்னம்மா இராஜரெட்ணம் தலைமையாசிரியர் பதவியை ஏற்றமை ஒரு முக்கிய படிக்கல்லாக அமைந்தது.

1935 -1967 வரையிலான காலப்பகுதி பாடசாலை வரலாற்றில் ஒரு முக்கிய காலகட்டமாக விளங்கியதுடன், பாடசாலையின் வளர்ச்சியில் ஒரு திருப்பு முனையாகவும் விளங்கியது. இவற்றுக்குக் களம் அமைத்து கொடுத்தவராக திருமதி பொன்னம்மா இராஜரெட்ணம் விளங்கினார். அவருடன் அந்தக் காலப் பகுதியில் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்ட ஆரம்ப கால ஆசிரியர்களிடம் காணப்பட்ட கடமை உணர்வும், சேவை மனப்பாங்கும் பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெருமளவில் உதவின எனலாம்.

பின் இலவசக் கல்விப் பாடசாலைகளை தேசியமயமாக்கல் கொள்கையின் கீழ் மாற்றம் பெற்ற பாடசாலை தற்போதைய இடத்துக்கு மாற்றப்பட்டது. சில காலம் பழைய புதிய இடங்களிலும் இயங்கிய பின் புதிய இடத்தில் நிலை கொள்ளச் செய்யப்பட்டது. தேசிய மயமாக்கத்தின் பின் புதிய இடத்தில் கனிஷ்ட உயர்தரப் பாடசாலையாக மிளிர்ந்த இந்தப் பாடசாலை 1978 இல் க.பொ.த. சாதாரண தரம் வரை கற்பிக்கும் பாடசாலையாக தரம் உயர்ந்தது.

அந்தக் கால கட்டங்களில் தொடர்ந்து சேவையாற்றிய பாடசாலை அதிபர்கள் வரிசையில், திருமதி பொன்னம்மா இராஜரெட்ணம் 1935 -1967 வரை, அ.குமார வேலு 1968-1972,திரு. மு.கார்த்திகேசன் 1972 - 1973, கி.தம்பையா 1973 -1974, திருமதி ப. சுப்பிரமணியம் 1974-1976, க.எ.மாசி லாமணி 1976 - 1979, திருமதி அருளம்மா 10.10.79 - 11.01.81, திருமதி வி. நல்லையா 12.01.81 -27.06.83 , எ.சி. தேவராசா 28.06.83 - 07.03.85, எம்.எஸ். முருகப்பா 08.03. 85 - 25.01. 1987, சி.க பால சிங்கம் 26.01. 87 - 08.02.1987, திருமதி வி. நல்லையா (பதில் அதிபர்) 29.02.87 -19.11-1988, திருமதி க. சற்குணசிங்கம் 20.11.88 - 01.04.1992, திருமதி வி. நல்லையா (பதில் அதிபர்) 02.02.92 - 30.06 -1992, திருமதி எம்.ஜெயரட்ணம் 01.07.92 -15.05.1995, திருமதி ஜ.ராஜ ரெட்ணம் 16.05.95 -18.04.1998, திருமதி ஜெயரட்ணம் 01.07.92 -15.05.1995 , திருமதி ஜ. ராஜரெட்ணம் 16.05.95 - 18.04.1998, திருமதி ஜெ.தவமனோகரன் (பதில் அதிபர்) - 19.04.98 -31.06. 1998 ,.மு.ஜெயதரன், 01.09.1998 - 10.12.2004, .க. நல்லையா (பதில் அதிபர்) 11.12.2004 - 02.01. 2005, திருமதி ப.கணேசலிங்கம் 03.01.2005 - 24.02. 2008 என்போர் அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளனர். சு. அமிர்தலிங்கம் 25.02.2008 தொடக்கம் இன்று வரை கடமையிலுள்ளார்.

(வளரும்)